உ

கடவுள் துணை.

திருவள்ளுவநாயனூர்

ஏலேலசிங்கருக்குபதேசித்த

# சோதிட விளக்கவினுவிடை

(என்னும்)

# பெரியசுந்திரசேகரம்.

முதற்பாகம்.

இஃது

மதுரை - த. குப்புசாமிநாயுடு அவர்களால்
எழுதியதை.

கே - பே. சிங்காரவேலுமுதலியாரவர்கள்ளால்
பதிப்பிக்கப்பட்டது.

வித்வசிரோமணிவிலாசம் பிரஸ்
சென்னை.
1912.

ரிஜிஸ்டர் காபிரைட்.

இதன் விலை)

உ

கணபதிதுணை. V. Srinivasachari Mylapore: 19-2-14

# ரிஜிஸ்தர் அறிவிப்பு.

இதனால் சகலமான கனவான்களுக்குந் தெரியப்படுத்துவது யாதெனில் இந்த (திருவள்ளுவநாயனார் ஏலேலசிங்கருக்குபதேசித்த சோதிடவிளக்கவினாவிடை என்னும் பெரிய சுந்திரசேகரம் முதற்பாகத்தை மதுரை. த. குப்புசாமிநாயுடு அவர்களால் எழுதியதை, யானாகிய கே. பே. சிங்காரவேலுமுதலியாரவர்களால் பொருளுதவிபுரிந்து சகல சுதந்தரத்துடன்பெற்றுக்கொண்டு கனம்பொருந்திய கவர்ன்மெண்டாரவர்களது 1909-வது வருஷத்திய 25-வது ஆக்ட் 20-வது செக்ஷன் 8-வது ரூல்சின்பிரகாரம் ரிஜிஸ்தர் காப்பிரைட் செய்திருக்கிறபடியால் என்னுடைய உத்திரவின்றி இந்நூலையெவர்களும் அச்சிடக்கூடாது.

பட்டணத்துப்பிள்ளையார் அருளிச்செய்த திருப்பாடற்றிரட்டு
ஞானார்த்ததீபவுரை. விலை ரூபா. 1 4 0

☞ எமது மேல்விலாசம்.

கே. பே. சிங்காரவேலுமுதலியார்.

நெ 30 - வடமலைமேஸ்திரி வீதி

சென்னப்பட்டணம்.

உ

கடவுள் துணை.

திருவள்ளுவநாயனார்

ஏலேலசிங்கருக்குபதேசித்த

# சோதிடவிளக்கவினாவிடை

(என்னும்)

# பெரியசுந்திரசேகரம்.

முதற்பாகம்.

இஃது

மதுரை - த. குப்புசாமிநாயுடு அவர்களால்

எழுதியதை.

கே - பே. சிங்காரவேலுமுதலியாரவர்களால்

பதிப்பிக்கப்பட்டது.


வித்வசிரோமணிவிலாசம் பிரஸ்

சென்னை.

1912.



ரிஜிஸ்டர் காபிரைட்.


இதன் விலை)

உ

கணபதிதுணை. V. Srinivasachari Mylapore: 19-2-14

# ரிஜிஸ்தர் அறிவிப்பு.

இதனால் சகலமான கனவான்களுக்குந் தெரியப்படுத்துவது யாதெனில் இந்த (திருவள்ளுவநாயனார் ஏலேலசிங்கருக்குபதேசித்த சோதிடவிளக்கவினாவிடை என்னும் பெரிய சுந்திர்சேகரம் முதற்பாகத்தை மதுரை. த. குப்புசாமிநாயுடு அவர்களால் எழுதியதை, யானாகிய கே. பே. சிங்காரவேலுமுதலியாரவர்களால் பொருளுதவிபுரிந்து சகல சுதந்தரத்துடன்பெற்றுக்கொண்டு கனம்பொருந்திய கவர்ன்மெண்டாரவர்களது 1909-வது வருஷத்திய 25-வது ஆக்ட் 20-வது செக்ஷன் 8-வது ரூல்சின்பிரகாரம் ரிஜிஸ்தர் காப்பிரைட் செய்திருக்கிறபடியால் என்னுடைய உத்திரவின்றி இந்நூலையெவர்களும் அச்சிடக்கூடாது.

பட்டணத்துப்பிள்ளையார் அருளிச்செய்த திருப்பாடற்றிரட்டு ஞானார்த்ததீபவுரை. விலை ரூபா. 1 4 0

☞ எமது மேல்விலாசம்.

கே. பே. சிங்காரவேலுமுதலியார்.

நெ 30 - வடமலைமேஸ்திரி வீதி

சென்னப்பட்டணம்.

உ

பரமபதிதுணை.

# நூன் முகம்.

பண்டொருதினத்தில் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் சிவந்த சடைகளைச்சுருட்டி மண்டலாகாரமாக் கட்டிக்கொண்டு விபூதி, ருத்ராட்சந்தரித்துக் கிருஷ்ணாசலம், ஜெபமாலை, கமண்டலம் கையிற்கொண்டு பாதக்குறடணிந்து, ஏலேலசிங்கரைப் பார்க்கவேண்டுமென்று அவர் வீடுதேடிவருவதை கண்டு, அவர் தம்மனைவியுடனே எதிர்கொண்டுபோய்ப் பத்தி விசுவாசத்துடனே பிரதக்ஷண நமஸ்காரம்பண்ணி அப்பெரியாரைக் கைலாகுகொடுத்து அழைத்துக்கொண்டுபோய் ஆசனத்தமர்த்தி அர்க்கியபாத்திய ஆசமனங்களினாலேபூசைபண்ணிக் கைகளைக் கட்டிக்கொண்டு சொல்லலுற்றார்.

என்குலகுருவா யெழுந்தருளிவந்த குருநாதரே! திவ்யகரமான காந்தியினாலே பிரகாசிக்கின்றவரே! சரணடைந்தபேரை ரட்சிப்பவரே! பிரமஹத்திமுதலிய மகாபாதகங்களையெல்லாம் நாசம்பண்ணுபவரே! தீனதயாபரரே! நிர்மலமானவரே! அறம் பொருள் - இன்பம் - என்கிற மூவகைக்கும் அறத்துப்பால் - பொருட்பால் - காமத்துப்பால் - என்று தெய்வத்திருக்குறளைத் திருவாய்மலர்ந்தருளி யிருக்கின்றீர்கள். அப்பெருநூல் தேவர்களாலும், மனிதர்களாலும் போற்றப்பட்டு வருகின்றது. அதுபோல் தமியனுக்குச் சோதிடத்தின் உண்மையைத் திருவுளம் பற்றவேண்டுமென்று பிரார்த்தித்துநின்ற ஏலேலசிங்கருக்கு ஆசிகூறி அங்ஙனமே இதைச்சொல்லத் தொடங்கினார்.

அப்பா! ஏலேலசிங்கமே? ஆதிகாலத்தில் ஸ்ரீமத்அகிலாண்ட கோடி பிரமாண்டநாயகனாய் ஆதிமத்தியாந்தரகிதனாய் ஆருத்திரக்ஷகனாய் அனைத்தையுங் குக்ஷிக்குள்வைத்து ரக்ஷித்திடும் சச்சிதானந்த சாக்ஷாத்பரப்பிரம சொரூபமாய் விளங்கும் கைலையங்கிரியில் எழுந்தருளியுள்ள உமாமகேஸ்வரனை உமா

தேவிவணங்கி ஓ சுவாமி! மானிடர்களுக்கு ஜாதகபலனைச் சொல்லுவது வருஷம் - மாதம் - தேதி - திதி - நட்சத்திரம் - யோகம் - கரணம் - முதலிய நாளும் கோளுங்கொண்டோ? அல்லது, சந்திரலக்கின ரீதியாய்க் கோசரத்தைக்கொண்டோ? என்பதை விவரிக்கத்தக்க சோதிடசாஸ்திரமுண்டோ' வென்று பார்வதிகேட்கப் பரமசிவம் திருவாய்மலர்ந்தருளலானார்.

இன்னிசைமிழற்றுங் கன்னல்மொழியாளே! ஆழிசூழுலகத் தமர்தருமானிட ரனைவர்க்கும் நமது திருக்குமாரனாகிய குமர குரு (குமாரசாமியம்) என ஒருசோதிடநூல் சொல்லியிருப் பதை நீ உணர்ந்தாயில்லைபோலும். என்று, அவற்றுள் சிலவற் றை எடுத்தோதியுள்ளார். அங்ஙனம் அச்சிவபரம் பொருளால் திருவாய்மலர்ந்தருளியதை உள்ளபடி யாம் உமக்கு ஓதுவாம் என்று கூறத்தொடங்கினார். சுபம்.

உ

கணபதிதுணை.

திருவள்ளுவநாயனார்

எலேலசிங்கருக்குபதேசித்த

## சோதிடவிளக்கவினாவிடை

(என்னும்,)

# பெரிய சுந்திரசேகரம்.

### கடவுள்வணக்கம்.

உலகமுதற்பொருளை யும்பர்க்குணர்வரிதாம்பொருளை
ஓதியவேதாகமத்தி னுட்சியினுட்பொருளை
பலகலையின்பொருள்முடிவின் முடிவானபொருளைப்
பற்றறப்பற்றியபெரியோர் பரவியவான்பொருளை
அலைதிவலைநுரைகடலி லுதித்தொடுங்குமாபோல்
அகிலாண்டமுதித்தொடுங்கு மதின்மூலப்பொருளை
இலகியசற்குருவாகி யாளாகும்பொருளை
யெங்குமாம்பரம்பொருளை யாமவணங்குவோமே. 1

அண்டபிண்டம்நிறைந்துநின்ற அயன்மால்போற்றி
அகண்டபரிபூரணத்தி னருளைப்போற்றி
மண்டலஞ்சூழிரவிமதி சுடரைப்போற்றி
மதுரதமிழோதுமகத் தியனைப்போற்றி
எண்டிசையும்புகழுமெந்தன் குருவைப்போற்றி
யிடைகலையின்சுழிமுனையின் கமலம்போறறி
குண்டலிக்குளமர்கும்போ தரனைப்போற்றி
குமரகுருதாளிணையைப் போற்றிபோற்றி. 2

செங்கதிரவன்சசி செழுந்தரணிபாலன்
பொங்குபுதனெங்கள்குரு வேபுகருமாகத்
தங்குசனியோடரவு தங்களைவணங்கத்
துங்கமிகுவாழ்வொடு சுகங்கள்பெறுவாரே. 3

இரவியிந்தாரல்புந்தி யினியபொன்சுங்கன்காரி
பரவியரர்குகேது குளிகனைப்பணிந்துபோற்றிச்
சுரர்குருமுனிவோர்சொன்ன சோதிடநூலாராய்ந்து
தரணியிலுள்ளோர்காணச் சாதகமெழுதுவோமே. 4

கார்நிறப் புகர்மு கத்தோன் கந்தவேள் கவுரி செய்யாள்
பேர்பெறு மீசன் விஷ்ணு பிரமன்வா ணியுமா சித்தர்
சீர்பதந் தெண்ட னிட்டுத் தெரிசித்துப் போற்றி செய்தேன்
ஓர்மதி யுதயங் கொண்டிங் குதித்ததைக் கூற லுற்றேன். 5

ஏலேலசிங்கர்வினா:—சோதிடமென்றா லென்ன?

திருவள்ளுவநாயனார்விடை:--மனமூடத்தையும், அஞ்ஞானவிருளையும், மயக்கத்தையும்நீக்கி, அறிவைத்தோன்றச்செய்வதும், வெளிச்சத்தைக்கொடுப்பதும், மனம் - புத்தி - சித்தம் - அகங்காரம் முதலியதா லுண்டாகும் துர்க்குணங்களை மாற்றுவதும், பயம் - பத்தி - விசுவாசாதிகளை யேற்றுவதும், ஷட்கரும ஞானங்களைத் தேற்றுவதும், இல்லிற் இனிமையாய்ச் சாற்றுவதும், பல்லுக்குப் பழமையாய்ப் போற்றுவதும், சொல்லுக்குச்சோதியாய்த் தோற்றுவதும், புல்லுக்குப்புன்மையாய்ப் புகட்டுவதும், சோதிடமெனப் பெயர்பெறும். இன்னும் இதற்கு, வாக்கு, மனம் இவ்வித விகற்பங்களுக்கும் எட்டாததாயும் சுருக்கிச்சொல்லில் இவ்வளவுதான் என்பதற்கும், அதன்பயன் இவ்வளவு என்றறிறைக்கும் எம்மாற் சொல்லத்தரமில்லையாயினும் சிறிது புகன்றோம்.

ஏலேலசிங்கர்வினா:—ஜாதகமென்றா லென்ன?

திருவள்ளுவர்விடை:—ஓர் பிரஜை ஜெனித்தகாலத்தை யெந்திரங்களாலோ, அல்லது, சாயையினாலோ அறிந்து நிதானித்து அக்காலத்துக்குப் பொருந்தியிருக்கும் இலக்கினத்தையுங் கிரகத்தையுங் குறித்து நோக்குவதேயாம்.

ஏலேலசிங்கர்வினா:—அவ்விதமாகக் கிரகம் இலக்கினங்களைஎவ்விதம் பார்க்கவேண்டும்.



திருவள்ளுவர்விடை:—ஒருவன்ஜெனித்தகாலம் மேஷரவியான சித்திரைமாதமாகில் அவ்வித சித்திரைமாதத்தில் மேஷத்திலே சூரியனிருக்கப்படு மென்றும், வைகாசிமாதமாகில் ரிஷபத்திலும், ஆனிமாதமாகில் மிதுனத்திலும், ஆடிமாதமாகில் கடகத்திலும், ஆவணிமாதமாகில் சிம்மத்திலும், புரட்டாசிமாதமாகில் கன்னியிலும், ஐப்பசிமாதமாகில் துலாத்திலும், கார்த்திகைமாதமாகில் விருச்சிகத்திலும், மார்கழிமாதமாகில் தனுசிலும், தைமாதமாகில் மகரத்திலும், மாசிமாதமாகில் கும்பத்திலும், பங்குனிமாதமாகில் மீனத்திலும் இருந்து வரப்படும். இவ்விதமாக அந்தந்த மாதங்களுக்கேற்ற இராசிகளிற் காலையிற் சூரியனுதித்து வரப்படுமென்றும் காணல்வேண்டும்.

ஏலேலசிங்கர்வினா:—இந்த மாதவிராசிகளானது முதற்றேதி முதல் கடைத்தேதிவரை இருக்கிறதானால்ஒவ்வொருதேத்திகளிலும் அதற்கு ஏற்பட்டநாழிகை பூராவும் இருக்கிறதா அல்லது, தேதிக்குத்தேதி குறைவதுண்டா? அதன்பின் தினமொன்றுக்கு எத்தனை இராசிகள் சஞ்சரிக்கும். அந்தந்த விராசிகளுக்குக் கடிகையின் அளவுகள்என்ன?

திருவள்ளுவர்விடை:—சித்திரைமாதம் முதற்றேதியிரவில் (28) நாழிகையளவிற் சனித்தால் அந்த மாதத்தின் தெய்தி எத்தனையென்றும், கடிகை விகடிகை எத்தனையென்றும்வைத்து அந்த மேஷவிராசியின சங்கையானகடிகைநாலு விகடிகைபதினைந்து. இதனை அம்மாதத்தெய்தி கடிகை விகடிகை பெயருக்குக்கொடுத்து தேதிஒன்றுக்குக் கடிகைவிகடிகை சுவாசம் இவ்வளவென்று பிரித்து செனித்ததெய்தி நாழிகை விகடிகைவரைக்கு முள்ளதேதி கடிகை முதலியதற்குக் கொடுத்தசேஷத்தையறிந்து அந்தக்கடிகை விகடிகைகலையை மேஷவிராசியின் பாக்கியாக வைத்துக்கொண்டு அவ்வித பாக்கிநாழிகை முதலியதுடன் ரிஷபம்நாழிகை ($4\frac{3}{4}$) மிதுனம்நாழிகை ($5\frac{1}{4}$) கடகம்நாழிகை ($5\frac{1}{2}$) சிம்மம்நாழிகை ($5\frac{1}{4}$) கன்னிநாழிகை (5) துலாம்நாழிகை (5)

விருச்சிகம்நாழிகை ($5\frac{1}{4}$) தனுசுநாழிகை ($5\frac{1}{2}$) மகரம்நாழிகை ($5\frac{1}{4}$) கும்பம்நாழிகை ($4\frac{3}{4}$) மீனம்நாழிகை ($4\frac{1}{4}$) ஆகவிராசி 12-க்கும் கூடியநாழிகை-60. இவ்வறுபதுநாழிகைகொண்டது ஒருதினம். இதையே இலங்கையின் இராசிமானசங்கையென்றுங் கூறப்படும்.

அதற்குதாரணம் இச்செய்யுள்.

அரிமிதுனந் தேள்மகர மஞ்சேகா லாகும்
ஆடுகயல் நாலேகா லரிவைதுலா மஞ்சே
எருதுகுடம் நாலேமுக் காலலவன் வில்லுக்
கிருங்கடிகை யஞ்சரையா மிராசிபனி ரண்டும்
விரவியசித் திரைமுதற்பங் குனிவரையீ ருக
மேடமுதல் மீனந்தம் வெய்யோன் நாளும்
பரிதிநிலை யோரையறிந் தாரு ரைக்கும்
பண்டுரைத்த நாழிகையாற் பகற்கடிகை யாமே.

என்பதாலறிக.

<table>
<tr><td>மீனம் $4\frac{1}{4}$</td><td>மேஷம் $4\frac{1}{4}$</td><td>ரிஷபம் $4\frac{3}{4}$</td><td>மிதுனம் $5\frac{1}{4}$</td></tr>
<tr><td>கும்பம் $4\frac{3}{4}$</td><td colspan="2" rowspan="2">இராசிக்குரிய<br>நாழிகைகள்</td><td>கடகம் $5\frac{1}{2}$</td></tr>
<tr><td>மகரம் $5\frac{1}{4}$</td><td>சிம்மம் $5\frac{1}{4}$</td></tr>
<tr><td>தனுசு $5\frac{1}{2}$</td><td>விருச்சி $5\frac{1}{4}$</td><td>துலாம் 5</td><td>கன்னி 5</td></tr>
</table>

ஏலேலசிங்கர்வினா:—விகடிகைக்குப்பின் சுவாசமென்றவை ஏற்பட்டனவே அவையென்ன?

திருவள்ளுவர்விடை:—சமரச சதானந்த யோகிகளின் சுவாசம் 3-கொண்டவையே ஓர் விகடிகை. விகடிகை (60) கொண்டவையே ஓர்கடிகை. கடிகை (60) கொண்டவையே ஓர் தினமொன்றுங் கூறப்படும். இக்காலத்துள் வழங்குங் கடிகாயந்திரப் பிரகாரம் கடிகை (2)-ம் விகடிகை (30) கொண்டவையே ஓர் மணிநேரமென்றும், (2) விகடிகையும் ஓர் சுவாசமும் ஓர் நிசுவாசமும் (30) அணுவும் கொண்டவையே ஓர் கடிகாயந்திரத்தின் ஓர் நிமிஷம் (மினிட்) என்றும் (9) அணுக்கொண்டவையே ஓர் ஸக்கின்டென்றுங் கூறப்பட்டிருக்கிறது.



ஏலேலசிங்கர்வினா-ஓர்பிரஜையானது வைகாசிமீ 22உ பகல்நாழிகை (30) க்குச் செனனமானல் அந்தப்பிரசையின் ஜென்மலக்கினத்தை எவ்விதங் காணல்வேண்டும்.

திருவள்ளுவர்விடை:—முற்கூறிய மாதவிராசிபின்படி வைகாசி மாதமாகையால் ரிஷபவிராசியை ஆதியாகவெடுத்து அதற்குச் சொன்னநாழிகை (4) விநாடி (45) அம்மாதம் பொத்தத்தேதி (30) ஆகவிருந்தால் அந்த முப்பதுபேருக்கு நாழிகை நாலேமுக்காலே விநாடிப்படுத்த (285) இந்த இருநூற்றியெண்பத்தைந்தையீய வந்தவைதேதி ஒன்றிற்கு விநாடி ($9\frac{1}{2}$) இதை ஜெனனத்தெய்தியாகிய முன்தெய்தி (21)ல்பெருக்க ($199\frac{1}{2}$)க்கு உதாஹரணமானபடியால் (22) வது தேதியில் அரைத்தெய்திக்குள்ள வகையைக் கூட்ட ($4\frac{3}{4}$) விநாடி. முன் (21) தேதிக்கு வந்த ($199\frac{1}{2}$) உடன் சேர்க்க ($204\frac{1}{4}$) விநாடி. இதைக்கடிகையாக்க நாழிகை-3 விநாடி-$24\frac{1}{4}$-இது ரிஷபவிராசியிற் செல்லென்றறிந்தும் மொத்தநாழிகை-4. விநாடி-45-ல் பாக்கிநாழிகை-1. விநாடி-$20\frac{3}{4}$. ஆக வைத்தும் அதுமுதல் மிதுனம்-$5\frac{1}{4}$. கடகம் $5\frac{1}{2}$. சிம்மம்-$5\frac{1}{4}$. கன்னி5. துலாம்கடிகை-5. இவ்வாறு இராசிகளின் கடிகையின் சங்கைகளை ஒன்று சேர்க்கநாழிகை-27. விநாடி-$20\frac{3}{4}$-க்குமேல் விருச்சிகலக்கினம்நாழிகை $5\frac{1}{4}$. உடன்சேர்க்க கடிகை-32. விநாடி-$35\frac{3}{4}$. ஆகையால் ஜாதகஜெனன நாழிகை-30. என்று முன்விபரித்த பிரகாரம் உள்ளநாழிகைக்குச் சென்மலக்கினம் விருச்சிகம் என காணல் வேண்டும். இவ்விதமே அவரவரும் ஜெனனமான கடிகை விகடிகைகளை நிதானித்து இலக்கினத்தை யறிய வேண்டும்.

ஏலேலசிங்கர்வினா;—இலக்கினஸ்புடம் ஒரிலக்கனம் விட்டுமற்றொரு இலக்கினமேற்குங் காலத்தில் ஒரு பிரசை ஜெனிக்கின் அதுமுன் இலக்கினமா? பின்லக்கினமா? வென்று தெரிவதற்கு எவ்வித ஆதாரமுண்டு.

திருவள்ளுவர்விடை.

ஜெனனம்வரை யுதயாதி செல்கடிகை யதனை
திசைத்தொகையி லேத்தியதைத்தினத்தொகைக்கீய்ந்ததிக
முனத்தினநேர் நடத்திலது வும்ம்தின்கோள் வருநாள்
முற்றுவது முதயதினம் மொழிவதலா திதன்மேல்
தினமருவு மிலக்குடையோன் கேந்திரக்கோள் சிரமாய்
செப்பல்லா திதுக்கேழ்செல் வனுங்கேந்தி ரக்கோள்
புனர்பதியி லிதுவுமிதற் கிரவிசுன்சேய் வதியில்
புகல்வர்முடி யென்றான்சங் தனப்பொருப்புற்றவனே.

ஒரு பிரசை செனித்தநாழிகை யறிந்து அந்தநாழிகையை நாலாற்பெருக்கி அந்நாழிகைக்கு வருமிலக்கத்தை மேஷமுதல எண்ணி முன்பெருக்கி வைத்த துகையுடன் சேர்த்துக் கொண்டு அந்த இலக்கினஞ்சரமானால் முன்கூட்டிய இரண்டுதுகையுடன் ஐந்து கூட்டியும் ஸ்திரமானால் பத்துக்கூட்டியும், உபயமானால் பதினைந்தும் இவ்விதம் கூட்டிய மூவிதத்துகைகளையும் ஒன்றுசேர்த்து 27-ல் கழித்த சேஷத்தை, பூர்வபக்ஷமானால் அசுபதி முதலாகவும், அமரபக்ஷமானால் சித்திரைமுதலாகவும், எண்ணினால் எந்த நக்ஷத்திரம் வருகிறதோ? அதற்கிணையான திரிகோண நக்ஷத்திரமாகிய ஜென்மானு ஜென்மநக்ஷத்திரங்களிலொன்றில் ஜாதகன் ஜெனனமாகி யிருக்கவேண்டும். அவ்விதம்வராவிடில் அந்த நாழிகையும் செனனலக்கினமும் வித்தியாசமென்றும், இந்தக் கணக்குப்படி எந்த நாழிகையும், இலக்கினமும் ஏற்படப்படுகிறதோ? அதே லக்கினத்தையுங் கடிகைகளையும் நிச்சயிக்கவேண்டும். அன்றியும், சந்திரனிருந்த வீட்டுக்குடையவன் இலக்கினத்துக்கு கேந்திரம்-அல்லது திரிகோணத்தி லிருக்கவேண்



டும். அல்லது சந்திரனுக்கு கேந்திரத்தி லிருக்கவேண்டும் அல்லது இலக்கினத்துக்கு குளிகன் திரிகோணம் வரவேண்டுமென்பதாம். இதனாலும் இலக்கினம் நிச்சயமறிய வேண்டியது.

ஏலேலசிங்கர்வினா:—யுகபேதமென்பதென்ன?

திருவள்ளுவர்விடை:

அற்புதமாக அம்புவிதனிலே ஆணும்பெண் பிறந்திடுமாகிற்
கெற்பதானத்தைமுகுர்த்தமதாகக்கொண்டிடவேணுமதல்லால்
உற்பவஞ்சிரசு வுதயமாம்பொழுதிலாகினும்மெழுதவேவேணும்
சிற்பமாமதனை யெழுதொணாதாகில் ஜெனித்துக்கீழ் விழுந்தபின்
[னெழுதே.

என்றதுபோல், கிரேதாயுகத்தில் கர்ப்பதானஞ் செய்ய நியமித்த லக்கினமே ஜெனனலக்கினமாகவும், திரேதாயுகத்தில் சூல்கொண்ட குறிப்பே ஜெனனலக்கினமாகவும், துவாபரயுகத்தில் ஜெனனத்தின் தோற்றமே ஜெனனலக்கினமாகவும், இந்தக்கலியுகத்தில் குழந்தை பூபதமானதே ஜெனனலக்கினமாகவும் கொள்ளுதல் முறைமையாம்.

ஏலேலசிங்கர்வினா:—திரிகோண நக்ஷத்திரமாகிய ஜென்மானு ஜென்மமும், ஒரு பிரசை செனித்தகாலத்தின் திசைகளையும் எவ்விதங்காண்கிறது.

திருவள்ளுவர்விடை:—

ஒருபிரசை ஜெனித்தநக்ஷத்திரம் அசுபதி - மகம் - மூலம் ஆனால் அப்பிரசை ஜெனிக்குங்காலம்கேதுவின்றிசையென்றும்,
பரணி - பூரம் - பூராடமானால் சுக்கிரதிசையென்றும்,
கார்த்திகை - உத்ரம் - உத்திராடமானால் சூரியதிசையென்றும்,
ரோகணி-அஸ்த - திருவோணமானால் சந்திரன்திசையென்றும்,
மிருகசீ- சித்திரை - அவிட்டமானால்செவ்வாய்திசையென்றும்,
திருவாதிரை-சுவாதி - சதயமானால்இராகுவின்திசையென்றும்,

புனர்பூசம் - விசாகம் - பூரட்டாதியானல் குருதிசையென்றும், பூசம் - அனுஷம் - உத்திரட்டாதியானல் சனிதிசையென்றும், ஆயிலியம் - கேட்டை - ரேவதியானல் புதன்திசையென்றும் பெயராகும். இவ்விதம் பார்க்கவேண்டும். ஒருவனுக்கு ஜெனனகாலத்தின்திசை சந்திரனென்றால் அடுத்ததிசை செவ்வாய் - இராகு - குரு - சனி - புதன் - கேது - சுக்கிரன் - சூரியன் என்று வரிசையாய் அறியவேண்டும்.

ஏலேலசிங்கர்வினு:—இவ்வொன்பது திசைகளில் ஒவ்வொருகிரகத்துக்கும் திசை வருஷங்களின் சங்கையென்ன.

திருவள்ளுவர்விடை:—சூரியன்திசை௵ 6, சந்திரன்திசை௵ 10. செவ்வாய்திசை௵ 7. இராகுதிசை௵ 18. குருதிசை௵ 16. சனியின்திசை௵ 19. புதன்திசை௵ 17. கேதுவின்திசை௵ 7. சுக்கிரன்திசை௵ 20. ஆக௵ 120. இவையாவது தினகரபகவானாகிய சூரியன் நூறாயிரம்யோசனை உயரத்தில் ஒன்பதினாயிரம்யோசனை அகலமாய் ஆயிரங்கிரணத்தோடு ஒற்றைச்சக்கரமுள்ளஏழுகுதிரைகள் பூட்டியதேரில் காலில்லாத அருணன்சாரத்தியம் செய்ய மேஷமுதல் மீனம்வரையில் சுற்றிவரும்போது 365-நாள் 16-நாழிகை 31-விநாடி 15-தற்பரைகொண்டது சௌரமான வருஷம் ஒன்றெனப்பெயராம். அவ்விதங்கொண்ட வருஷம்120 மகாதிசை ஒன்பதுமேயாம்.

ஏலேலசிங்கர்வினு:—ஓர் பிரஜை ஜெனனமான காலத்தில்திசையின் கெற்பசிஷ்ட மென்பதுஎன்ன.

திருவள்ளுவர்விடை:—ஜென்மநக்ஷத்திரத்தை யறிந்து அவ்வித நக்ஷத்திரம் ஜெனனமான தெய்திக்கு முன்தெய்தியிலும் அல்லது மறுதேதியிலும் எவ்வளவு கடிகை யிருக்கிறதென்றும், அன்றையத்தெய்தியில் அந்த நட்சத்திர நாழிகையையும் ஒன்று சேர்த்த தொகையையே ஆதியந்தமென்று பெயராகும். அவ்வித ஆதியந்தமென்னும் நாழிகையின் பெயருக்கு கொடுத்து நாழிகை யொன்றுக்கு இவ்வளவென்றறிந்து ஜெனனகாலத்துக்குச் செல்லான நாழிகை எவ்



வளவு வருஷ மாதங்கள் முதலியதையறிந்து அதைக்கெற்பச்செல்லாகவைத்து அத்திசையின் மொத்தவருஷத்திற்றள்ளிக்கண்ட மிச்சமான வருஷமாத முதலியதை யறிவதே திசையாகும். அதன்மேல் முன்கூறிய கிரமப்படிக்கு உள்ள திசைகளையும் அதற்குச்சொல்லியிருக்கும் வருஷங்களையுங் காணுவதும் அதற்கிசைந்த வயசுகளையுங்காணுவதே திசையாகும்.

ஏலேலசிங்கர்வினு:—புத்தியென்றும் அந்தரமென்றுஞ் சொல்லுவதென்ன.

திருவள்ளுவர்விடை:—ஒவ்வொருதிசைகளுக்கும் ஒன்பது புத்தியென்றும், புத்தியொன்றுக்குஒன்பது அந்திரமென்றும் அந்திரமொன்றுக்கு ஒன்பது சூக்ஷமாந்திர திசைகளென்றும் அறிக.

ஏலேலசிங்கர்வினு:—இவைகளின்காலங்கள் காணுவதெவ்விதம்

திருவள்ளுவர்விடை:

திசைதனைத்திசையான்மாறிச் சேர்தொகைபத்தேமாதம்
அசைவிலாதொன்றுமூன்று நாளபகாரவண்மை
இசைவுறுமாதங்கால்நாள் இனியநாட்கடிகைபாதி
அசையபகாரந்தன்னை லவாவர்சித்ரஞ்சொல்லே.

என்பதற்கிணங்க, எந்தத்திசைக்கு எந்தப்புத்தி வேண்டுமோ அவ்விதபுத்தி பார்க்கவேண்டிய கிரகதிசையின் வருஷத்தையும் எந்த திசைநாதனோ அந்தக்கிரகதிசையின் வருஷத்துக்கும் பெருக்கி 10. பத்தால்வகுக்க வந்தயீவு மாதமென்றும், மிச்சத்தை மூன்றாற்பெருக்க நாள் என்றும் கண்டவை புத்தி என்பதாகும். அந்த புத்திக்குள்ள மாதமோ அல்லது வருஷமோகண்டு வருஷமானால்௵ 1-க்கு நாள்-3-ஆகவும், மாதம் 1-க்கு நாள் $\frac{1}{4}$-ஆகவும், நாள் 1-க்கு நாழிகை-$\frac{1}{2}$-ஆகவும், நாழிகைக்கு விநாடி-$\frac{1}{2}$-ஆகவும் கண்டு துருவமாக ஏற்படுத்திக்கொண்டு அத்தொகையை

எந்த புத்திக்குள் அந்தரம்சூக்ஷமம்வேண்டுமோ அத்திசை வருஷ எண்ணாற்பெருக்கி யதைநாளாகவுமநாழிகைவிநாடியாக வைத்துக்காணுவதே அந்தரம் சூக்ஷமம் எனப்பெயராகும். இவ்விதமாகத் திசைபுத்திகளையும், லக்கினத்தையும் ஸ்திரஞ்செய்தபின் அவ்வித பிரஜை ஜெனனமானதற்கு முன்தேதிக்குமுன்னும் ஜெனனநாழிகைக்கு முன்னும் உள்ள கிரகபாதசாரங்களை கணிதத்துருவமுள்ள பஞ்சாங்கத்திற்கண்டு போட்டுக்கொள்ள வேண்டியது.

ஏலேலசிங்கர்வினா.—இராசிமண்டலம், அம்சமண்டலம் இவைகளிற் கிரகம் அடைக்கும் விதங்களின் விபரமாவதென்ன

திருவள்ளுவர்விடை:—அசுபதிமுதல் இரேவதிவரையுள்ள நக்ஷத்திரம் 27-க்கும் நக்ஷத்திரம் ஒன்றுக்குப்பாதம் நான்கென்றும் அவ்விதபாதம் ஒன்பதுகொண்டது ஒருஇராசியென்றும், அசுபதி நக்ஷத்திரம்முதற்கொண்டு $2\frac{1}{4}$-நக்ஷத்திரமாகியபாதம் 9-கொண்டது மேஷவிராசியென்றும், அவ்விதமே அசுபதிமுதல் நக்ஷத்திரம் 27-க்கும் மேஷமுதலான இராசிபனிரெண்டின் பேருக்கு நக்ஷத்திரம் 27-களை அசுபதிமுதலாக கொடுத்துக் கண்டதேவந்த இராசியில் அந்தந்த நக்ஷத்திரத்துக்கேற்ற இராசியிலிருக்குங் கிரகங்களைக் காணவேண்டியது.

இவ்விதம்போடுவதே இராசிச்சக்கரமாகும்.

அங்கிஷமாவதெப்படியெனில்.

ஒவ்வொரு கிரகத்தையும் எந்த நக்ஷத்திரத்தின் எத்தனாவது பாதத்திலிருக்கிறதென்று அறிந்து அசுபதிநக்ஷத்திரமுதற் பாதமுதல் அவ்விதஜெனனகால கிரகமிருக்கும் நக்ஷத்திரபாதம் வரையிலும் உள்ள நக்ஷத்திரங்களுடைய பாதங்களை யொன்றுபடுத்தி 12-ல் கழித்த சேஷம் எத்தனையோ? அத்தொகையை, மேஷமுதல் எண்ணிக்கண்டஇராசியில் அந்தந்த கிரகங்களையும் போடுவதே நவாம்சசக்கரமாகும். நவாம்சலக்கினங்காணவேண்டியவிதி என்னவெனில் ஒருவன் ஜெனித்த நாழிகைக்கு வரும்



இலக்கினத்தில் இத்தனைநாழிகை விநாடி செல்லென்றறிந்து அந்த ஜென்மலக்கினம் மொத்தநாழிகையான இலங்கை இராசிமானசங்கையென்ற நாழிகையை ஒன்பது பங்காக்கி அந்தச்செல்லுநாழிகை எத்தனாவது பங்காகிறதென்றறிந்து அந்தப்பங்கை மேஷ, சிம்ம, தனுசு இந்த மூன்றுலக்கினத்தில் எந்தவிராசியிலேனும் ஜெனனமானவனுக்கு மேஷமுதல் அத்தனாவது பங்குவரை எண்ணிக் கண்டவிராசியே நவாம்சலக்கினமென்றும், ரிடப, கன்னி, மகரம் இதில் எதிற்செனனமானவர்களுக்கும், மகர முதற்கண்ட விராசியே நவாம்சலக்கினமென்றும், மிதுன துலாம், கும்பம் இதில் எதிற் செனனமாகினும் துலாம் முதற்கொண்டும், கடகம், விருச்சிகம், மீனம் இவைகளில் எதிற் செனனமானவர்களுக்கும் கடகமுதற்கொண்டும் எண்ணிக்கண்டலக்கினமே நவாம்ச லக்கினமாகும்.

இதன்விபரம் நன்றாயுணர்த்தும் சக்கரம்.

அடுத்தபக்கத்தில் கண்டுகொள்க

# இராசிச்சக்கரம்போட,

| நக்ஷத்திரம். | பாதம் | ராசி. | பாகை | கலை. | இராசி. |
|---|---|---|---|---|---|
| அசுபதி | 1 | 0 | 3 | 20 | |
| ,, | 2 | 0 | 6 | 40 | |
| ,, | 3 | 0 | 10 | 0 | |
| ,, | 4 | 0 | 13 | 20 | |
| பரணி | 1 | 0 | 16 | 40 | மேஷம். |
| ,, | 2 | 0 | 20 | 0 | |
| ,, | 3 | 0 | 23 | 20 | |
| ,, | 4 | 0 | 26 | 40 | |
| கார்த்திகை | 1 | 0 | 30 | 0 | |
| ,, | 2 | 1 | 3 | 20 | |
| ,, | 3 | 1 | 6 | 40 | |
| ,, | 4 | 1 | 10 | 0 | |
| ரோகணி | 1 | 1 | 13 | 20 | |
| ,, | 2 | 1 | 16 | 40 | ரிஷபம். |
| ,, | 3 | 1 | 20 | 0 | |
| ,, | 4 | 1 | 23 | 20 | |
| மிருகசீரிடம் | 1 | 1 | 26 | 40 | |
| ,, | 2 | 1 | 30 | 0 | |
| ,, | 3 | 2 | 3 | 20 | |
| ,, | 4 | 2 | 6 | 40 | |
| திருவாதிரை | 1 | 2 | 10 | 0 | |
| ,, | 2 | 2 | 13 | 20 | |
| ,, | 3 | 2 | 16 | 40 | மிதுனம். |
| ,, | 4 | 2 | 20 | 0 | |
| புனர்பூசம் | 1 | 2 | 23 | 20 | |
| ,, | 2 | 2 | 26 | 40 | |
| ,, | 3 | 2 | 30 | 0 | |
| ,, | 4 | 3 | 3 | 20 | |
| பூசம் | 1 | 3 | 6 | 40 | |
| ,, | 2 | 3 | 10 | 0 | |
| ,, | 3 | 3 | 13 | 20 | |
| ,, | 4 | 3 | 16 | 40 | கடகம். |
| ஆயிலியம் | 1 | 3 | 20 | 0 | |
| ,, | 2 | 3 | 23 | 20 | |
| ,, | 3 | 3 | 26 | 40 | |
| ,, | 4 | 3 | 30 | 0 | |



# இராசிச்சக்கரம்போட.

| நக்ஷத்திரம் | பாதம் | ராசி. | பாகை | கலை. | இராசி. |
|---|---|---|---|---|---|
| மகம் | 1 | 4 | 3 | 20 | |
| ,, | 2 | 4 | 6 | 40 | |
| ,, | 3 | 4 | 10 | 0 | |
| ,, | 4 | 4 | 13 | 20 | |
| பூரம் | 1 | 4 | 16 | 40 | சிங்கம். |
| ,, | 2 | 4 | 20 | 0 | |
| ,, | 3 | 4 | 23 | 20 | |
| ,, | 4 | 4 | 26 | 40 | |
| உத்திரம் | 1 | 4 | 30 | 0 | |
| ,, | 2 | 5 | 3 | 20 | |
| ,, | 3 | 5 | 6 | 40 | |
| ,, | 4 | 5 | 10 | 0 | |
| அஸ்தம் | 1 | 5 | 13 | 20 | |
| ,, | 2 | 5 | 16 | 40 | கன்னி. |
| ,, | 3 | 5 | 20 | 0 | |
| ,, | 4 | 5 | 23 | 20 | |
| சித்திரை | 1 | 5 | 26 | 40 | |
| ,, | 2 | 5 | 30 | 0 | |
| ,, | 3 | 6 | 3 | 20 | |
| ,, | 4 | 6 | 6 | 40 | |
| சுவாதி | 1 | 6 | 10 | 0 | |
| ,, | 2 | 6 | 13 | 20 | |
| ,, | 3 | 6 | 16 | 40 | துலாம். |
| ,, | 4 | 6 | 20 | 0 | |
| விசாகம் | 1 | 6 | 23 | 20 | |
| ,, | 2 | 6 | 26 | 40 | |
| ,, | 3 | 6 | 30 | 0 | |
| ,, | 4 | 7 | 3 | 20 | |
| அனுஷம் | 1 | 7 | 6 | 40 | |
| ,, | 2 | 7 | 10 | 0 | |
| ,, | 3 | 7 | 13 | 20 | |
| ,, | 4 | 7 | 16 | 40 | விருச்சிகம். |
| கேட்டை | 1 | 7 | 20 | 0 | |
| ,, | 2 | 7 | 23 | 20 | |
| ,, | 3 | 7 | 26 | 40 | |
| ,, | 4 | 7 | 30 | 0 | |

# இராசிச்சக்கரம்போட.

| நக்ஷத்திரம். | பாதம் | ராசி | பாகை | கலை | இராசி |
|---|---|---|---|---|---|
| மூலம் | 1 | 8 | 3 | 20 | |
| ,, | 2 | 8 | 6 | 40 | |
| ,, | 3 | 8 | 10 | 0 | |
| ,, | 4 | 8 | 13 | 20 | |
| பூராடம் | 1 | 8 | 16 | 40 | தனுசு |
| ,, | 2 | 8 | 20 | 0 | |
| ,, | 3 | 8 | 23 | 20 | |
| ,, | 4 | 8 | 26 | 40 | |
| உத்திராடம் | 1 | 9 | 0 | 0 | |
| ,, | 2 | 9 | 3 | 20 | |
| ,, | 3 | 9 | 6 | 40 | |
| ,, | 4 | 9 | 10 | 0 | |
| திருவோணம் | 1 | 9 | 13 | 20 | |
| ,, | 2 | 9 | 16 | 40 | மகரம் |
| ,, | 3 | 9 | 20 | 0 | |
| ,, | 4 | 9 | 23 | 20 | |
| அவிட்டம் | 1 | 9 | 26 | 40 | |
| ,, | 2 | 10 | 0 | 0 | |
| ,, | 3 | 10 | 3 | 20 | |
| ,, | 4 | 10 | 6 | 40 | |
| சதயம் | 1 | 10 | 10 | 0 | |
| ,, | 2 | 10 | 13 | 20 | |
| ,, | 3 | 10 | 16 | 40 | கும்பம் |
| ,, | 4 | 10 | 20 | 0 | |
| பூரட்டாதி | 1 | 10 | 23 | 20 | |
| ,, | 2 | 10 | 26 | 40 | |
| ,, | 3 | 11 | 0 | 0 | |
| ,, | 4 | 11 | 3 | 20 | |
| உத்திரட்டாதி | 1 | 11 | 6 | 40 | |
| ,, | 2 | 11 | 10 | 0 | |
| ,, | 3 | 11 | 13 | 20 | |
| ,, | 4 | 11 | 16 | 40 | மீனம் |
| ரேவதி | 1 | 11 | 20 | 0 | |
| ,, | 2 | 11 | 23 | 20 | |
| ,, | 3 | 11 | 26 | 40 | |
| ,, | 4 | 12 | 0 | 0 | |



# நவாம்சச் சக்கரம்போட.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | அசுபதி | | மகம் | | மூலம் | 1 | மேஷம் |
| | ,, | | ,, | | ,, | 2 | ரிஷபம் |
| | ,, | | ,, | | ,, | 3 | மிதுனம் |
| சூரியனுக்குடைத்து. | ,, | புதனுக்குடைத்து. | ,, | சனியனுக்குடைத்து. | ,, | 4 | கடகம் |
| | பரணி | | பூரம் | | பூராடம் | 1 | சிங்கம் |
| | ,, | | ,, | | ,, | 2 | கன்னி |
| | ,, | | ,, | | ,, | 3 | துலாம் |
| | ,, | | ,, | | ,, | 4 | விருக்ஷிகம் |
| | கார்த்திகை | | உத்திரம் | | உத்திராடம் | 1 | தனுசு |
| | ,, | | ,, | | ,, | 2 | மகரம் |
| | ,, | | ,, | | ,, | 3 | கும்பம் |
| | ,, | | ,, | | ,, | 4 | மீனம் |
| | ரோகணி | | அஸ்தம் | | திருவோணம் | 1 | மேஷம் |
| | ,, | | ,, | | ,, | 2 | ரிஷபம் |
| | ,, | | ,, | | ,, | 3 | மிதுனம் |
| சந்திரனுக்குடைத்து. | ,, | குருவுக்குடைத்து. | ,, | இராகுவுக்குடைத்து. | ,, | 4 | கடகம் |
| | மிருகசீரிடம் | | சித்திரை | | அவிட்டம் | 1 | சிங்கம் |
| | ,, | | ,, | | ,, | 2 | கன்னி |
| | ,, | | ,, | | ,, | 3 | துலாம் |
| | ,, | | ,, | | ,, | 4 | விருக்ஷிகம் |
| | திருவாதிரை | | சுவாதி | | சதயம் | 1 | தனுசு |
| | ,, | | ,, | | ,, | 2 | மகரம் |
| | ,, | | ,, | | ,, | 3 | கும்பம் |
| | ,, | | ,, | | ,, | 4 | மீனம் |
| | புனர்பூசம் | | விசாகம் | | பூரட்டாதி | 1 | மேஷம் |
| | ,, | | ,, | | ,, | 2 | ரிஷபம் |
| | ,, | | ,, | | ,, | 3 | மிதுனம் |
| செவ்வாயுக்குடைத்து. | ,, | சுக்கிரனுக்குடைத்து. | ,, | கேதுவுக்குடைத்து. | ,, | 4 | கடகம் |
| | பூசம் | | அனுஷம் | | உத்திரட்டா | 1 | சிங்கம் |
| | ,, | | ,, | | ,, | 2 | கன்னி |
| | ,, | | ,, | | ,, | 3 | துலாம் |
| | ,, | | ,, | | ,, | 4 | விருக்ஷிகம் |
| | ஆயிலியம் | | கேட்டை | | ரேவதி | 1 | தனுசு |
| | ,, | | ,, | | ,, | 2 | மகரம் |
| | ,, | | ,, | | ,, | 3 | கும்பம் |
| | ,, | | ,, | | ,, | 4 | மீனம் |

ஏலேலசிங்கர்வினு:—சுபபாப க்ஷேத்திரங்கள் எவை.

திருவள்ளுவர்விடை:—உச்சம், சொட்சேத்திரம், மித்துரு வென்னும் நட்புஸ்தானங்களும், கேந்திரகோணஸ்தானமு மே சுபஸ்தான இடங்களும் இராசிகளுமாகும்.

பகை நீசகளும் 6-8-12-3-2-11-இவ்விடங்களும் இராசிகளுமேபாபக்ஷேததிரமாகும்.

ஏலேலசிங்கர் வினு:—எந்தெந்த கிரகங்களுக்குஎந்தெந்தராசிகள் பகை, நீசம், உச்சம், மூலத்திரிகோணம், சொட்சேத்திரம், நட்பு இவைகளைக்கூறுக.

திருவள்ளுவர்விடை.

வெய்யவன்றனக்குச்சிங்கம் வெண்மதிக்கலவன்சேய்க்குத்
துய்யவாடரிவைபுந்தி தூயபொன்னவற்குவில்லு
பொய்யில்கோல்புகரோனுக்குப் புகழ்சனிதனக்குக்கும்பம்
அய்யருண்ணிடையாய்மூலத் திரிகோணமென்னலாமே. (1)

அரிகதிர்மதிநண்டந்தனன் தனுமீனரியமால்கன்னியாழ்குஜனுக்
கெரிதகர்தேளாம்பிருகுகோலிடபம்இயல்சனிகுடங்கலையாட்சி
தெரிகதிர்தகரைமதிவிடைசனிகோல்சேய்கலைபுகர்கயல்புந்தி
வரிவிழிகன்னியந்தணன்கடகம்வரிலுச்சம்நீசமேழிடமே. (2)

எனமுதுமொழியடியிற் கண்டபிரகாரம் பார்க்க.

| கிரகங்கள். | ஆட்சி. | மூலத்திரிகோணம் | | உச்சவீடுகள் | | நீசவீடுகள். | | நட்புவீடுகள். | பகைவீடுகள். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சூரியன் | சிம்மம் | சிம்மம் | 6 | மேஷம் | 10 | துலாம் | 10 | தனுசு-மீனம் | ரிஷ-மிது-கட-கன் விருச்சி-மகர-கும்ப |
| சந்திரன் | கடகம் | ரிஷபம் | 27 | ரிஷபம் | 3 | விருச்சி | 3 | மிது-கன்-தனு-மீன | மேஷ-சிம்-துலா-ம கும்பம் |
| செவ்வாய் | மே விரு | மேஷம் | 12 | மகரம் | 28 | கடகம் | 28 | ரிஷ-மிது-கன்-துல | சிங்-தனு-கும்-மீன |
| புதன் | மிது கன் | கன்னி | 5 | கன்னி | 15 | மீனம் | 15 | மே-ரிஷ-கட-து விரு-தனு-மக-கு | சிங்கம் |
| வியாழன் | தனு மீன | தனுசு | 10 | கடகம் | 5 | மகரம் | 5 | ரிஷ-மிது-சிம்-க துலாம்-கும்பம் | மேஷ-விருச்சி |
| சுக்கிரன் | ரிஷ துலா | துலாம் | 5 | மீனம் | 27 | கன்னி | 27 | மேஷ-மிது-விரு த-மக-கும் | சிங்கம்-கடகம் |
| சனி | மகரம் | கும்பம் | 10 | துலாம் | 20 | மேஷம் | 20 | ரிஷ-மிது-கன்-தனு-மீன | கட-சிங்-விருச்சி |
| இராகு | கும்பம் | கும்பம் | | ரிஷபம் | 22 | விருச்சி | 22 | மிது-கன்-துலா தனு-மக-மீன | மேஷ-கட-சிங் |
| கேது | கும்பம் | சிங்கம் | | விருச்சிகம் | 24 | ரிஷபம் | 24 | | |
| குளிகன் | கன்னி | மீனம் | | மகரம் | | கடகம் | | மிது-துலா-தனு கும்-மீன | மேஷ-ரிஷ-சிங் விருச்சி |

பாகைவரையிலும் மூலத்திரிகோணமென்க.

உச்சராசியில் 30-பாகைவரையிலும் இந்தபாகைவரை அதிஉச்சமென்க.

நீசராசியில் 30-பாகைவரையிலும் இந்தபாகைவரை அதிநீசமென்க.

இவ்விதம் கேந்திரதிரிகோணமென்பதையும் 3-6-8-12-2 இந்தஸ்தானங்களை செனனமான லக்கினம் முதற்கொண்டுபார்த்துக்கொள்ள வேண்டியது.

ஏலேலசிங்கர்வினு:—கிரகங்களுக்குள் ஒருவருக்கொருவர் சத்துரு மித்துரு சமமெவை.

திருவள்ளுவர்விடை.

| கிரகம் | சத்துரு | மித்துரு | சமம் |
|---|---|---|---|
| சூரியன் | சுக்-சனி-ரா-கே | சந்-செ-வியா | புதன் |
| சந்திரன் | ராகு-கேது | புதன் | சூ-செ-வி-சு-சனி |
| செவ்வாய் | புத-ராகு-கேது | சந்-வியா | சுக்-சனி-சூ |
| புதன் | வியாழன் | சுக்-சனி | சூ-சந்-செ-ரா-கே |
| குரு | புத-சுக்கிரன் | சூ-சந்-செ | சனி-ராகு-கேது |
| சுக்கிரன் | சூ-சந் | புத-சனி-ரா-கே | செ-வி |
| சனி | சூ-சந்-செ | புத-சுக்-ரா-கே | வி |
| இராகு | சூ-சந்-செ | சுக்-சனி | புத-வியா-கேது |
| கேது | சூ-சந் | செ-சுக்-சனி | பு-வி-ரா |
| குளிகன் | சந்-செ | சுக்கிரன் | சூ-பு-வி-சனி-பாம் |

இன்னகிரகத்துக்கு இன்னகிரகம் சத்துருமித்துரு சமம் என்பதை இவ்விதமறிக.

ஏலேலசிங்கர்வினு:—கிரகமென்றுலென்ன.

திருவள்ளுவர்விடை:—சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், சுக்கிரன், சனி, ராகு, கேது என வொன்பதாகும்.

ஏலேலசிங்கர்வினு:—இக்கிரகங்களிற் பொதுவாகச் சுபன்யாரு அசுபன்யாரு.

| கிரகம் | வடிவம் | ஆண் பெண் | நிறம் | குலம் | ஜாதி | நோய் | திக்கு | ஸ்தானம் | அங்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சூரியன் | சதுரம் | ஆண் | சிகப்பு | க்ஷத்திரிய | கன்னடிய | இருமல் தலைவலி சுரம்நேத்திரரோகமுதான | கிழக்கு | காடு | தலை |
| சந்திரன் | வட்டம் | பெண் | வெண்மை | வைசிய | வெள்ளாள | உஷ்ணகபாதி ஜலபாதை | வடமேற்கு | ஜலம் | முகம் |
| செவ்வாய் | உடுக்கு | ஆண் | சிகப்பு | க்ஷத்திரிய | கம்மாள | ரணரோகாதி | தெற்கு | பூமி | மார்பு |
| புதன் | அறுகோணம் | அலி | பச்சை | வைசிய | கோமுட்டி | ரத்தரோகம் பிரமியாதிமூஊநோய்கள் | வடக்கு | உயர்ந்தயிடம் | இடை |
| வியாழன் | நெடும்பட்டம் | ஆண் | பொன்னிறம் | பிரமகுலம் | பிராமண | சேத்துமாதி நோய்கள் | வடகிழக்கு | நகரம் | முதுகு வயிறு |
| சுக்கிரன் | எண்கோணம் | பெண் | வெண்மை | பிரமகுலம் | சேடஜாதி | குளிர்முதலிய ஜன்னி நோய்கள் | தென்கிழக்கு | ஜலதீரம் | அரை ஆண்குறி |
| சனி | வில்வடிவம் | அலி | நீலம் | சூத்திர | சங்கர | பித்தவாய்வு | மேற்கு | புராதன நகரம் | துடை |
| இராகு | மாலை | பெண் | கருப்பு | பஞ்சம | துலுக்கர் | விஷநோய்க | தென்மேற்கு | பறைச்சே | கைகள் |
| கேது | முறம் | அலி | செங்கறுப்பு | நீசகுலம் | வேடஜாதி | விஷாதிசத்துருநோய்க | வடமேற் | பறைச்சே | கால்கள் |

மற்ற நாலு எழுபதுக்குடையவர்கள் குருவாகிஇருக்கில் முழுப் பாபுமென்றும், சுக்கிரனுகில் முக்காற்பாபமென்றும், புதனுகில் அரைப்பாபியென்றும் மற்றகிரகங்களுக்கு விசேஷசுபபலன் யென்றுங் காண்கவும். பாபிகள் (1-4-7-10)க்குடையவர்களாகில் விசேஷசுபபலத்தையும், யோகத்தையும், அவரவர்களின் திசா புத்திகாலங்களில் கொடுப்பார்களென்றும் கண்டு செப்பவும்.

முற்கூறிய திரிகோணமாவது.

ஒன்றைந்து ஒன்பதாமிடமாகும் இதில் சுபர்கள் இருந்தா லும் பார்த்தாலும் ஆதிபதிகளானாலும் மிகுந்தயோகத்தையும் சுபபலத்தையும் கொடுப்பார்களென்றும் கண்டுகூறவேண்டியது.

முற்கூறிய (1-4-7-10)என்ற இடங்களை (சென்மம்-நீர்க்கிழ் ப்பாடு-உச்சி) யென்றும் பெயராகக்கொள்க.

{ கேந்திரத்தில் நிற்குங்கிரகங்களின் விசேஷபலன் கூறுவோம். }

சூரியனும், செவ்வாயும், கேதுவும் பத்தாம்வீட்டிலிருக்கில் அதிக வலிமையும், புதன் - குரு-சென்மத்திலிருக்கில் வலியோ ராகியும், சனி - ராகு ஏழிலிருக்கில் மிகவும் பெலவான்களென் றும், சுக்கிரனும் - சந்திரனும் நான்கிலிருக்கில் அதிகவலிமையு டையவர்களென்றுங் கண்டறியவேண்டியது.

ஏலேலசிங்கர்வினு:—சவ்யாப சவ்யரீதியாய் கிரகபெலன்களின் நிர்ணயங்களெப்படி.

திருவள்ளுவர்விடை:—1-வது. சவ்வியமானுல் குருவுக்கும், பூர் ணசந்திரனுக்கும் முழுப்பெலன்; சுக்கிரனுக்கு முக்காற் பெலன. புதனுக்கு அரைபெலன். சனிக்கு முக்காற்பாபம் செவ்வாய் - பாம்பு - முழுப்பாபி - சூரியன் அரைப்பாவி யாகும்.

2-வது பூரணசந்திரன் குருமுதலியோர் கேந்திரத்திலிருக் கினும் பெலவான். இதில் செவ்வாயும், சூரியனும் பத்தாவது கேந்திரம் முழுப்பெலன். ஏழாவது கேந்திரம் முக்காற்பெலன்.



நான்காவது கேந்திரம் அரைபெலன். லக்கினகேந்திரம் காற்பெ லன். குருவும்-புதனும் லக்கினகேந்திரத்தில் முழுப்பெலன். நா லில் முக்காற்பெலன், ஏழில் அரைப்பெலன். பத்திலகாற்பெலனு கும். சனி - பாம்பு ஏழில் முழுப்பெலன். நாலில்முக்காற்பெலன் பத்தில் அரைப்பெலன். லக்கினத்தில் காற்பெலன் சுக்கிரனுக் கும் - சந்திரனுக்கும் நாலில் முழுப்பெலன். ஏழில் முக்காற்பெ லன். பத்தில் அரைப்பெலன். லக்கினத்தில் காற்பெலனுகுமென் றறியவேண்டியது. சந்திர குருவாதியர்கள் கேந்திராதிபதிகளா னுல் முதலாவது பாராவில் அவரவர்களுக்கு ஏற்பட்டமொத்தப் பெலன்கள், பாவபெலனுகக் கொள்ளவேண்டியது.

3-வது திரிகோணபெலன் கோணுதிபதிகள் சுபரானுல் முக் காற்சுபபெலன் என்றும், பாபரானுல் முக்காற்பாப பெலனுகும் சுபரிருக்கில் உத்தமம். பாபரிருக்கில் அரைபாபபெலன்களைக் கொடுப்பார்கள்.

4-வது ஸ்தானபெலன். பூரணசந்திரன் - குரு இவர்கள் கேந்திர கோணமில்லாத எட்டிலிருக்கில் முழுப்பாபி - ஆறுபதி னென்றி விருக்கினும் அதிபதியானுலும் முக்காற்பாபிகள் (2-3-12)ல் இருக்கினும் அதிபதியானுலும் அரைப்பாபிகள். 3-ல் இரு க்கில் காற்பாபிகள். இதில் சனி - குஜன் - ரவி - பாம்பு இவரிரு க்கில் மேற்கூறியதுகைகள் சுபபெலன் எனக்கண்டு கொள்ளவே ண்டியது.

5-வது முற்கூறிய சத்துருமித்துரு சமம் இவ்விதபெலன்க ளாவன:— கூடிய இரண்டுகிரகமும் சமமானுல் அவரவர்களுக் குநிற்கும். ஒருசத்துருவும் ஒருமித்துருவுமானுல், சத்துருபாவ ரானுல் சுபருடையபெலத்தில் காற்பங்கு கிரகித்துவிடப்படும் இருவரும் மித்துருவுமானுல் அவரவர்கள் சுபபெலன் அவரவற் கேயிருக்கும். சுபர் சத்துருவும் பாபர் மித்துருவானுல் அவரவர் கள்பெலனே குறைவில்லை. ஒருவர்சமனுய் அவர் சுபராகியும் ஒருவர் பகையானுல் சமபெலன் அரை பாபர்பகையும் சுபமித் திரமானுல் சுபருக்கும் பாவபெலன் காற்பங்குசேர்க்கவும். சுபர் சுபரும் மித்திரமானுல் உத்தமபெலனுகும்.

ஏலேல சிங்கர் வினா:—இந்த சுபர்கள் எந்த யிடங்களிலிருந் தால் கெட்ட பாப பலத்தைக் கொடுப்பார்கள்.

திருவள்ளுவர் விடை:—பொதுவாய் (6. 8. 12) இந்த யிடங்களிலிருக்கில் மத்திப பலனும் சமகஷ்ட பலன்களை நிரவிக் கொடுப்பார்கள்.

ஏலேல சிங்கர் வினா:—பாவர்களாகிய சனி, பாம்பு, குஜன், சூரியன் எந்த யிடங்களிலிருக்கில் நலந்தருவார்கள். எந்த இடங்களிலிருக்கில் இடரைக் கொடுப்பார்கள்.

திருவள்ளுவர் விடை:—(1. 4. 5. 9)ல் சனி பாம்பிருக்கிற் கெடுதற் பலனும் குஜன் ரவி. (8-12-2-1-7)ல் இருக்கில் கெடுதற்பலன்களைக் கொடுப்பார்கள். மற்றயவிடங்களிலிருக்கில் உத்தம சுக பலன் கொடுப்பார்களென்பது அறிக.

ஏலேல சிங்கர் வினா:—கேந்திரமாவது என்ன.

திருவள்ளுவர் விடை:—ஒருவன் ஜெனித்த லக்கின முதற்கொண்டு (1-4-7-10)ம் வீடுகளே யாகும்.

ஏலேல சிங்கர்வினா:—கேந்திரங்களுக்கு வேறு ஏதேனும் பெயருண்டா?

திருவள்ளுவர் விடை:—கேந்திரத்தை கண்டகமென்றும் சதுஷ்டயமென்றும் வடமொழிகளிற் கூறுவதுண்டு.

ஏலேல சிங்கர் வினா:—கோணமென்றாலென்ன.

திருவள்ளுவர் விடை:—பிறந்த லக்கினமுதல் (5) வது (9) வது யிடங்களென்பதாகும்.

ஏலேல சிங்கர் வினா:—ஆண் பெண்ணிராசிகள் எவை.

திருவள்ளுவர் விடை:—ஆணிராசி யென்பது மேஷம், மிதுனம், சிம்மம், துலாம், தனுசு, கும்பம் என ஆறு ராசியாகும்.



ரிஷபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம் என ஆறு இராசிகளும் பெண்ணே.

ஏலேல சிங்கர் வினா:—சரஸ்திர உபய விராசிகளென்றாலென்ன.

திருவள்ளுவர்விடை;—சரவிராசியெனில் துரிதம் என்றும்ஸ்திர விராசிகள் தாமதமாக நடக்குமென்றும், உபய விராசிகளாகில் மிதமாயுஞ் சம்சயமாகவும் சமகதியாய் நடக்கும்,

ஏலேல சிங்கர் வினா:—சரஸ்திர உபய விராசிகளெவைகள்.

திருவள்ளுவர் விடை.

வருதகர் நண்டு துலே சுறா நான்கும் மருவியசரம் விடை சங்கம்
பெருகு தேள் கும்பம் நான்குமே திரம் யாழ் பெண் தனு மீனமுமுபயம்
குருபுகர் புந்தி சுபர்மதி தேய்ந்தாற் கொடிய ராப் பானு சேய்காரி
திருகென்ச் சினந்து வருவர்களென்றார் தேர்ந்துணர் சோதிட முறையே.

சரவிராசி, மேஷம், கடகம், துலாம், மகரம், என்றும், ஸ்திர விராசி, ரிஷபம், சிங்கம், விருட்சிகம், கும்பம் என்றும், உபய விராசி மிதுனம், கன்னி, தனுசு, மீனங்களென்றும் பெயராகும்.

ஏலேலசிங்கர் வினா:—கிரக பார்வை யென்றாலென்ன.

திருவள்ளுவர் விடை:—கிரகங்கள் தாங்களிருக்கு மிடத்தினின்று எந்த யிடத்தை நாடுகிறது என்பது கருத்தாகும்.

ஏலேலசிங்கர் வினா:—எந்தெந்தக்கிரகங்கள் எந்தெந்த யிடத்தை நோக்கும்.

திருவள்ளுவர் விடை

இரவியு மதியு மாலும் வெள்ளியு மேழேநோக்கும்
பெருகிய செவ்வாய் நாலே ழெட்டது பார்வையாகும்
முருகவிழ் குழலாய் பொன்னஞ் சொன்பதேழ் முழுநோக்
[காகும்
சூரியவன்றனக்கு மூன்றேழ் தசமது பார்வையாமே- என.

குரு தானிருக்கு மிடமுதல் (5-7-9) மிடங்களையும், சனி தானிருக்குமிடமுதல்(3-7-10)வது யிடத்தையும, செவ்வாய் தானிருக்குமிடமுதல் ((4-7-8) வது யிடங்களையும் நோக்கும். மற்ற கிரகங்கள் அவரவர்களிருக்குமிடமுதல் ஏழாவது யிடத்தையே பார்க்கும். சூரியன் 5- நாள் புதன், சுக்கிரன், 7- நாள் செவ்வாய் 8- நாள் சந்திரன் 3- நாழிகை. குரு 2- மீ இராகு கேது 3-மீ சனி6-மீ முன்னதாக மற்றொரு ராசியில் பிரவேசிப்பதற்கு முன் பார்வையாம்.) சந்திரன் சனி கீழ பார்வை. சூரியன்புதன், குரு சமபார்வை. இராகு கேது சுக்கிரன், செவ்வாய் மேற் பார்வையுடையவராம். இராகு கேதுகளுக்கு யிடது பக்கமும் மற்ற கிரகங்களுக்கு வலது பக்கமும் பார்வையாம்.

அன்றியும் இதனடியிற்கண்ட கவியின் பிரகாரம் சூரியனுக்கு 3-10-ம் சுக்கிரனுக்கு 6-8-ம் இராகு கேதுகளுக்கு 3-11-ம் விசேஷ பார்வைகளென்றுகூறும் நூல்களும் சிலவுள.

செய்யுள்.

இரவி யிற்கும் ஒன்றுக்கு மூன்றேழ்பத்து
இனிய புதன் திங்களுக்கு மேழதாகும்
பரவி வருஞ் செவ்வாய்க்கு நாலெட்டேழு
பகர் வெள்ளி தனக்குமே ஆறெட்டேழு
திருவிருந்த ராஜருக்கு மைந்தேழொன்பான்
செய்ய சனி பார்வைமூன் றேழுபத்து



மருவிவருங் கரும்பாம்புக் கேதுக்கேழு
மறுமூன்றும் பதினொன்றும் பார்வையாமே.

ஆமப்பா கேதுவுக்கு நாலாம் பார்வை
ஆதித்தன் பத்தாறு அரவு மூன்று
நாமப்பா சொல்லுகிறோம் புதனேழஞ்சு
நற்செவ்வாய் பதினொன்று நாடிப்பாடு
சோமனப்பாயெட்டஞ்சு வியாழன் பத்து
சுக்கிரனுக் கொன்பதனிற் சூட்சப்பார்வை
தாயப்பா சனி யேழுக் காழ்ந்த பார்வை
தப்பாது சோதிடத்தின் தன்மைதானே.

ஏலேலசிங்கர் வினா:—பார்வையினாலென்ன பயன்.

திருவள்ளுவர் விடை:—சுபர்களில் (1) ($\frac{3}{4}$) என்ற பலமுடையோர் பாவர்களையாவது யிலக்கினத்தையாவது யிலக்கினாதிபதியையாவது பார்க்கில் அப்படிப்பார்க்குமிடமானபாவபலன் மிகவும் யோகத்தையுஞ் சுகத்தையும் ஆயுளையும் விருத்தியாகக் கொடுக்கும்.

ஏலேல சிங்கர் வினா;—பாவ பலனென்றாலென்ன.

திருவள்ளுவர் விடை:—ஒருவன் ஜெனித்த லக்கினமுதற்கொண்டு (1) முதல் பனிரெண்டாவது யிடம் வரையிற் பாவஸ்தான மென்றே பெயராகும்.

ஏலேல சிங்கர் வினா:—லக்கினமுதல் 12-வது வீடுவரைக்கும் அந்தந்த யிடங்களுக்கு என்னபெயர் அதன் பயன்கள் என்ன.

திருவள்ளுவர் விடை:—லக்கினம் என்ற உதயகேந்திரம் ஒன்றாவது வீட்டைக்கொண்டு சிரசு, கீர்த்தி, மூர்த்திகரம், தலைமைநிறம் குணம் கடவுள் வணக்கம் யோகம் அழகு கல்வி அறிவு, ஞானம், ஒளி ஆயுளுந் தேகதிடத்தையும் தெரியச் சொல்வதற்கு யிந்தமுதலாவது தானமாகும்

2வதுயிடத்தால் வாக்கு, வசித்தல், கூடல், பாத்திரம், பல்இரத்தினுபரணம், பொன்னுபரணம், பெருத்த செல்வம், பூரண பாக்கியம், மேன்பாடடைதல்முகம், அன்னதானம், பூச்செல்வம், ஜனத்தை ரக்ஷிக்குதல், தனம் குடும்பம், யோகவிஷயம், வித்தை, கமனம். மனசு, உத்தேசம், வலது நேத்திரங்களையும், தெரியச்சொல்லுமிடத்து இலக்கினத்துக்கு இரண்டாமிடமாம்.

3-வது இடத்தால் வெற்றி, ஆள் அடிமை, வைபோகம் ஸ்திரீ போகம், காதுநோய், கன்னபூஷணம் சிம்மாசனம் ஆபரணம், ஞானக்கேள்வி, சங்கீதம், உடன்பிறத்தல், பாலியம், மருந்து, வைத்தியம், வியாதி நிவர்த்தி, நிவர்த்தியில்லை, சாந்தம், போஜனபாத்திரம், உத்தியோகம், கடன் ஆயுள், வீட்டுத்தோட்டம், இடது பக்கத்து வீடு, அடிமைகளை வைத்து வேலைவாங்கும் எஜமான், இளைய சகோதரம், தைரிய வீரியத்தையும், தேவதாபக்திமுதலியவைகளையுந்தெரியச் சொல்லுமிடத்து இலக்கினத்துக்குமூன்றுமிடமாம்.

4-வது இடத்தால் அட்சரம், கலவி, வித்தை, சுகம், வியாபாரம், வீடு, பூமி, சுபகரம், பண்டம் மாற்று, மேம்பாடு, சௌக்கியம், பந்து, நிட்சேபம், தாசி, பால், பசுக்கன்று, தேவாலயம், கிராமம் பரஸ்திரீகவனம் வாசனைத்திரவியம். விருந்து, காடு, நவமணி, சினேகம், வஸ்திரம், போஜனம், கழுத்து தாய்வீடு, ஏறிகுளம், வாகன முதலியவைகளைத் தெரியச்சொல்லுமிடத்து யிலக்கினத்துக்கு நான்கா மிடமாம்.

5-வது இடத்தால் அம்மான், பாட்டன், பாட்டி, பூர்வ புண்ணியம், தமிழ்வாணர், கவி, பிரபந்தம், கெர்ப்பம், மந்திரங்கள், பிண்டியவித்தை, விதரணம், புத்தி, தபசு, உபாசனை, மந்திரி, ராஜமந்திரி, ஜீவன், மார்பு, எண்ணம், நினைத்தல், வாங்குதல், சொந்தப்படுத்தல், யோகாப்பியாசம் மறுஜன்மம், பூமிமண், தோப்பு, பள்ளிக்கூடகட்டடம், இரக்கம், பிரபு, கிளாஸ், ஜாதி, ராஜாங்கம், யோசனை, சத்



தியம், உபகாரம் பாட்டன், ஆர்ஜிதம், விற்குதல், நூலாசிரியர், வலதுபக்கத்து வீடு, அலங்காரம். காட்சி, மேன்மை, விரதம், மடம், நம்பிக்கை, உயர்பதவி, யூகித்தல், தெளிதல், ஆதரித்தல், பெருந்தன்மை, புத்திரி, புத்திரன் ஞானங்களையும், தெரியச்சொல்லுமிடத்து இலக்கினத்துக்கு ஐந்தாமிடமாம்.

6-வது இடத்தால் வட்டி வியாபாரம், கடன், இரவல், சிறை, சிறைச்சாலை, பசி. வழக்கு, கலகம், திருட்டு, வறுமை, குடும்பம் பாகம்பிரிவு, வியாபாரத்தில் கூட்டுப்பங்காளிபிரிவு, மனையாள் பிரிவு, மித்ரு முதலியவர்கள் பிரிவு, மேற்சொன்னவர்கள் பிரிந்துகூடுதல், கூட்டுப்பங்காளி சண்டை, ஞாதி, அலைதல், திரிதல், அன்ன தருமசத்திரம், தளைபூட்டுதல், பந்தப்படுத்துதல், சஞ்சாரம், காயம் புண், முதுகு, தெருக்குறடு, தெருப்பக்கம். ஒலித்தல, (இருட்டிலிருந்து பிரகாசித்துவருதல், அதாவது ஒருவருக்கும் தெரியாமலிருந்தவன், பிரசித்தியாதல் இழிந்த அந்தஸ்திலிருந்து உயர்ந்த அந்தஸ்துக்கு வருதல்) சத்ரு, ரோகம். தெண்டனைகளையும், தெரியச்சொல்லுமிடத்து இலக்கினத்துக்கு ஆறுமிடமாம்.

7-வது இடத்தால் பெண், காமம், ஆளுகை, அலங்காரம், பந்துக்கள் வரவு, யாத்திரை, ஓர் தொழிலுமின்றி யாவரும் வசியம், (பூச்சக்ரக்குடை, அரசர்குடை) பிளீடர் பின்தாரம், பின்தாரபுத்திரர், புத்திரவிரோதம், வழக்குராஜி வயிறு, கடல், தெருவு, அரசர் நட்பு, களத்திரம் விவாதம் வியாபாரத்தையும் தெரியச் சொல்லுமிடத்து யிலக்கினத்துக்கு ஏழாமிடமாம்.

8-வது இடத்தால் ஆயுள், அரசு, தரித்திரம், பயம், திகில், வதை, தெண்டம், நியாயாதிபதி, அவமானம், விலங்கு, தாலி நகை பட்டினி, அந்தரங்கம் ஆடவர் உறுப்பு, துன்பம், அழுகை, தேவதை, தோஷம், துடைப்பு, அடுப்பு, சந்தோஷம், கிரிமினல் வழக்கு, அழிவு, அன்னியதேசமோ

ட்டுதல், அன்னிதேசம்போய் சிலநாளிருத்தல், அன்னிய தேசம்போய் பிழைத்தல், கீர்த்தி, அதிகாரம், ராஜசெல்வம், பெருவாழ்வு, கொடுமை, வாழ்வு, தாழ்வு, (புடைபெயர்ச்சி, அதாவது இடம்விட்டு இடம்பிரிதல்) ஓடிப்போதல், மாறுதல், சிருஷ்டி, கைவிட்டுப்போதல், ஸ்தாபனம் பொய், மெய், பிறர்பொருள் வலிய மாய்கைக்கு வந்து சிக்கல், முயற்சி, போக்கடித்தல், கண்டெடுத்தல், புதைத்து வைத்தல், சோம்பல், புதையல், இனம், மோசம், மறதி,விதி, ஓட்டுதல், அதிர்ஷ்டம், துர் அதிர்ஷ்டம் மறைதல், மறைத்தல், நிலத்தில் உற்பத்தி, அழுக்கு, விருத்தாப்பியம் ஆபத்து, அபாண்டம், பழி, கண்டம், வெட்டுதல், ஆயுதம் இழத்தல், இழவு, கடித்தல், உபாயம், தந்திரம், நெருப்,பு ஜப்தி, வாரண்டு, அந்நியாயம், எமகண்டம், அரிகண்டம் அன்னியம், நிலம், நகைமுதலியவை அடகு, நிறுத்திவிடுதல் தடுத்துவிடுதல், நகைப்பு, இம்சை, கொலை கோபம், வனவாசம்,சுடுகாடு,ஸ்திரி புருஷாள் அந்தரங்கபாகம்,கரை அதாவது வஸ்திரம் முதலியவைகளில் படும் தோஷம், கோணல் பொந்து துவாரம் சருக்குதல் வழுக்குதல், மூழ்கிப்போதல், பண்டம் அழுகுதல், மரம் மெத்தை வண்டி குதிரைமுதலியவைகளிலிருந்து விழுதல், பிணக்கு, சூது, முழுமூடம், பாபம், திடீரெனவருதல் ஞானசித்தி, குளிகசித்தி, விழுதல், எழுதல், வாடகை (ஜாமீன் பிணை) முட்டுதல், அவஸ்யம், நிர்ப்பந்தம், (வியாபாரத்தில் வைத்த முதலெல்லாம் அழிதல், அழியோடழிதல்) தேடுதல், அபராதம், கை தூக்குதல், கைவிடுதல், நம்பிக்கை, அவநம்பிக்கை, பிரயோஜனம், அப்பிரயோஜனம், வீண்காரியம்,மோசம் வஞ்சித்தல், மரணம், கடன்களையும் தெரியச்சொல்லுமிடத்து இலக்கினத்துக்கு எட்டாமிடமாம்.

9-வது இடத்தால் செல்வம், தானியம்,பூஸ்திதி, மாந்தர் உறுப்பில் தொடை, தருமம், தருமகைங்கிரியம், பிச்சை ஜீவகாருண்யம், பக்தி போகம், அட்டமாசித்தி, ஞானம் மலை வனங்களில் சஞ்சரித்தல், யாகம், வேள்வி, பிதுரார்ஜிதம், வியாபாரச்சரக்கு ஒருவஸ்து, வாதம்சுடுதல், பிதா பாக்கிய உபதேசயோகத்தையும், தெரியச் சொல்லுமிடத்துக்கு ஒன்பதாமிடமாம்.



10-வது இடத்தால் ஜீவனம் தொழில், சுபகருமம், பாபகருமம், ராஜ்ஜியம், தன்பெயரால் நாடு நகர முண்டாக்கல் ஆக்கினை, நியாயாதிபதி, தீர்ப்பு,மரணம், தகனம், ஆசாரம் அனுசாரம், பூசை, அர்ச்சகத்தொழில் பிரார்த்தனை முழங்கால் யாத்திரை, நியாயம் தீர்க்கும் எஜமான், வேதசம்மந்தமாய் செய்யும் பெரியகாரியம், எதிர்வீடு, மண்டபம், கருமம், உத்தியோகம், வியாபாரம் பூமிகளையும், தெரியச் சொல்லுமிடத்துக்கு இலக்கினத்து பத்தாமிடமாம்.

11-வது இடத்தால் உத்தியோகத்தில் பிரமோஷன் வழக்கு அப்பீல், அதிகப்படுத்துதல், குறைக்குதல், மென்மேலும் உண்டு பண்ணுதல், புத்திரி, உறுப்பில் பாதம் நஷ்டம், லாபம் முன் சகோதரத்தையும், தெரியச் சொல்லுமிடத்து இலக்கினத்துக்குப் பதினோராமிடமாம்.

12-வது இடத்தால் மோட்சம், கட்டடம், ஞானம், இடது நேத்திரம், உப்பரிகை, மாடகூடம், மாடமாளிகை, மேன்மெத்தை, கோட்டை கொத்தளம், கல்யாணம், களிப்பு, துக்கம், மங்களவைபவம், சுபம், அசுபம், இடுப்பு, மறைவு, தூங்குதல்,கொடுத்தல், செலுத்தல், மூடுதல், முடிதல், (தூங்காமல் தூங்குதல் ஞானத்தில் சொக்குதல், லயிக்குதல் ஞானபோதம்) உத்தியோகம் விரயம் அசனசயன போகபோக்கியங்களையுங் கூறவேண்டும். இவ்விடங்களில் சுபரிருக்கில் அந்தந்த பல விருத்திகளையும் அந்தந்த இடங்களுக்குக்கண்டபலபிரயோசனங்களை உத்தமமாக அடையப்படுவனென்றும், பாவரிருக்கில் அந்தயிடத்திற் கூறியபலன் அடையாமலும் அந்தப்பலன்களாலேயே பெருந்துன்பங்களையும் அவையினால் உயிர்ச்சேதம் பொருட்சேதம் இவைகளை யடைந்து வருந்துவனென்றறியவேண்டும்.

ஏலேலசிங்கர்வினா:—காரகத்துவமென்றாலென்ன.

திருவள்ளுவர்விடை:—எந்தெந்த கிரகங்கள் என்னபலனைக்கொடுக்கவதிகாரிகளாகிறார்க ளென்றதேயாம்.

ஏலேல சிங்கர் வினா:—எந்தெந்த கிரகங்களென்ன பலனைக் கொடுக்க அதிகாரிகள்.

திருவள்ளுவர்விடை:—சூரியனுக்கு காரகங்கள் ஆத்மா, வலதுநேத்திரம், உஷ்ணம், காடுவனாந்திரந்திரிதல், கப்பல், அரசவர்க்கம், க்ஷத்திரியஜாதி, ஐரோப்பியசாதி, கன்னடியஜாதி, வீரசைவர், வெள்ளைக்காரன், மண்டைநோய், இருமல்நோய், வியாதிநிவர்த்தி, சிவப்புநிறம், கிழக்குத்திக்கு. புல்லறுத்தல், சுமையெடுத்தல், யானைப்பாகன், வைத்தியன், ஜட்ஜ், கலெக்டர்போன்ற அரசவர்க்கம், ரசவாதம், மாந்திரீகம், பயித்தியசரீரம்,வெளுத்துப்பழுத்தசரீரம், வட்டம், ருத்திராக்ஷம், சிவாம்சதெய்வம், அக்கினிபோன்றநிறம், சுவைவ்யில்காரம், ஐரோப்பியர்பாஷை, இலக்கணவித்தை, தர்க்கசாஸ்திரம், ஆண், கோதும்பை, நூல்நிசவு, கோமேதகம், சூரன், பச்சைமிளகாய், வெங்காயம், புகையிலைசிரம், ருத்திராட்சக்கடுக்கன், மரத்தின்உறுப்பில்பட்டை, மலைமரங்கள், சிவன், விபூதி, கற்பூரம், சமன், கழுத்தில் அணியும்ஆபரணம், மாணிக்கம், பாஷாணவர்க்கக்கல், பாஷாணஉயர்மணியில் சூரியகாந்தம், (சூரியகாந்தமென்பது சூரியனைக்கண்டால் நெருப்புவீசுகின்றகல்) தூரமுமல்ல சமீபமுமல்ல மத்தியம்,கிராமாதிபத்தியம், தேசாதிபத்தியம், சேனாதிபத்தியம, மண்டலாதிபத்தியம் முதலியன, பொதுவாய் பிதாவின்பலன்காண சூரியனைக்கொண்டும்,

சந்திரனுக்குக்காரகங்கள்:—சீதளம், சுரம், சிலேட்டுமம், வட்டம், வெண்மைநிறம், இடதுநேத்திரம், வடக்குதிக்கு, வெள்ளாளஜாதி, சுண்ணாம்புக்காரர்ஜாதி, ஜாதியில்மருத்துவர், நாடகர், சோதிடர், உடல், வேளாண்மை, அரசவர்க்கம், நகைவியாபாரம், படிகம்போன்றநிறம், முகம், உப்புதல், பசும்பால், முத்து, சுவையில்உப்பு, பெண், க்ஷயரோகம், பவழம், படுக்கை மெத்தைமுதலியசயனசாமான்கள், வாசனைதிரவியங்கள், ஈஸ்வரி, காசிமாலை, கடுதாசி, கண்ணாடி, தாசி, விரைவு, செங்கல், மனம், கடுக்கன், அலங்காரம், சந்தனம், புஷ்பம், தாம்பூலம், அஸ்வம், மெத்தைவீடு, சுவ[?]மிபடங்கள், முயற்சி, உவர்மண், காதிலணியும்ஆபரணம் பட்டைதீர்ந்த ரத்தினங்கள்பதித்த



ஆபரணம், பவுன்காசி, வாழைமரம், கிழங்கு, கடிகாரம், குறியர், அழகு, விக்கிரகம், அதிகதூரம், தனாதிபத்தியம், வீணை, குளிர்ச்சி, நாகரீகம், வாழைப்பழம், நகைப்பு, கன்னிகை, விசித்திரம், காளைப்பருவம், கன்னிப்பருவம், பல், குங்குமம், உபசாரம், உப்பு, அரிசி, மாமிசம், பட்டு, சிவப்புரத்தினம், சவுளி, வேளாண்மை, நகைவியாபாரம், சுண்ணாம்பு, இந்தவியாபாரத்தொழில், அரசவர்க்கத்தொழில், பூமாலை, ஜலம், தாலாட்டுதல், சீராட்டுதல், கொஞ்சுதல், முத்தமிடுதல் முதலியன. பொதுவாய் மாதாவின்பலன்காண சந்திரனைக்கொண்டும்.

செவ்வாய்க்குக்காரகங்கள்:— வெற்றி, கரயம், சத்துரு, ஆஸ்பத்திரி ஆயுதங்கள், ரத்தம், பராக்கிரயம், போர்வீரன், செட்டிஜாதி, கம்மாளஜாதி. வடுகஜாதி, ரெட்டிஜாதி, குயவர், வாணியர், சித்திரக்காரர், கல்தச்சன், செம்புநிறம், விதவை, விபசாரம், சூலை, புண்ணாக்கு, மாரகத்துக்குஅதிசீக்கிரகாரகன், இரத்தம்போன்றநிறம், தோப்பு, நெருப்பு, காமசாந்தியம், சியான்முதலியதாழ்ந்தநிறசிகப்புகள், சண்முகக்கடவுள், தெலுங்குவித்தை, சுவையில்விருவிருப்பு, சமையல்தொழில், பலகாரக்கடைமுதலிய அக்கினிமுகத்தொழில், போலீஸ்உத்தியோகம், பட்டாளஉத்தியோகம் சிலம்புவித்தை, சிலம்பகொட்டடி உபாத்தியாயர், வஸ்தாதி, சண்டை, வழக்கு, கலகம்,வெட்டுதல், சுரம், ஜன்னிபேதி, மாந்திரீகம், சூனியம், தென்கிழக்குதிக்கு, துவரை, கடன், மாந்தர்கற்பு, சத்தியம், ஆண், கோபம், அக்கினிவிநட்சம், மீசைவீசை, பயிர்த்தொழில், ரசவாதம், நீர்ச்சுருக்கு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, முன்கோபம், தூஷிக்க படபடப்பாய் அவசரமாய்வார்த்தைபேசல், தடிமுதலிய ஆயுதங்களால்அடித்தல், வண்ணார்வேலைசெய்யும்உழமண் வைப்புபவழம், அதாவது செம்பவழம், பவழம், கழுத்திலணியும் ஆபரணம், புன்செய்பயிர், பலமுள்ளவிருக்ஷம், விருக்ஷஉறுப்பில்பூ, ரோகம், பூமி, மார்பு, குறியர், சேனாதிபத்தியம், எலும்பு, செம்பு, தூரமுமல்ல, சமீபமுமல்ல, மத்தியம், செப்பன், ரோஜாவர்ணம், சாயம்போனசிவ

ப்பு, தேயுபூதம், அணிவகுத்தல், சஞ்சாரம், பகை, பிரிவு, கூட்டுதல், ஞானி, மூவறிவுயிர் முதலியன. பொதுவாய சகோதரம் பூமிபலன்காண செவ்வாயைக்கொண்டும்.

புதனுக்குக்காரகங்கள்:—அக்ஷரம், எழுதுதல், சொல், பேச்சு, தூதுவன், தேர்ப்பாகன், வைக்கீல், ராஜி (வழக்குராஜி) பச்சைநிறம், இலைவியாபாரம், நவரத்தினத்தில்பச்சை, அவிரி, நீலச்சரக்கு, பச்சைப்பயறு, விஷ்ணு, சகலவித்தை தமிழ்வித்தை, வியாபாரம், கணக்கு, கணக்குத்தொழில், குமஸ்தாவேலை, கோமுட்டிஜாதி, நட்டுவன், கூத்தாடி, பூசாரி, பொதுவில்வைசியன், உபாத்தியாயர், பித்தம், தேகவீக்கம், வாயு (பூதம்) அலிக்கிரகம், மந்திரி, யோசனை தென்மேற்குதிக்கு, சுவையில்துவர்ப்பு, கொற்றன், பட்டப்பலகை, ரூல்தடி, சிற்பத்தொழில், பிரர்துஎழுதுந்தொழில், ஜோஸியம், ஜோஸியத்தொழில், சித்திரம்எழுதல் புழுதிமண், மரகதமணி, காதில்அணியும் ஆபரணம், கோழைமனம், அச்சுக்கூடம், முள்ளின்றியசெடி, நாட்டுமரம் விருக்ஷிகஉறுப்பில், இலை, படம்எழுதுதல், முதுகு, நெடியர், ஈரறிவுயிர், முதலியன, வித்தைபுத்தி, அம்மான் தாய் வழிப்பலனைக்காண புதனைக்கொண்டும்.

குருவுக்குக்காரகங்கள்:—வேதம்ஓதுதல், வேதாத்தியாயனம், புராணபிரசங்கம், உபதேசம், உபாத்தியாயர், வைக்கீல், அரசவர்க்கம், யாத்திரை, தேவாலயம், யோகாப்பியாசம், மஞ்சள்நிறம், பொன்னிறம், ஆண், புஷ்பராகம், பொன், வைரம், தெற்குதிக்கு, சிவாம்சம், பிராமணசாதி, சமஸ்கிருதவித்தை, காசவியாதி, சீதபேதி, வயிறு, ஜீவன், மந்திரி, வழக்குராஜி, ஆசாரம், சீலம், வைதீகம், சுவையில்இனிப்பு கரும்பு, வாழை, தென்னை, சுகம், கனிவர்க்கம், சுபகர்மம், பூணூல், கழுத்தில்அணியும் மணிகள், பொசிப்பு, மகான், தேவதை, காசுக்கடைவியாபாரம், பூச்சக்கிரக்குடை, சந்தோஷம், ஆஸ்பத்திரிகட்டடம், சர்க்கார்கட்டடம், கெர்ப்பம், கீர்த்தி, உபகாரம், இரக்கம், சமணன், சைவன், ராஜாங்கம், கழுத்திலணியும்ஆபரணம், பொன்மணி, மணிமாலை



மணிகளிழைத்த பதக்கங்கள், பொன்னுருக்குமணல், பொன்மணல், விருக்ஷவுறுப்பில்பழம், நெடியர், அழகு தூரம், வேள்வியாகம், தனுதிபத்தியம், கிராமாதிபத்தியம் தேசாதிபத்தியம், மண்டலாதிபத்தியம், வெல்லம், நாணயம், நம்பிக்கை, தாட்.சண்யம், பிருதிவிபூதம், தெய்வபக்தி உபசாரம், வாக்கு, தருமம், விரதம், பிரபு, அர்ச்சகத்தொழில், தேவாலயயாத்திரை, கற்பூரச்சுடர், சாம்பிராணிப்புகை, மடம், விபூதியணிதல், தெய்வதியானம், ஊதுவத்தி ஆளுகை, வியாபாரம், பிரமதேவன், எலுமிச்சைபழம், அரசமரம், சத்தியம், அரசு, செங்கோல், ஐயறிவுயிர், உத்தியோகத்தலைவன், முதலியன, பொதுவாய் புத்திரபலன், தனபலன், யோகபலன்காண குருவினுலும்,

சுக்கிரனுக்குக்காரகங்கள்:—சங்கீதம், சமஸ்கிருதவித்தை, மங்களங்கள், வைபவங்கள், சல்லாபம், உல்லாசம், ஜம்பம், டம்பம், காமம், களிப்பு, துக்கம், சுபம், அசுபம், வாகனம், மனை, வீடு, மாடகூடம், உப்பரிகை, குடும்பம், கட்டடம், பரிமளம், முலைப்பால், வெண்மைநிறம், மொச்சைக்கொட்டை, மணிலாக்கொட்டை, கள்ளு, சாராயம், சவுளி, தறியில்எறியும்நாடா, சேடஜாதி, வெள்ளாளசாதி, இடையன், பூவைசியன், வண்ணான், ரெட்டிஜாதி, வஸ்திரம், சந்தனம், புஷ்பம், தாம்பூலம், பூஸ்திதி, பிதுர்ஆர்ஜ்ஜிதம், ஸ்தாலம், இளமை, மேற்குதிக்கு, பளிங்கு, வைரம், புஷ்பராகவகைகளில் அதிகபளபளப்பானவைகள், லட்சுமிதேவதை, பட்டப்பெயர், அதிர்ஷ்டம், கீர்த்தி, கட்டி, கொப்பளம், அஜீரணபேதி, சொந்தப்படுத்துதல், பால்போன்றநிறம், பூஷணம் வெண்கலம், தேங்காய், கரும்பு, பால்பசுவிர்த்தி, சயனம், சுவையில்புளிப்பு, சவுளிவியாபாரம், கள்ளு, சாராயம், வியாபாரம், நெல்வியாபாரம், மணிலாக்கொட்டைவியாபாரம், தேங்காய்வியாபாரம், அன்னவிக்கிரையம், வெண்கலவியாபாரம், முத்துவியாபாரம், பால்தயிர்வியாபாரம், வெள்ளிவியாபாரம், மாட்டுவியாபாரம், பலகாரவியாபாரம், குதிரை, யானை கொடிடால்விருது, டமாரம், பேரிகைமுதலியவாத்தியங்கள், பரிசுபெறும்தோடாக்கள், கொம்பூதல், சினேகம், சங்கீதத்

தொழில், பாடகத்தொழில், மெத்தைவீடு, மேன்மெத்தை, மாடமாளிகை கூடகோபுரம், முச்சியர்தொழில், வெள்ளி, போஜனம், பாக்கியம், சம்பத்து, செல்வம், லாபம், நஷ்டம், தானியம், வாழ்வு, தாழ்வு, கூட்டம், வைப்புமுத்தென்னும் செய்முத்து, பளிங்குமணல், வைடூரியம், தலையில்அணியும் ஆபரணம், நன்செய்ப்பயிர், வெள்ளிஆபரணம், நாட்டுமரம், விருட்சஉறுப்பில்காய், ஸ்திரீபுருஷாள், அந்தரங்கபாகம், செழிப்பு, சமன், அபிநயம், பரியாசம், போகசரசங்கள், சமீபம், வீணை, நெய், அதிகப்படுத்துதல், குறைக்குதல், நெல் மென்மேலும்உண்டுபண்ணுதல், நிறைந்தசந்தோஷம், அப்பு பூதம், நகைப்பு, விகடகவி, விசித்திரம், திருச்சூரணம், நான்கறிவுயிர், லௌகீகம், சத்திரம், சாமரம்,ஆலவட்டம், வெண்சாமரம், அட்டமங்கலம், இருமல்ரோகம், சங்கீதநடனகச்சேரி, கேளிக்கை, வள்ளல், புஸ்தகம், சுமங்கிலி முதலியன. பொதுவாய் களத்திரம், வாகனம், பரஸ்திரி,லோலத்துவலீலை சுகபலன்களைக்காண சுக்கிரனைக்கொண்டும்.

சனிக்குக்காரகங்கள்:—புராணகாவியங்கள், அடிமை, அசுபகர்மம் மந்தம், மறதி, இரும்பு, அனாசாரம், கறுப்புநிறம், வடமேற்குதிக்கு, அலிக்கிரகம், இயமன், எள்ளு, நீலம், திருட்டு,மயிர் மரவேலை, வாள்வேலை தகனம், பாழாக்குதல், சாவுக்கழுதல், பண்டம் - அழுகை - ஜன்னி - இசுவு - கைகால்முடக்கம், வாயுவுசம்பந்தம் - வாயு - வாதம் - விரையம் - அபகீர்த்தி அபாண்டம் - பொய் - பயிர்த்தொழில் - கூலிவேலை - ஆட்டு வியாபாரம் - எள்ளுஎண்ணெய் - பருத்திவியாபாரம் - விலங்கு - சங்கம்வாங்கித்தொழில் - சூதாட்டம் - தோல்ஷாப்பு தற்கொலை - பிறர்கொலை - சிருஷ்டி - அவமானம் - சோம்பல் சூத்திரரில்தாழ்ந்து சுமக்கப்படுகிற இழிகுலம் - சங்கரஜாதி, செம்மார் இலைவாணியர் (அல்லது) சேனைக்குடையர் - துன்பம் - இரும்புருக்குமணல் - கருநகல் - களிமண் - கையில் காலில்அணியும் ஆபரணம் - முட்செடிகள் - பனைமரம் - விருட்சவுறுப்பில்வேர் - மாந்தர்உறுப்பில்துடை - குறியர் - சுவையில்கைப்பு - அதிகசமீபம் - ஜப்தி - வாரண்டு - அவஸ்வியம் நிர்ப்பந்தம் - தரகுவியாபாரம் - முடம் - எண்ணெய் - ஆகா



யம், பூதம், விஷ்ணு, ஜாமீன்பிணை, மூச்சு, நீலச்சரக்குவியாபாரம், நிஷ்டைதவம், மரவியாபாரம், துருபிடித்தல்,. முடவன் திருத்தமில்லாதவாக்கு, விஷ்ணுஅம்சதெய்வம், ஓரறிவுயிர், சோம்பல்முதலியன பொதுவாய் ஆயுசுஜீவனம் கடன்களைக்காணசனியைக்கொண்டும்.

இராகுவுக்குக்காரகங்கள்:—போகபோக்கியம், ஸ்திரீபோகம், திருட்டு, கூரைவீடு, மேல்மெத்தை, மாடமாளிகை, கோட்டைகொத்தளம், ஒண்டுகுடி, ஒதுக்கிடம்,வழிப்போக்கு அற்பவார்த்தை, அபாண்டம், பொய் சத்தியம் திகில் துஷ்டத்தனம் பராக்கிரமம் பயங்கரமானஆயுதங்கள் பெண் கறுப்புநிறம் உளுந்து வரகு கேழ்வரகு எருமைமாடு மாணிக்கம் கோமேதகம் விஷம் முரட்டுத்தனம் பிடிவாதம் நெய்யும்தறி சேடஜாதி கைக்கோளஜாதி தாடி துலுக்கபாஷை துலுக்கர்முதலியமதபேதகஜாதிவேடன் வில்லியன்இருளன் நீச்சர்முதலிய தாழ்ந்தஜாதி வெள்ளைக்காரன் ஐரோப்பிய ஜாதி ஆங்கிலேயபாஷை பாம்பாட்டுபுலையர் பண்டாரம் கள்ளர் செம்படவர் குண்டகன் கோளகன் அநுலோமன் பிரதிலோமன் ஓட்டுதல் தூரம்ஓட்டுதல் மகாவிரைவு விலங்கு அழுக்கு வடகிழக்குதிக்கு சங்கம்வாங்கித்தொழில் வழிப்பறித்தல் அரசவர்க்கம் செப்பிடுவித்தை ஜாலவித்தை பகல்வேஷம் தொம்பன் ஒட்டன்வித்தை செம்படவத்தொழில் மணிமந்திரஔஷதம் தூறுவாரும்தொழில் முத்துவாரும்தொழில் காடுவனாந்திரம்மலை புண்ணியம் கங்காஸ்நானம் ஈயம் ஈயபாத்திரங்கள் மெல்லிதுவார்த்தகம் விருத்தாப்பியம் கிழத்தன்மை காளிதேவதை சூதாடுந்தொழில் மதுமுதலியமயக்கவஸ்துக்கள் மதுமுதலியபானம் தோல்ஷாப்பு மாலை தற்கொலை பிறர்கொலை சுறுசுறுப்பு சொறசொறப்பு காடுமுரடு சுவையில்கைப்பு கட்டி பேதி அம்மை பக்கப்பிளவை துடைவாழை விஷகடி கண்டமாலை கருமேகம் குட்டவியாதிஸ்திரீகளுக்குதேவதைபயம்ரத்தம்முறிக்குதல் நிலம் நகைமுதலியஅடகு பாட்டன்ஆர்ஜ்ஜிதம் பூர்வம்வியா

திமுதலியகெட்டபலனை அதிகப்படுத்துதல் மென்மேலும்
உண்டுபண்ணுதல் இரக்கம் பொருள்முதலியவைவலியவரு
தல் அதிர்ஷ்டமாய்வருதல் ஸ்தானப்பிரஷ்டம் குட்டிச்சுவர்
ஆலியாக்குதல் தரித்திரம், அழுக்குவஸ்திரம், கிழிந்தவஸ்
திரம், கந்தைத்துணி, பசிபட்டினி, பிச்சையெடுத்தல்,
பொருள்முதலியவற்றைஇழத்தல், ஜப்தி, வாரண்டு, காட்
டிக்கொடுததல், வஸ்திரத்தில்கறை, தோஷம், நோக்காடு,
நெடியர், பயம், ராஜாங்கபயம், துன்பம், துக்கம், பெரிய
துக்கங்கள், ஜெயில், கொலை, ராட்சசபலம், மனோசிலை,
கருங்கல், வைரம், கையில்காலில்அணியும் ஆபரணங்கள்,
காதிலணியுங்குருடு, மூங்கில், முட்செடிகள், பனைமரம்,
விருட்சஉறுப்பில்கொடி, அவமானம், தூர்நீர், தோல், மாந்
தர்உறுப்பில்கால், பாசாங்கு, பகடி, பரியாசம், போகசரச
ங்கள், முகஸ்துதி, தொங்குதல், அதிகதூரம், (ஏற்றிஇறக்
குதல்) அதாவது, (யோகத்தில் ஆகாயத்தில்ஏற்றி பாதாளத்
தில் தள்ளுதல் விரைவில்ஏற்றி திடீரெனத்தள்ளுதல்) கிரா
மாதிபத்தியம், தேசாதிபத்தியம், சேனாதிபத்தியம், மண்ட
லாதிபத்தியம், அபரிமிதமானலாபம், அபரிமிதமானநஷ்டம்
அபரிமிதமானசுபவிரையம், அபரிமிதமானவீண்விரையம்
எல்லையில்லாக்களிப்பு, எல்லையில்லாத்துக்கம், மகாபெரிய
காரியத்தில்வெற்றி, ஷிகாரியத்தில்தோல்வி, எல்லையில்லா
செல்வம், அளவில்லாததனம், ஏகசக்கிராதிபதி, பரதேசி
யாதல், காவிவஸ்திரம் ருத்ராட்சந்தரித்து பண்டாரமென
ப்பெயர்வைத்து பிச்சையெடுக்கிறசோம்பேறி, ருத்திராட்
சமாலை, கெக்கலிகொட்டுதல், கோரரூபம், அந்நியாயம்,
அந்நியாயவழியில்விரையம், மணிலாக்கொட்டை, வேடிக்
கைவிநோதம், வேஷம்போடுதல், மாறுவேஷம், ஒருவனைப்
போல்நடிக்குதல், தற்புகழ்ச்சி, தப்பபிப்பிராயம். ஊருக்கு
ஓமல் உள்ளொன்றுமில்லையெனல், ரகசியம், தாலிநகை
மாலை, கயிறு, இன்றியமையாமை, அதிகநிர்ப்பந்தம், நரை
மயிர், அச்சுஎழுத்து, தரகுவியாபாரம், விகடகவி, நீல்ச்சா
க்குவியாபாரம், கிழிதல், ஊசி, தையல்வேலை, வியாபாரத்
தில்வைத்தமுதலெல்லாம் அழிதல், அடியோடழிதல், பேய்



பிசாசு, மாந்திரீகம், அணிவகுத்தல், மகாபிரபு, காரியத்
தைநிறுத்தல், வேகமாய்ஓடுதல், ஒருவனைக்கண்டுமறைதல்
வஞ்சித்தல், கோள்சொல்லுதல், ஒட்டுக்கேட்டல், சந்தோ
ஷம்தூன்பத்துக்கு அசையாமனம், பொறுமை, இருவரை
யும் மூட்டிவிட்டுவேடிக்கைபார்க்குதல், இடுமுடுக்குமனை,
வால்வீச்சுமனை, கிணறு, பாதாளம், புதையல், தனம், நெடு
ங்காலம் பாழாய்க்கிடக்குதல், பாத்தியம்ஏற்படாதபடிசெ
ய்தல், ஒருவனைஊர்நகைத்தல், தானேமாட்டிக்கொள்ளுதல்
துருபிடித்தல், வியாதிநிவர்த்தி, ஆபாசவார்த்தை, நெருப்
புப்புகை, தொத்துதல், புரளுதல், உருளுதல், மூழ்கிப்போ
தல், தாழ்ந்தஜாதி நீச்சஜாதி ஸ்திரீசம்பந்தம், திருடர்அடி
த்துக்கொலைசெய்துஇறக்குதல், தூர்ப்புத்திகேட்குதல், தா
ழ்ந்தவரோடு சினேகம், குறும்புப்பெயர்அமைதல், சறுக்கி
விழுதல், வழுக்கிவிழுதல், மாடுமுட்டல், அடங்காத்தன்மை
வாயடித்தல் கையடித்தல், வீரசைவர், வீரசைவமார்க்கத்
தார், மார்பில் கையில் அணியும்செச்சை, புரளிபண்ணுதல்
ஜீவவதை மனோவதை, தன்இனத்துக்குதாழ்ந்த இனத்தில்
பெண்கொள்ளல் கொடுக்கல், (குண்டகன் - கோளகன் -
அநுலோமன் - பிரதிலோமன்) வீணையில்நரம்புகள், தேக
த்தின்நரம்பு, இரட்டைப்பிள்ளை, குலுங்கநகைத்தல், எதி
ரொலி, பேரொலி, வாதம்சுடுதல், அன்னியன், குருடு, செ
விடு, ஊமை, யித்திரபேதகம், பலாப்பழம், பந்தியம்ஜெயித்
தல், தெத்துவாய், இரவல்கொடுத்தல் வாங்கல், ஆபத்து,
முத்துக்கொட்டை, ஏறுதல் இறங்குதல், விசித்திரம், மென்
மேலும் உண்டுபண்ணுதல், கிணற்றில்விழுதல், சுவீகார
புத்திரன், வளர்ப்புபிள்ளை, சரசுவதி, கூலிவேலை, தேவால
யகட்டடரூபம், பாட்டன்பாட்டி, ஸ்திரீதேவதை, எல்லை
தேவதை, பயங்கரதேவதை, தெண்டம், மூலிகை, ஆபாசம்
கட்டடஉறுப்பில்ஓடு, மதப்விட்டுமதம்போதல், ஜாதிபிரஷ்
டம், மகாவித்துவான்முதலியன. பொதுவாய் தரித்திரம்
பகை இராஜதெண்டனை சீவனவிரோதபலனைக்காண இரா
குவைக்கொண்டும்,

கேதுக்குக்காரகங்கள்:—நிராசை, மோட்சம்,கூரைவீடு, கல்
வீடு, ஒண்டுகுடி, ஒதுக்கிடம் வழிப்போக்கு, அபாண்டம்
திகில், பராக்கிரமம், பயங்கரமானஆயுதங்கள், மாணிக்கம்,
கோமேதகம், விஷம், நெய்யும்தறி, சேடஜாதி,கைக்கோள
ஜாதி, தாடி, துலுக்கபாஷை, துலுக்கர்முதலிய மதபேதக
ஜாதி, வேடன், இருளன், நீச்சர்முதலியதாழ்ந்தஜாதி, ஒட்
டுதல், தூரம்ஓட்டுதல், மகாவிரைவு, விலங்கு, அழுக்கு,
வடகிழக்குதிக்கு, அரசவர்க்கம், செம்படவத்தொழில்,
மணிமந்திரஔஷதம, தூறுவாருந்தொழில், முத்துவாருந்
தொழில், காடுவளைந்திரம், மலை,புண்ணியம்,கங்காஸ்நானம்
ஈயம் ஈயபாத்திரங்கள், மெல்லிதுவார்த்தகம், விருத்தாப்பி
யர், கிழத்தன்மை, மதுமுதலியமயக்கவஸ்துக்கள், மதுமுத
லியபானம், தோல்ஷாப்பு, மாலை, தற்கொலை, பிறர்கொலை,
சுறுசுறுப்பு, சொறசொறப்பு, கரடுமுரடு, சுவையில்கைப்பு,
கட்டி, பேதி, அம்மை, பக்கப்பிளவை, துடைவாழை, விஷ
கடி, கண்டமாலை, ஸ்திரீகளுக்குதேவதைபயம், ரத்தம்முறிக்
குதல், நிலம்நகைமுதலியவைஅடகு, பாட்டன்ஆர்ஜ்ஜிதம்,
பூர்வம், வியாதிமுதலியகெட்டபலனை அதிகப்படுத்துதல்,
மென்மேலும்உண்டுபண்ணுதல், இரக்கம், பொருள்முதலி
யவைவலியவருதல், அதிர்ஷ்டமாய்வருதல், ஸ்தானப்பிரஷ்
டம், குட்டிச்சுவர், காலியாக்குதல், தரித்திரம், அழுக்குவஸ்
திரம், கிழிந்தவஸ்திரம், கந்தைத்துணி, பசிபட்டினி, பிச்
சையெத்தல், பொருள்முதலியவற்றைஇழத்தல், ஜப்தி, வா
ரண்டு, தோஷம், நோக்காடு, வெள்ளைக்காரன், ஐரோப்பி
யர்ஜாதி, ஆங்கிலேயபாஷை, பாம்பாட்டுபுலையர், பண்டா
ரம், செம்படவர் பயம், இராஜாங்கபயம், துன்பம் துக்கம்
பெரியதுக்கங்கள், ஜெயில், கொலை, ராட்சசபலம்,மனோசிலை
வைரம், கையில்காலில்அணியும் ஆபரணங்கள், காதிலணியு
ங்குருடு, மூங்கில், முட்செடிகள், விருட்சஉறுப்பில்கொடி,
அவமானம், நீச்சஜாதி, தூர்நீர், தோல், அதிகதூரம், மகா
பெரியகாரியத்தில்வெற்றி, ஷிகாரியத்தில்தோல்வி, பரதே
சியாதல், காவிவஸ்திரம் ருத்ராட்சம்தரித்து பண்டாரமெ
னப்பெயர்வைத்து பிச்சையெடுக்கிறசோம்பேறி, ருத்திரா



ட்சமாலை, மணிலாக்கொட்டை, ரகசியம், தாலிநகை, மாலை;
கயிறு, இன்றியமையாமை, அதிகநிர்ப்பந்தம், நரைமயிர்;
அச்சுஎழுத்து, தரகுவியாபாரம், நீலச்சரக்குவியாபாரம்,
கிழிதல், ஊசி, தையல்வேலை, பேய்பிசாசு, மாந்திரீகம்,அணி
வகுத்தல், காரியத்தைநிறுத்தல், வேகமாய்ஓடுதல், சந்தோ
ஷம், துன்பத்துக்குஅசையாமனம், இடுக்குமுடுக்குமனை,
வால்வீச்சுமனை, கிணறு, பாதாளம், நெடுங்காலம்பாழாக்கி
டக்குதல், துருபிடித்தல், வியாதிநிவர்த்தி, நெருப்புப்புகை
மூழ்கிப்போதல், சறுக்கிவிழுதல், வழுக்கிவிழுதல், மாடுமுட்
டல், வீரசைவர், வீரசைவமார்க்சத்தார் மார்பில்கையில்
அணியும்செச்சை தன்இனத்துக்குதாழ்ந்தஇனத்தில்பெண்
கொள்ளல் கொடுக்கல், பிள்ளை, எதிரொலி, பேரொலி,வாத
ம்சுடுதல், அன்னியன், குருடு, செவிடு; ஊமை; பலாப்பழம்
பர்தியப்ஜெயித்தல்; இரவல்கொடுத்தல் வாங்கல்; ஆபத்து
பெரியஆபத்து; ஏறுதல் இறங்குதல்; மென்மேலும்உண்டு
பண்ணுதல; கிணற்றில்விழுதல்; சுவிகாரபுத்திரன்; வளர்ப்
புபிள்ளை; கூலிவேலை; தேவாலயகட்டடரூபம்; பாட்டன்
பாட்டி; சணபதி விநாயசக்சடவுள்; சிவப்புநிறம்; கம்பு சா
மை; பசுமாடு சிவப்புரத்தினம்; அலிக்கிரகம்; சித்தப்பிரமை
மாந்தர்உறுப்பில்லை; சமன்; ஸ்திரீதேவதை; எல்லைதேவ
தை; பயங்கரதேவதை; தெண்டம்; கட்டடஉறுப்பில்ஓடு;
மதம்விட்டுமதம்போதல்; ஜாதிப்பிரஷ்டம்; மூலிகைமுதலி
யன. பொதுவாய் ஞானம் பரதேசவாசம் குலஹீனம் விபசா
ரத்தைக்காண கேதுவைக்கொண்டும் பார்க்கவேண்டும்.

ஏலேலசிங்கர்வினா:—ஒவ்வொரு விராசியிலும் ஒவ்வொருகிரகம்
எத்தனைநாளிருக்கும்.

### திருவள்ளுவர்விடை.

குரித்தகதிரோன்புகர்புந்தி குலாவிநிற்குமொருமாதம்
செருத்தமதிநாளிரண்டேகால் செவ்வாய்மாதமொன்றரையாம்
கருத்தசனியாண்டிரண்டரையாங் கனகவியாழமோராண்டு
பெருத்தராகுகேதுவுக்குப் பேசுமாண்டுமொன்றரையே.

என்றபடி, சூரியன் - சுக்கிரன் - புதன் ஒருவிராசியில் ஒருமாதமும், சந்திரன் இரண்டேகால்நாளும், செவ்வாய்க்கு ஒன்றரைமாதமும், சனிக்கு இரண்டரைவருடமும், குருவுக்கு ஒருவருடமும், இராகு - கேதுவுக்கு ஒன்றரைவருடமும் சஞ்சரிக்கும். கிரகங்களினுடைய வக்கிரத்தினாலும் அதிசாரங்களினாலும் இந்த காலஅளவுக்குச் சற்றேரக்குறைய சிலசமயங்களில் பேதப்படுமென்றறிக.

ஏலேலசிங்கர்வினு:—ஆண் - பெண் கிரகங்களெவை.

திருவள்ளுவர்விடை:—சூரியன் - செவ்வாய் — வியாழன் — கேது இந்த நான்கு கிரகங்களும் ஆண். சந்திரன் - சுக்கிரன்- இராகு இந்த மூன்று கிரகங்களும் பெண். சனி - புதன் - குளிகன் இந்த மூன்றுகிரகங்களும் ஆணுமில்லை பெண்ணுமில்லை என்கிற அலிக்கிரகமாகும். பெண்கிரகம் புத்திரஇடம் சகோதரர் இடத்திலாவது அந்த இடத்ததிபதியுடனாவது கூடியிருக்கினும் பார்க்கினும் புத்திரபலன், (அல்லது) சகோதரபலன் பெண்ணதிகமென்றும், புருஷக்கிரகமிருக்கில் ஆண்சகோதரம் (அல்லது) புத்திரரதிகமென்றும், அந்த இடத்திலாவது அதிபதியுடனாவது ஆணுமில்லாத பெண்ணுமில்லாத கிரகங்கள் கூடினாலும் பார்த்தாலும் சகோதரம் அல்லது புத்திரபாவங்களுக்கு கெடுதலும் நஷ்டமும் உண்டாவதே தோடம். காலதாமதலாபமுண்டு சுபர் அப்படிக்கொற்ற ஆண் பெண்ணில்லாத கிரகத்தைப்பார்த்தால் தாமதலாபமும் அகாலவிருத்தியையும் அடுத்துண்டாவது முன்உண்டாவதும் மரணமடைந்தும் மற்றலாப சகோதரம் புத்திராதி தீர்க்கமாகும்.

ஏலேலசிங்கர்வினு:—பணபரம் - ஆபோக்கியலீபம் - உபசயம் - மறைவுதுஸ்தானம் என்ற இடங்கள் எவை.

திருவள்ளுவர்விடை:—பிறந்த இலக்கினமுதல்

(2-5-8-11) இந்த நான்கும் பணபரம் இடமாகும்.
(3-6-9-12) இந்த நான்கும் ஆபோக்கி லீபமாகும்.
(3-6-11) இந்த மூன்றும் உபசயமாகும்.
(3-8-6-12) இந்த நான்கும் துஸ்தானமாகும்.



இதிற்கூறுதொழிந்த மற்ற (1-4-7-10) இந்த நான்கும் கேந்திரஇடமாகும்.

(1-5-9) திரிகோணமாகும்.

இதுவுமன்றி,

8-ம் இடம் சுத்தமாய் மறைந்தது.
2-7-11-முதலாவது மாரகஸ்தானம்.
3-8-12-இரண்டாவது மாரகஸ்தானம்.
2-7-3-8-இந்த நான்கும் அதிகமாரகம்.
12-மிடம் வியசயனஸ்தானம்
1-4-7-10-இந்தச்சென்மம்
2-5-8-11-முன்சென்மம்.
3-6-9-12-வருகிறசென்மம்.

மற்றைய நட்பாக்ஷியுச்சம் பகைநீசாதிகிரகங்களை முன்கூறியுள்ளோம்.

ஏலேல்சிங்கர்வினு:—சவ்வியம் - அபசவ்வியம் - சவ்வியாபசவ்வியம் - அபசவ்விய சவ்வியம் என்ற நான்கின் விதியெப்படி.

திருவள்ளுவர்விடை:—சுக்கிலபக்ஷத்தில் ஓசையென்ற மேஷம் - மிதுனம் - சிம்மம் - துலாம் - தனுசு - கும்பம் இந்த ஆறு இராசிகளில் சந்திரன் - சுக்கிரன் - புதன் - குரு இவர்கள் இருந்தும் மற்றைய ஆறுஇராசிகளில் சூரியன் - செவ்வாய் - சனி - பாம்பு இவர்களிருந்தும் சுபர்களாகிய முன்சொன்ன நால்வரும்.

கேந்திரகோணத்திலிருந்தும் மற்றைய இராசிகனில் பாபரிருந்தும் உள்ள ஜாதகனுக்கு சுபபெலன் ஒன்பதும், பாயபெலன் ஒன்பதும், ஆனால் சவ்வியஜாதகமென்றும், சுபபெலன்குறைந்து நான்குக்குள்ளாகி மற்றது அசுபபெலன் ஆனால் அபசவ்விய ஜாதகனென்றும் நாலுக்குமேல் எட்டுக்குள் சுபபெலனானால் அபசவ்வியாசவ்வியமென்றும், நாலுக்குமேல் எட்டுக்குள் அசுபபெலனானால் சவ்வியாபசவ்விய ஜாதகமென்றும் பெயராகும்.

மற்ற நாலு எழுபதுக்குடையவர்கள் குருவாகிஇருக்கில் முழுப்
பாபமென்றும், சுக்கிரனாகில் முக்காற்பாபமென்றும், புதனாகில்
அரைப்பாபியென்றும் மற்றகிரகங்களுக்கு விசேஷசுபபலன்
யென்றுங் காண்கவும். பாபிகள் (1-4-7-10)க்குடையவர்களாகில்
விசேஷசுபபலத்தையும், யோகத்தையும், அவரவர்களின் திசா
புத்திகாலங்களில் கொடுப்பார்களென்றும் கண்டு செப்பவும்.

முற்கூறிய திரிகோணமாவது.

ஒன்றைந்து ஒன்பதாமிடமாகும் இதில் சுபர்கள் இருந்தா
லும் பார்த்தாலும் ஆதிபதிகளானாலும் மிகுந்தயோகத்தையும்
சுபபலத்தையும் கொடுப்பார்களென்றும் கண்டுகூறவேண்டியது.

முற்கூறிய (1-4-7-10)என்ற இடங்களை (சென்மம்-நீர்க்கீழ்
ப்பாடு-உச்சி) யென்றும் பெயராகக்கொள்க.

{ கேந்திரத்தில் நிற்குங்கிரகங்களின்
விசேஷபலன் கூறுவோம். }

சூரியனும், செவ்வாயும், கேதுவும் பத்தாம்வீட்டிலிருக்கில்
அதிக வலிமையும், புதன் - குரு-சென்மத்திலிருக்கில் வலியோ
ராகியும், சனி - ராகு ஏழிலிருக்கில் மிகவும் பெலவான்களென்
றும், சுக்கிரனும் - சந்திரனும் நான்கிலிருக்கில் அதிகவலிமையு
டையவர்களென்றுங் கண்டறியவேண்டியது.

ஏலேலசிங்கர்வினா:—சவ்யாப சவ்யரீதியாய் கிரகபெலன்களின்
நிர்ணயங்களெப்படி.

திருவள்ளுவர்விடை:—1-வது. சவ்வியமானால் குருவுக்கும், பூர்
ணசந்திரனுக்கும் முழுப்பெலன்; சுக்கிரனுக்கு முக்காற்
பெலன. புதனுக்கு அரைபெலன். சனிக்கு முக்காற்பாபம்
செவ்வாய் - பாம்பு - முழுப்பாபி - சூரியன் அரைப்பாவி
யாகும்.

2-வது பூரணசந்திரன் குருமுதலியோர் கேந்திரத்திலிருக்
கினும் பெலவான். இதில் செவ்வாயும், சூரியனும் பத்தாவது
கேந்திரம் முழுப்பெலன். ஏழாவது கேந்திரம் முக்காற்பெலன்.



நான்காவது கேந்திரம் அரைபெலன். லக்கினகேந்திரம் காற்பெ
லன். குருவும்-புதனும் லக்கினகேந்திரத்தில் முழுப்பெலன். நா
லில் முக்காற்பெலன், ஏழில் அரைப்பெலன். பத்தில் காற்பெலனா
கும். சனி - பாம்பு ஏழில் முழுப்பெலன். நாலில்முக்காற்பெலன்
பத்தில் அரைப்பெலன். லக்கினத்தில் காற்பெலன் சுக்கிரனுக்
கும் - சந்திரனுக்கும் நாலில் முழுப்பெலன். ஏழில் முக்காற்பெ
லன். பத்தில் அரைப்பெலன். லக்கினத்தில் காற்பெலனாகுமென்
றறியவேண்டியது. சந்திர குருவாதியர்கள் கேந்திராதிபதிகளா
னால் முதலாவது பாராவில் அவரவர்களுக்கு ஏற்பட்டமொத்தப்
பெலன்கள், பாவபெலனாகக் கொள்ளவேண்டியது.

3-வது திரிகோணபெலன் கோணாதிபதிகள் சுபரானால் முக்
காற்சுபபெலன் என்றும், பாபரானால் முக்காற்பாப பெலனாகும்,
சுபரிருக்கில் உத்தமம். பாபரிருக்கில் அரைபாபபெலன்களைக்
கொடுப்பார்கள்.

4-வது ஸ்தானபெலன். பூரணசந்திரன் - குரு இவர்கள்
கேந்திர கோணமில்லாத எட்டிலிருக்கில் முழுப்பாபி - ஆறுபதி
னொன்றி விருக்கினும் அதிபதியானாலும் முக்காற்பாபிகள் (2-3-
12)ல் இருக்கினும் அதிபதியானாலும் அரைப்பாபிகள். 3-ல் இரு
க்கில் காற்பாபிகள். இதில் சனி - குஜன் - ரவி - பாம்பு இவரிரு
க்கில் மேற்கூறியதுகைகள் சுபபெலன் எனக்கண்டு கொள்ளவே
ண்டியது.

5-வது முற்கூறிய சத்துருமித்துரு சமம் இவ்விதபெலன்க
ளாவன:— கூடிய இரண்டுகிரகமும் சமமானால் அவரவர்களுக்
குநிற்கும். ஒருசத்துருவும் ஒருமித்துருவுமானால், சத்துருபாவ
ரானால் சுபருடையபெலத்தில் காற்பங்கு கிரகித்துவிடப்படும்
இருவரும் மித்துருவுமானால் அவரவர்கள் சுபபெலன் அவரவற்
கேயிருக்கும். சுபர் சத்துருவும் பாபர் மித்துருவானால் அவரவர்
கள்பெலனே குறைவில்லை. ஒருவர்சமனாய் அவர் சுபராகியும்
ஒருவர் பகையானால் சமபெலன் அரை பாபர்பகையும் சுபமித்
திரமானால் சுபருக்கும் பாவபெலன் காற்பங்குசேர்க்கவும். சுபர்
சுபரும் மித்திரமானால் உத்தமபெலனாகும்.

கிருஷ்ணபக்ஷத்துக்கு உதாரணம்.

1-வது

| | | | |
|---|---|---|---|
| 1 | ல 12 | 11 | 10 |
| 2 | சவ்யம் | | 9 |
| 3 | மேஷலக்கின மாஞல் | | 8 |
| 4 | 5 | 6 | 7 |

2-வது

| | | | |
|---|---|---|---|
| 12 | ல 1 | 2 | 3 |
| 11 | | | 4 |
| 10 | அபசவ்யம் | | 5 |
| 9 | 8 | 7 | 6 |

3-வது

| | | | |
|---|---|---|---|
| 6 | ல் 12 | 11 | 10 |
| 5 | சவ்யாப | | 9 |
| 4 | சவ்யம். | | 8 |
| 3 | 2 | 1 | 7 |

4-வது

| | | | |
|---|---|---|---|
| 7 | ல் 1 | 2 | 3 |
| 8 | அபசவ்ய | | 4 |
| 9 | சக்கரம் | | 5 |
| 10 | 11 | 12 | 6 |

இந்நான்கும் கிருஷ்ணபக்ஷமண்டல் கெதியின் பாவங்களாகும்.



ஏலேலசிங்கர்வினு:—இவைகளை எவ்விதங்காணல் வேண்டும்.

திருவள்ளுவர்விடை:—ஒருவன் ஜெனித்தகாலஞ் சுக்கிலபக்ஷமா கில் அதற்கேற்ற சக்கிரம் லக்கினம் கிரகத்தைத்தெரிந்து இராசிமண்டலத்தைப் போட்டுக்கொண்டு அந்த சக்கரத்தி லடைத்திருக்கும் குரு - சுக்கிரன் - சந்திரன் - புதன் இந்த சுபர்கள் லக்கினத்திற்கு(1-4-7-10-5-9) இந்த இடத்தில் எதி லிருக்கினும் சவ்வியமானசுபபெலன் ஒவ்வொன்றுஒவ்வொரு கிரகங்களுக்கும் எடுத்தும், இவர்கள் புருஷவிராசியிலிருக் கில் ஒவ்வொன்று சவ்வியமான சுபபலம் எடுத்தும், இவர்க ளாவது அல்லது இவர்களில் எவராவது பெண்ராசியிலிருந் தால் அபசவ்வியபெலம் ஒன்ருக எடுத்தும் (3-6-8-12-11-2) இந்த இடங்களிலெதிலேனும் ஒன்றில் மேற்கூறிய கிரகங்க ளிலெவரேனும் ஒருவரோ அல்லது பலரோ இருக்கில் தனித் தனி அபசவ்வியபெலம் (1) எடுத்தும் மற்றைய சனி-பாம்பு குஜன் - இரவி இவர்கள் பெண்ணிராசிகள். ஆறிலாவது அல்லது அவைகளிலெதிலேனும் ஒன்றில் மேற்கூறிய சனி முதலிய கோட்களில் எவரிருக்கிருரோ அந்த கிரகங்கள் ஒவ் வொன்றிற்குந் தனித்தனி சவ்வியபெலம் ஒன்றும், புருஷ ராசியிலிருக்கில் அதேபிரகாரம் அபசவ்வியபெலம் ஒன்றும் (3-6-8-11-2-12) இந்த இடங்களிலிருந்த சனிமுதலிய பாவர் களுக்கு சவ்வியபெலம் தனித்தனியொன்றும், மற்றைய (1-4-7-10-5-9) இந்த இடங்களிலிருக்கும் பாபக்கிரகங்களு க்கு அபசவ்வியபெலம் தனித்தனி ஒன்றுமாகக்கணக்கெடு த்து மொத்தம் ஒன்பது கிரகத்துக்கும் வந்த சவ்வியம் அப சவ்வியம் பெலன்களைக்கூட்டி சவ்வியம் (9)ம அபசவ்வியம் (9)ம் வந்த ஜாதகமானவை.

1-கிரேதாயுகஜெனனமாகின் தேவர்முதலிய ஈசர்களென்றும்.
2-திரேதாயுகஜாதகமாயின் தேவாம்சையோர்களென்றும்.
3-துவாபரயுகமாயின் தெய்வப்பிரதிநிதிகள்யென்றும்.
4-கலியுகமாயின் தெய்வதுவஸமானிகள்யென்றும்.

சாலோக - சாரூப - சாமீப - சாயுஜ்யைகளாக அடைகிருர் கள் சவ்யம் நான்கிற்குள்ளும், மற்றவை அபசவ்யமாகின்வ

அபசவ்யஜாதகமாயின. இப்படிக்கொற்ற ஜாதகர்கள் (1-2-3-4) என்னும் வரிசையான யுகங்களிற் சனித்தோர் இராக்ஷசர் பைசாசர் - புத்தர் - கண்டகர்களென்றும் இக்கலியிற் கண்டகரென்றுகூறிய தென்னவெனில்; கண்டனை செய்யின்வேறு ஒருவர் கேட்கக்கூடிய தில்லாதவர்களாம்.

சவ்வியம் ஒன்றுக்குமேல் எட்டுக்குள்ளும், மற்றவை அபசவ்வியமானால் அபசவ்வியசவ்விய ஜாதகமாகையால் (1-2-3-4) என்னும் யுகங்களிற் அசுரர் - அனித்தியர் - மானிடர் - அருளில்லாதவர்களென்றும்.

அபசவ்வியபெலம் நான்குக்குமேல் எட்டுக்குள்ளும் மற்றவை சவ்யபெலமானால் சவ்யாபசவ்ய ஜாதகமென்றும் (1-2-3-4) இக்கிரமயுகப்படி மானிடரிற்றேவர் மனிடரிற்றெய்வாம்சையோர் மனிடரில்அரக்கர் கந்திருவகுணத்தோர் என்றும், மனிடரில் மனிடகுணத்தோர்களென்றும் நிறுத்த முறையாகக்காணல் வேண்டும்.

அமரபக்ஷக்கணக்கிற்கும் இவ்விதிப்படி மாற்றுதல்செய்து பார்க்கவேண்டும்.

ஏலேலசிங்கர்வினா:—கிரகபெலன்களைக் கண்டறியவேண்டியதற்கு விதிபூர்வங்களென்ன.

திருவள்ளுவர்விடை:—கிரகங்களுக்கு ஐவகைப்பெலன்களுண்டு அவையாதெனில் நட்பு(3) ஆக்ஷி(2) உச்சம்(1) பகை(4) நீசம்(5) என்பனவாகும். இவையே ஓர் உடலுக்கு பஞ்சபூதமென்றும் (5) புலன்என்றும் பொறிகளென்றுங்கூறிக.

அப்பு, பிரிதிவி, தேசெஸ், வாயு, ஆகாசம் என்னும் நிறுத்தமுறையே கூறப்படும்.

இதை இரட்டித்துக்கூறியது.

1-உச்சம் - பிரிதிவி என்றும்
2-ஆக்ஷி - அப்பு என்றும்
3-நட்பு - தேஜசு என்றும்



4-பகை - வாயுவு என்றும்
5-நீசம் - ஆகாசம் என்றும் பெயராகும்

இவைமரணதிகளுக்கு உபயோகம்.

ஏலேலசிங்கர்வினா:—கிரகங்களுள் ஒருவருக்கொருவர் உயர்வு தாழ்வு உண்டா.

திருவள்ளுவர்விடை:—உண்டும் அதுஎப்படியெனில் எல்லாக்கிரகங்களுக்கும் புதனனவன் தாழ்மையான பெலத்துடையவனென்றும், புதனுக்கு மேற்பட்ட பெலத்துடையவன் குசன் என்றும், குசனுக்கு அதிகம் சனியென்றும், சனியைப்பார்க்கிலும் குருவும், குருவுக்குஅதிகம் சுக்கிரனென்றும், சுக்கிரனுக்கு அதிகம் சந்திரனும், சந்திரனைப்பார்க்கிலும் சூரியனும், சூரியனுக்கு அதிகம் ராகு, கேது என்றும் கூறப்படும்.

இவ்வித கிரகங்களானவர்கள் அவரவர்கள் தாழ்மையுள்ள கிரகங்களுடன் சேர்ந்திருக்கில் அத்தாழ்மையுள்ள கிரகபெலன்களையும் அவர்கள்கொடுக்கும் சுபம் அல்லது அசுபபலனைப்பிடுங்கி தாங்களே கொடுப்பார்களென்றும் சொல்லவேண்டும்.

மேற்கண்ட சுபபலன்களைப் பெற்றிருக்கும் சுபர்கள் (3-6-8-12)என்று சொல்லும் இடங்களிலிருக்கில் தீமையும், மற்ற (1-2-4-5-7-9-10-11) இவ்விடங்களிலிருக்கில் உத்தம சுபபலன்களைக் கொடுக்கும் கிரகாதிபர்களாகிறார்கள். (3-6-8-12)ல் பாபிகளிருக்கில் உத்தமம், சுபபலன்களையும், (1-2-4-5-7-9-10-11) இந்த இடங்களில் மேற்சொல்லிய பெலன்களற்ற பாவிகளிருக்கில் அசுபமான தீமைப்பலன்களைக்கொடுப்பார்களெனங்கண்டு கூறல்வேண்டும்.

முற்கூறிய கேந்திரயிடங்கள்.

(1-4-7-10) என்னும் வடமொழியில் (கண்டகம்) கேந்திரம் சதுஷ்டயமென்றும் கூறுகிறது. இதில் சென்மலக்னாதி இடங்களிலும், நாலிலும் சுபர்களிருக்க மிகவும் விசேஷசுபபலனும், பாபிகளிருக்க அசுபபலனும். ஒன்றாகிய சென்மலக்கினம் நீங்கிய

மற்ற நாலு எழுபதுக்குடையவர்கள் குருவாகிஇருக்கில் முழுப்பாபுமென்றும், சுக்கிரனாகில் முக்காற்பாபமென்றும், புதனாகில் அரைப்பாபியென்றும் மற்றகிரகங்களுக்கு விசேஷசுபபலன் யென்றுங் காண்கவும். பாபிகள் (1-4-7-10)க்குடையவர்களாகில் விசேஷசுபபலத்தையும், யோகத்தையும், அவரவர்களின் திசாபுத்திகாலங்களில் கொடுப்பார்களென்றும் கண்டு செப்பவும்.

முற்கூறிய திரிகோணமாவது.

ஒன்றைந்து ஒன்பதாமிடமாகும் இதில் சுபர்கள் இருந்தாலும் பார்த்தாலும் ஆதிபதிகளானாலும் மிகுந்தயோகத்தையும் சுபபலத்தையும் கொடுப்பார்களென்றும் கண்டுகூறவேண்டியது.

முற்கூறிய (1-4-7-10)என்ற இடங்களை (சென்மம்-நீர்க்கீழ்பாடு-உச்சி) யென்றும் பெயராகக்கொள்க.

{ கேந்திரத்தில் நிற்குங்கிரகங்களின் விசேஷபலன் கூறுவோம். }

சூரியனும், செவ்வாயும், கேதுவும் பத்தாம்வீட்டிலிருக்கில் அதிக வலிமையும், புதன் - குரு-சென்மத்திலிருக்கில் வலியோராகியும், சனி - ராகு ஏழிலிருக்கில் மிகவும் பெலவான்களென்றும், சுக்கிரனும் - சந்திரனும் நான்கிலிருக்கில் அதிகவலிமையுடையவர்களென்றுங் கண்டறியவேண்டியது.

ஏலேலசிங்கர்வினா:—சவ்யாப சவ்யரீதியாய் கிரகபெலன்களின் நிர்ணயங்களெப்படி.

திருவள்ளுவர்விடை:—1-வது. சவ்வியமானால் குருவுக்கும், பூர்ணசந்திரனுக்கும் முழுப்பெலன்; சுக்கிரனுக்கு முக்காற்பெலன. புதனுக்கு அரைபெலன். சனிக்கு முக்காற்பாபம் செவ்வாய் - பாம்பு - முழுப்பாபி - சூரியன் அரைப்பாவியாகும்.

2-வது பூரணசந்திரன் குருமுதலியோர் கேந்திரத்திலிருக்கினும் பெலவான். இதில் செவ்வாயும், சூரியனும் பத்தாவது கேந்திரம் முழுப்பெலன். ஏழாவது கேந்திரம் முக்காற்பெலன்.



நான்காவது கேந்திரம் அரைபெலன். லக்கினகேந்திரம் காற்பெலன். குருவும்-புதனும் லக்கினகேந்திரத்தில் முழுப்பெலன். நாலில் முக்காற்பெலன், ஏழில் அரைப்பெலன். பத்தில காற்பெலனாகும். சனி - பாம்பு ஏழில் முழுப்பெலன். நாலில்முக்காற்பெலன் பத்தில் அரைப்பெலன். லக்கினத்தில் காற்பெலன் சுக்கிரனுக்கும் - சந்திரனுக்கும் நாலில் முழுப்பெலன். ஏழில் முக்காற்பெலன். பத்தில் அரைப்பெலன். லக்கினத்தில் காற்பெலனாகுமென்றறியவேண்டியது. சந்திர குருவாதியர்கள் கேந்திராதிபதிகளானால் முதலாவது பாராவில் அவரவர்களுக்கு ஏற்பட்டமொத்தப் பெலன்கள், பாவபெலனாகக் கொள்ளவேண்டியது.

3-வது திரிகோணபெலன் கோணாதிபதிகள் சுபரானால் முக்காற்சுபபெலன் என்றும், பாபரானால் முக்காற்பாப பெலனாகும் சுபரிருக்கில் உத்தமம். பாபரிருக்கில் அரைபாபபெலன்களைக் கொடுப்பார்கள்.

4-வது ஸ்தானபெலன். பூரணசந்திரன் - குரு இவர்கள் கேந்திர கோணமில்லாத எட்டிலிருக்கில் முழுப்பாபி - ஆறுபதினொன்றி லிருக்கினும் அதிபதியானாலும் முக்காற்பாபிகள் (2-3-12)ல் இருக்கினும் அதிபதியானாலும் அரைப்பாபிகள். 3-ல் இருக்கில் காற்பாபிகள். இதில் சனி - குஜன் - ரவி - பாம்பு இவரிருக்கில் மேற்கூறியதுகைகள் சுபபெலன் எனக்கண்டு கொள்ளவேண்டியது.

5-வது முற்கூறிய சத்துருமித்துரு சமம் இவ்விதபெலன்களாவன:— கூடிய இரண்டுகிரகமும் சமமானால் அவரவர்களுக்குநிற்கும். ஒருசத்துருவும் ஒருமித்துருவுமானால், சத்துருபாவரானால் சுபருடையபெலத்தில் காற்பங்கு கிரகித்துவிடப்படும் இருவரும் மித்துருவுமானால் அவரவர்கள் சுபபெலன் அவரவற்கேயிருக்கும். சுபர் சத்துருவும் பாபர் மித்துருவானால் அவரவர்கள்பெலனே குறைவில்லை. ஒருவர்சமனாய் அவர் சுபராகியும் ஒருவர் பகையானால் சமபெலன் அரை பாபர்பகையும் சுபமித்திரமானால் சுபருக்கும் பாவபெலன் காற்பங்குசேர்க்கவும். சுபர் சுபரும் மித்திரமானால் உத்தமபெலனாகும்.

6-வது முற்கூறிய நட்பாக்ஷி ஐவகைப் பெலன்களாவன:—சுபர்கள் உச்சமானால் (கவ)பெலன். அவரவர்களின் பொதுப்பெலனில் யென்றும், ஆட்சியானால் (ஞ)பெலன் என்றும், நட்பானால் (௬)பெலன் என்றும், பகையானால் (வ)பெலன் சுபமென்றும், நீசமானால் (0)நிஷ்பெலமென்றவையாகும்.

பாவர்கள் உச்சமானால் (கவ)பாப பெலனும், ஆட்சியானால் (ஞ)பாவம் நட்பானால் (௬)பாவம், பகையானால் (வ)பாவம், இங்தப்பிரகாரம் பெலன்களை நிதானித்தாய்ந்தும், ஒவ்வொருபாவக்கிரகங்களின் பெலன் அறியவேண்டியது.

ஏலேலசிங்கர்வின:—கிரகங்களின் பார்வைகளும், அவைகளின் பெலன்களுந் தெரிவதெப்படி.

திருவள்ளுவர்விடை:—சூரியனுக்கு,

சவ்வியமாகில் (எ) முழுப்பார்வையென்றும்
அபசவ்வியமாகில் (எ) முக்காற்பார்வையென்றும்
சவ்வியாபசவ்வியமாகில் (எ) அரைப்பார்வையென்றும்
அபசவ்வியசவ்வியமாகில் (எ) காற்பார்வையென்றும்,

சந்திரனுக்கு,

சவ்வியமாகில் (எ) முழுப்பார்வையென்றும்
அபசவ்வியமாகில் (எ) காற்பார்வையென்றும்
சவ்வியாபசவ்வியத்தில் (எ) அரைப்பார்வையென்றும்
அபசவ்வியசவ்வியத்தில் (எ) முக்காற்பார்வையென்றும்;

செவ்வாய்க்கு (எ) முழுப்பார்வையென்றும்,
,, (அ) முக்காற்பார்வையென்றும்,
,, (௪) அரைப்பார்வையென்றும்,
புதனுக்கு (எ) முழுப்பார்வையென்றும்,
வியாழனுக்கு (ரு) காற்பார்வையென்றும்,
,, (எ) முழுப்பார்வையென்றும்,
,, (கூ) முக்காற்பார்வையென்றும்,
சுக்கிரனுக்கு (எ) முழுப்பார்வையென்றும்,



சனிக்கு (எ) முழுப்பார்வையென்றும்,
,, (க0) முக்காற்பார்வையென்றும்,
,, (௩) அரைப்பார்வையென்றும்,
இராகுவுக்கு (எ) முழுப்பார்வையென்றும்,
கேதுவுக்கு (எ) முழுப்பார்வையென்றும்,

சவ்வியாப சவ்வியாதிகளின்படிக்கு ஒவ்வொருவர்களின் பெலன்களில் முழுநோக்கென்றுரைத்த இலக்கங்களில் குரு நீங்கியவர்களுக்கு அரைமுதலிய பெலன்களென்றும், குருவுக்குமாத்திரம் ஒன்றுமுதலிய பெலன்களென்றும், சுக்கிரனுக்கு முக்கால்முதலியபெலன்களென்றும், யூகித்துரைக்கவேண்டும்.

ஏலேலசிங்கர்வின:—கிரகங்களின் பஞ்சபெலனவதென்ன?

திருவள்ளுவர்விடை:—ஸ்தானாதிபதிபத்தியம்-க்ஷேத்திரஸ்திதி-மூலத்திரிகோணம் - திருஷ்டி - சம்மந்தம் என ஐந்துவகைப் பெலன்களாகுமென்றும் அறியவேண்டியது.
இவை சுக்கிலபக்ஷ சவ்வியத்திற்கும், கிருஷ்ணபக்ஷ அபசவ்வியத்திற்கும் ஒரேபிரகாரம் பார்க்கவேண்டியது.

ஏலேலசிங்கர்வின:—சுக்கிலபக்ஷ அபசவ்வியத்திற்கும் கிருஷ்ணபக்ஷ சவ்வியத்திற்கும் பெல. பெலன்களெப்படி.

திருவள்ளுவர்விடை:—(1)வது எற்கனவேயுள்ள கிரகபெலன் குசன் - பாம்பு இவர்களுக்கு (க) சுபபெலனும், சனிக்கு (ஞ) சுபபெலனும், ரவிக்கு (வ) சுபபெலனும், குருக்ஷீணசந்திரனுக்கு (க) பாபபெலனும். சுக்கிரனுக்கு (ஞ)லும், புதனுக்கு (௬)யும் பாப பெலன்களாகும்.

ஏலேலசிங்கர்வின:—கேந்திரபெலன்களெப்படி.

திருவள்ளுவர்விடை:—(2)வது குஜன் - பாம்பு முதலிய பாவர்கள் கேந்திர அதிபதிகளானால் பாபபெலனே உள்ளவர்களாகும். (குருமுதலியோர் கேந்திராதிபதிகளானால் சுப உத்தமபெலக்காரர்களென்றும் பெயராகும்.) குருபுதனுக்கு

சுக்கிலபட்சத்திற் சொல்லிய (௯-௬-௭-௰) இந்த இடங்களி லிருக்கில்-க-ஈ-ஒ-வ-என்ற முறையே பாபபெலனாகும் குஜன் - ரவி - கேது (௰-௭-௬-௧) இதிலிருக்கில் க-ஈ-ஒ-வ-என்ற சுபபெலனும் அதிபதியாகில் பாபபெலன்களாம்.

சனி - ராகு (௭-௬-௰-௧) இந்தஸ்தானங்களிலிருக்கில் (க-ஈ-ஒ வ) என்ற சுபபெலன்களாகும்.

குரு-புத-சந்திரன்-சுக்கிரன் (௪-௭-௰-௧) இந்த வீட்டிலிருக்கில் பாபபெலன் (க-ஈ-ஒ-வ) என்றும் அதிபதிகளானல் உத்தமசுபபெலவதிகாரிர யாவார்கள்.

ஏலேலசிங்கர்வினு:—திரிகோணபெலன்க ளெப்படி.

திருவள்ளுவர்விடை:—(3)வது கோணதிபதிகள் குஜன் முதலிய பாவரானல்-ஈ-சுபபெலன்களும், குருமுதலியவர்களானல் ஈ-பாபபெலனென்றும் பெயராகும். குஜன்முதலியோர் கோணத்திலிருக்கில் சுபபெலன். குருமுதலியோரிருக்கில் பாபபெலன் ஒ-யாகும்.

ஏலேலசிங்கர்வினு:—கேந்திரகோணம் நீங்கிய மற்றையஸ்தானபெலன்களெப்படி.

திருவள்ளுவர்விடை:—(4)வது பூரணசந்திர குருமுதலிய நால்வரும் (௮-ல் இருக்கில்)க-சுபபலவான் - சுக்கிரன் ஈ - சுபன் புதன் - ஒ-சுபன். (௯-௧௧)ல் குருமுதலிய சந்திரனிருக்கினும் அதிபதிகளானலும் ஈ-சுபபெலன் (௨-௧௨-ல்) இருக்கினும் அதிபதியானலும் ஒ-சுபபெலன். (௩-ல்) வ-பெலன் மற்ற (௰-௪) சுபர்களுக்கும் இவ்விதமே அவரவர்களுக்கு ஏற்கனவேவுள்ள பெலனில் முழுப்பங்கு (௮)க்கும் ஈ-பங்கு (௯-௧௧)மிடத்திற்கும் ஒ-பங்கு (௨-௧௨)ச்கும் வ-பங்கு (௩)மிடத்திற்குங் கண்டறியவேண்றியது.

இவ்விதமே குஜன் - பாம்பு - சனி - ரவி இந்த நால்வருக்கும் அவரவர்கள் (8-6-11) (2-12) (3) இவைகளிலிருக்கினும் அதிபதிகளானலும் 1-¾-½-¼-என்ற பாவர்களாகில் நிறுத்தமுறையே கிரகங்களைக்கண்டறிந்து பெலன் எடுக்கவும்.



ஏலேலசிங்கர்வினு:—சத்துரு மித்துரு சமபெலன்களெப்படி.

திருவள்ளுவர்விடை:—(5)வது சுக்கிலபக்ஷ சவ்யத்திற்கு எவ்விதங்கூறப்பட்டதோ? அவைகளை மாறிப்பார்த்துக்கொள்ள வேண்டியது.

ஏலேலசிங்கர்வினு:—நட்பாக்ஷியுச்சம் ஐவகைப்பெலன்களெப்படி.

திருவள்ளுவர்விடை:—(6)வது குஜன் முதலிய நால்வருச்சமானல் 1¼-சுபபெலன். குருமுதலிய நால்வருச்சமானல் ¼-சுபபெலன். குஜன் முதலியோர் ஆட்சியானல் ¾-பெலன். நட்பானல் ½-பெலன். பகையானல் ¼-பெலன். நீசமானல் பூச்சியம் பாபபெலன். குருமுதலியோர் ஆட்சியானல் ¾-பாபபெலன் நட்பானல் ½-பாபபெலன். பகையானல் கால்பாபபெலன். நீசமானல் உத்தமசுபம். உச்சமானபெலவான்கள்.

1-வது சுக்கிலபக்ஷ அபசவ்வியத்திற்கும் கிருஷ்ணபக்ஷசவ்யாப சவ்யத்திற்கும் கேந்திரம், திரிகோணம், ஸ்தானம், நட்பாக்ஷி ஐவகைப்பெலன்கள் தவிர்த்த மறறவைகள் சுக்கிலபக்ஷ சவ்யத்திற்கிசைந்தபடி பார்த்துக்கொள்ள வேண்டியதாகையால் அவையை இங்ஙனம் விபரித்து முன்கூறவில்லையாதலால் கேந்திரபலன் கூறுவோமாக.

2-வது லக்னத் 6 இராசிக்குள் (1)ல் புதன் - குரு விருக்கில் முழுப்பாபி அதிபதியானல் சுபன். சுக்கிரன் - சந்திரன் (4)ல் இருக்கில் மேற்படிபாபி அதிபதியானல் முழுச்சுபன். குஜன்-ரவி(¼) ல் இருக்கில் முழுச்சுபன். அதிபதியானல் பாபி. சனி - பாம்பு லக்கினத்தி லிருக்கில் முழுச்சுபன். அதிபதியானல்பாபி.

ஏழாவது இராசிமுதல் (12)வது இராசிக்குள் 7-ல் புதன் குரு முழுச்சுபன். அதிபதியானல் பாபி. சுக்கிரன் - சந்திரன் 10-ல் முழுச்சுபன். அதிபதியானல் பாபி. குஜன் - ரவி - கேது 10-ல் இருக்கில் பாபி. அதிபதியானல் சுபன். சனி - பாம்பு 7-ல் இருக்கில் பாபி. அதிபதியானல் சுபன்.

ஆருவது இராசிக்குள் குருமுதலியோர் 2-3-6-ல் இருக்குமாகில் ஏற்கனவுள்ள பெலனில் சுபபெலன் ½-¼-¾-யென்றும், குஜன் முதலியோரிருக்கில் பாபபெலன் என்றும் அதிபதியாகில்சுபம்

குருமுதலியோர் -8-11-12-ல் இருக்கில் -1-$\frac{3}{4}$-$\frac{1}{2}$-யென்ற சுபபெலனும் அதிபராகில் பாபபெலனும். குஜன் முதலியோரிருக்கில் -1-பாபபெலனும். அதிபராகில் சுபபெலனும் என்றறியவேண்டியது.

(3)வது கோணபெலன் கூறுவோமாக. பாவர்கோணமானால் $\frac{3}{4}$-சுப்பெலனும், சுபனானால் $\frac{3}{4}$-பாபபெலனென்றறியவேண்டியது. குருமுதலிய (1-5) சுபகோணமானால் $\frac{3}{4}$-பாபபெலன்.

பாவனான குஜன் முதலியோரானால் ($\frac{3}{4}$)சுபபெலன். 9-வது கோணம்பின் (12) இராசிக்குள் கோணசுபனான குரு முதலியோரானால் சுபபெலன் குஜன் முதலியோரானால் பாபபெலன்,

சுக்கிலபக்ஷ சவ்யாப சவ்யத்திற்கும் கிருஷ்ணபக்ஷ அபசவ்ய சவ்யத்திற்கும்.

(4)வது லக்கினத்தில் குரு - புதன் முழுசுபபெலன். (4)ல் சுக்கிரன் - சந்திரன் முழுசுபபெலன் அதிபதிபாபி.

லக்கினத்தில் சனி - பாம்பு முழுப்பாபி அதிபதி சுபன் குஜன் - ரவி (4)ல் முழுப்பாபி அதிபதிசுபன்.

7-ல் குரு - புதன் பாபி. அதிபதி சுபன். 10-ல் சுக்கிரன் சந்திரன் பாபி. அதிபதிசுபன். 1-ல் சனி - பாம்பு இருக்க பாபி அதிபதிசுபன். 4-ல் குஜன் - ரவி $\frac{1}{2}$-பாபி. அதிபதி சுபன். ஆறுக்குட்பட்ட இராசிகளில் சுபர்கள் கேந்திராதிபதியானால் $\frac{3}{4}$-பாபபெலன் என்றும், (6)க்கு மேற்பட்ட இராசிகளில் சுபர் கேந்திராதிபதிகளானால் உத்தமசுபபலனும், 6-க்குள் பாபர் கேந்திராதிபதிகளானால் சுபபலன். 6-க்குமேல் கேந்திராதிபதிகள் பாபரானால் அசுபபெலன்.

1-5-ல் சுபர்கள் இருக்கினும் அதிபதியும்சுபபெலன். $\frac{3}{4}$-ஆறுராசிக்குமேலான ஒன்பதாமாதிபத்தியம் சுபனானால் அசுபபெலன் $\frac{3}{4}$-பாபிகளான குஜன் முதலியோருக்கு மாறிப்பார்க்கவேண்டியது.

முன் 2-3-6-களில் குரு முதலியோரிருக்கினும் அதிபதியானாலும் -$\frac{1}{2}$ $\frac{1}{4}$ $\frac{3}{4}$-பாபபலன் சனிமுதலியோரானால் அந்த அளவு சுபபெறன். (6) இராசிக்குமேல் 8-11-12-ல் குரு முதலியோரிருக்கினும் அதிபரானாலும் 1-$\frac{3}{4}$-$\frac{1}{2}$-யென்ற சுபபெலன். சனிமுதலியோரானால் பாபபெலன் என்றறியவேண்டியது.



ஏலேலசிங்கர்வினா:—பாவகெணிதங்களாவதென்ன.

திருவள்ளுவர்விடை:—ஒவ்வொரு பாவங்களுக்கும் அந்தந்தப் பாவாதிபன் எந்தவீட்டி லிருக்கிறானோ அவ்வீட்டதிபனும் நிற்குமிடமும் அந்தந்தப்பாவங்களுக்குச் சீவனென்றும்.

பாவாத் பாவராசிக்கு அதிபதி யெந்தவீட்டிலிருக்கிறானோ அவ்வீட்டதிபன் சரீரமென்றும் பெயராகும். ஆகையால் ஒவ்வொருபாவங்களுக்குஞ் சீவனையும் சரீரத்தையும் அறியாவிடில் அந்த ஜாதகனுக்கு அவ்வித பாவபெலன் பிரழ்ந்துபோகப்படுமென்றும் அதில் சீவன்மாத்திரம்பெலத்து சரீரம் பெலக்காவிடினும், சரீரமாத்திரம்பெலத்து சீவன்பெலக்காவிடினும், அவ்வித பலனை அந்தஜாதகன் அடையப்படமாட்டானென்றுங் கருதியுரைத்தல்வேண்டும்.

சீவசரீரமறிந்தபின் இவ்வதிபர்இராசி இவைகளில் ஒன்றுக்கொன்று பாவபகைமுதலிய க்ஷேத்திரமாகியும், சீவசரீராதிபர்கள் ஒருவராகிப்பாவருடன் அல்லது பாபியாகி பெலமற்றாலும் ஒருவருக்கொருவர் பகையாகினும் அதிபெலக் கொடுங்கோளாகினும் அந்தபாவபலன் நிஷ்பலமாய் அதற்கு விரோதமான பலன்களோ நடந்து வரப்படுமேன்றும் சீவசரீராதிபர்கள் பெலவான்களாகியும் பிரபல சுபபெலத்தைப்பெற்றும் சுபக்ஷேத்திர கெதியுடனிருக்கினும் சுபர் திருஷ்டியிருந்தாலும் மேன்மையான பெலத்துடனிருக்கில் அவ்வித பாவபலனையடைந்து சுகமடைவனென்றும் அறியவேண்டியது.

அவ்வித சீவசரீராதிபர்கள் மேற்கூறிய ஆறுவகைப்பெலன்களிலும் இவர்களுடன் கூடிய இவர்களுக்கு பிணையுற்ற மித்துரு சுபர்களாயுள்ள கிரகபெலன்களின்படி அவரவர்களின் கிரகஎண்ணால் அவர்களிருக்கும் ஸ்தானபெலனுக்குரிய எண்களால்பெருக்கியும் காரகாதிபன் அவன்நின்ற இராசிவசாத்நின்ற அதிபதி கூடவிருக்கும் கிரக சுபாசுபபெலனுக்குரிய எண்களை அந்தந்த இராசி யெண்களாற் பெருக்கி கண்டதுகையை பாபர் சுபருக்குரியதை பிரித்து பாபமதிகமா சுபபெலனதிகமாவென்று

ஆருயந்தும் வைத்துக்கொண்டவை அந்தந்த பாவசமுதாயமெ ன்றும் அதுமுதலான சீவசரீராதிபரிருக்கும் ஸ்தானங்களுக்கு 12-முதலிய சவ்யாப சவ்யபாவ நம்பர்படிக்குள்ள (1)முதல் (12) வரையுள்ள பாவாதிபதிகளை தனித்தனி சீவசரீரங்களுக்கு பாப ஸ்தானமா சுபஸ்தானபெலமா வென்றறிந்தும் அவரவர்கள் துகைகளையும் அந்தந்த கிரகங்களிருக்கு மிராசிபெல வெண்க ளாற் பெருக்கி சுபபாபத்துவத்துக்கு இசைந்தபடி அவரவர்கள் எண்களைக் கண்டறிந்தவை ஓர்சீவசரீரபாவத்திற்கு எத்தனும் பாவவதிகாரி அவர்கள் சீவசரீரங்களுக்கு பாபரோ அல் லது சுபரோ வென்றறிந்து சுபரானால் மொத்தமான ஓர் பாவ மெதுவோ அந்தபாவத்தில் உள்பிரிவினையாய் 1-முதல் 12-வரை பனிரெண்டுபாவங்களுக்கும் குறிப்பிட்டிருக்கும் லெக்கப்பிரகா ரம் உள்பாவத்தில் எத்தனாவது பாவங்களில் சுபர் பெலன்பெற் றிருக்கிறாரோ அத்தனாவது பெலன்களைக்கொடுக்கப்பட்டு ஜாதக னலனுபவிப்பன், எந்த உள்பாவத்தில் பாபிகள் சஞ்சரித்துஅந்த பாவலோபமுடையவ ராகிறார்களோ அந்த கணக்கிட்ட அத்தனா வது உள்பாவபலன்களை ஜாதகன் அடையப்படமாட்டானென் றுங் கண்டறிய வேண்டியது. முதலில் சீவசரீராதிபர்கள் சுபபா பமொத்தமான துகையென்று சொன்னவையை சுபத்துகையதி கமானால் பாபத்துகையைக்கழித்த சேஷம் சுபமிச்சமா அல்லது பாபமிச்சமாவென் றறிந்துக்கொண்டு அந்தத்துகையை ஓர் பக்க மெழுதிக்கொண்டும் சீவசரீரஸ்தானம் சரமானால் 5-ம், ஸ்திரமா னால் 10-ம், உபயமானால 15-லும், பெருக்கியதை 12-ல் கழித்த சேஷம் எத்தனையோ அதையோர்பக்கத்தில் எழுதிக்கொண்டும் மேற்கண்ட உள்பாவ கிரகங்களுக்கு பெலனுக்குரியதை (12)ல் கழித்த சேஷமெடுத்துக்கொண்டு இதையுல் முன்ஓர் பக்கத்தி லெழுதிய துகையினாற் பெருக்கி அத்துகையைசமுஷ்டிபாவத்தில் உள்பிரிவு (12) க்குள் ஒவ்வொன்றிற்கும் எத்தனை உள்பாவத்து க்குள் பாவஞ் சொல்லப்பட்டிருக்கிறதோ அந்தத்துகையில் கொடுத்த சேஷம் சுபபாபபெலத்தால் அத்தனாவது பலன் சுபம் அடைவன். அத்தனையாவது கணக்குள்ளவை பாபமாகில் அசுப மடைவனென்று நிதானித்தறிந்து சொல்லவேண்டியது.

முதல் மொத்தபாவ சீவசரீராதிபர்களைப் பற்றியகிரகத்தில் வந்த சுபபெலத்தை (9)ல் கழித்தசேஷம் திசையிலும் உள்பாவ கிரக சரீரசீவங்களில் கண்டகணக்கை (9)ல் கழித்த சேஷம்புத் தியிலும் சுபபெலமானால் அத்தனாவது மொத்தபாவம் அதற்குரி யஉள்பாவத்தை விருத்தியுடன் அந்த திசாபுத்தி காலத்தில் அடையக்கடவனென்றும், பாபபெலனாகில் சுபத்துக்குள் ஏற்ப ட்ட கணக்கைப்போலவே கண்டறிந்து திசாபுத்திகாலத்தில்அந்த மொத்தபாவமும் உள்பாவத்தின் பலனையும் இழந்து தவிப்பா னென்றும் பலவகைக்கஷ்ட நஷ்டங்களையடைவனென் றறிய வேண்டியது. இவ்வித பாவங்களையெல்லாஞ் சவ்யாபசவ்யக்கிரம மாக அறிந்து கூறவேண்டியது.



காரகர்களுடைய பலன்களையும் அவ்விதம் மேற் கண்டறிந் தும் பெலாபெலன்களை யூகித்துணர வேண்டியது.

ஏலேலசிங்கர்வினா:—ஜனரல்ரூல் மொத்தப்பாவ மென்பதென்ன.

திருவள்ளுவர்விடை:—

| இலக்கினபாவமாவது. | இரண்டாம்பாவம். |
|---|---|
| 1. நிறம் | 1. குடும்பம் |
| 2. தேகம் | 2. தனம் |
| 3. சிரசு உதரம் | 3. நேத்திரம் |
| 4. ரு. புலன் பொரி | 4. வித்தை |
| 5. நினைப்பு | 5. பூசெல்வம் |
| 6. கிலேசம் | 6. வாக்குசத்தியம் |
| 7. கீர்த்திகெம்னம் | 7. சாஸ்திரபரிசயம் |
| 8. கடவுள்வணக்கம் | 8. கவனம் |
| 9. சுபமங்களம் | 9. உத்தேசம் |
| 10. சந்தோஷம் | 10. பொற்பணம் |
| 11. வயசு | 11. நவரத்தினம் |
| 12. நாளதுஜென்மம் | 12. யோகவிஷயம் |

ஆ பாவமுதலில் உள்பாவப்பிரிவு (12)ஆம். ஆ உள்பிரிவு (12)

சவ்வியமானால் க-வது நம்பர் முதல்நேரும்.

அபசவ்வியமானால் கஉ-வது நம்பர்முதல் தலைகீழாகவும்.

சவ்யாப்சவ்யமானால் ரு-ச-ரு-வது நம்பரின்பலனும்.

அபசவ்யசவ்யமானால் கக-கஉ-வது நம்பரின் பலனும்.

மூன்றும்பாவம்.

1. போகம்
2. அடிமையாள்
3. கானவித்தை
4. வீரியதைரியம்
5. சகோதரம்
6. கர்னநோய்
7. கடுக்க்ன் ஆபரணம்
8. போஜனபாத்திரம்
9. தேவதாபக்தி
10. ஜெயம்பெறுதல்
11. ஆயுள்
12. கடன்

ஆக உள்பிரிவு 12.

நான்காம்பாகம்.

1. மாதுருவிஷயம்
2. வித்தை
3. வாகனம்
4. சுபம்
5. வியாபாரம்
6. இல்லிடம் வீடு
7. ஜெயமேன்மை
8. சுவுக்கியசுகம்
9. நிக்ஷேபம்
10. பரவிஷயம்
11. பாற்பசுமாடு
12. தேவஸ்தானம், கெமனம், (வடக்கு

ஆக உள்பிரிவு 12.

ஐந்தாம்பாவம்.

1. தாய்பாட்டன்
2. தாய்மாமன்
3. பூர்வபுண்யம்
4. தமிழ்வித்வான் சாகித்யம்
5. புத்திரர்கள்
6. கெர்ப்பம்
7. வித்தைமந்திரம்
8. விதரணம்
9. புத்தி
10. சகோதரம்
11. மேல்வருஜென்மம்
12. யோகாப்பியாசசாதனம்

ஆறும்பாவம்.

1. வியாதி
2. பீடை.
3. ஆயுதவிரணம்
4. சத்துரு
5. ஜெலகண்டம்
6. ஞாதிவிரோதம்
7. தேகவாதை மரணவாதை
8. ருணம்
9. கள்ளர்சோரத்துவம்
10. பெண்ரோகம்
11. விஷபாதை
12. யிறைகள்

ஏழாம்பாவம்.

1. பந்துஜனக்கூட்டம்
2. கெமனத்துவம் பச்சிமதி
3. களத்திரம்
4. கலியாணம்



5. விவாதவியாச்சியம்
6. புத்திரராவதுபின்மனையா (ளுக்கு
7. இராஜசன்மானம் கிரியை
8. ஓர்தொழிலுமின்றியாவரு (ம்வசியம்
9. வியாபாரம்
10. பின்தாரம்
11. மரணம்
12. புத்திரவிரோதம்

எட்டாம்பாவம்.

1. யுத்தகளமரணம்
2. கூட்டத்தால்பீடை
3. பொருப்பு (அல்லது) உயரத்தின்மேலிருந்து விழுதல்
4. நீண்டவியாதி
5. முயற்சிகெடுதல்
6. கிலேசரோணம்
7. கெடுதற்சிலவு
8. மரணம் கொலையாலும்
9. பகை
10. விஷபயம்
11. காராக்கிரகப்பிரவேசம்
12. அபஜெயம்

ஒன்பதாம்பாவம்.

1. பலபுண்ணியங்கள்
2. சத்கருமம், சீவனம்
3. கிராமபூமி க்ஷேத்திரலாபம்
4. இரக்கம், தயவு
5. மெய்ஞ்ஞானபூசை
6. மனைவீடு
7. தேவதாபக்தி
8. சவுரியம்
9. பிரதாபகீர்த்தி
10. கருப்பஊன்
11. வஸ்திராபரணம்
12. தேசாடனம், வாசம், இது (கீழ் திசையாம்

பத்தாம்பாவம்.

1. பிதாபலன்
2. பிதாபொருட்கள்
3. தர்மம
4. பாக்கியம்
5. மடஞ்சத்திரவிர்த்தி
6. பாடசாலை
7. திருப்பணி
8. உபதேசம்
9. சாதகாதி அஷ்டமாசித்தி
10. குளம் தடாகபிரதிஷ்டை
11. ஞானபதம்
12. வனங்கிரிகளின்வாசம்

பதினோராம்பாவம்.

1. மூத்தசகோதரம்
2. ஷை யோகாவயோகம்
3. பரதாரசம்போகம்
4. இராஜவித்தியாபிரபலம்
5. பூமியால்விர்த்தி
6. தண்டிகைவாகனம்
7. மனோதுக்கநிவர்த்தி
8. வஸ்திராபரணம்
9. நடனாடகசங்கீதத்தொழில்
10. ஞானஅறிவு
11. இராஜாங்கலிகிதவனுகூலம்
12. ஜலத்தின்மேற்பிரயாணம்

பனிரண்டாம்பாவம்.

1. பூப்ரதக்ஷிண மலை, நாடு, சஞ்சாரம்
2. அன்னியதேசஉத்யோகம்
3. தனவிரயம்
4. சகலவிஷயபோகம்
5. அசனசயனம்
6. விவாதம்ராசதெண்டனை
7. போகசுகம்
8. மந்திராதி பலவகைததொழில்கள்
9. கப்பல்வியாபாரம்
10. கருமானுபவம்
11. புண்ணியதியாகம்
12. யாகயெஞ்ஞம்

இவ்விதம் ஜனரல்ரூல் மொத்தபாவம் 12-ம் அறியவேண்டியது.

ஏலேலசிங்கர்வினா:—கிரகவெண்க ளென்பதென்ன,

திருவள்ளுவர்விடை:—கிரகங்களின் கிரணங்களென்றுபெயர்.

அதன்விபரம்.

| | | | |
|---|---|---|---|
| சூரியனாகில் | 5-ம் | சுக்கிரனாகில் | 16-ம் |
| சந்திரனாகில் | 21-ம் | சனியாகில் | 4-ம் |
| செவ்வாயாகில் | 7-ம் | இராகுவாகில் | 4-ம் |
| புதனாகில் | 9-ம் | கேதுவாகில் | 4-ம் |
| குருவாகில் | 10-ம் | | |

இவ்வித கணிதத்துகையையொன்றுசேர்த்தும், அவரவர்களின் ஐவகைப்பெலன்களைக் கண்டறிந்ததில் எவ்வளவு பெலனிருக்கிறதோ அந்தத்துகையுடன் பெருக்கினதுகையை ஓரிடத்திலெழுதிக்கொண்டு சுக்கிரனுடன் சனிக்கு (2-7-ம்) இடத்திலிருக்கிறவர்கள் அல்லது அவ்வாதிபதியுடன் கூடிய கிரகங்களின் பெலாபெலனுக்கிசைந்தபடி மேலேகூறிய கணிதப்படிக்குகிரகங்களுக்குக்கண்ட துகைகளை ஒன்றுப்படுத்தி மேலேசொல்லிய ஐவகைப்பெலன்களில் வருந்துகைகளை ஒன்றுசேர்த்து மேலேகூறிய கிரக குணிதத் துகைகளை யொன்றுபடுத்தி பெருக்கிக்கொண்டு இவ்விரண்டு, துகைகளையும் பெருக்கி 100-ல் கொடுத்து வந்தமிச்சம் ஆயுளென்றும் மேலேபெருக்கிய துகையை 9-ல் கழித்த மிச்சம் எத்தனையோ அத்தனைவது திசையில் ஜாதகனுக்கு ஆயுள்முடிவென்றும்



இத்திசைக்கணக்கை சாதகன் சவ்யமானால் மிச்சமானதுகையை எத்தனையோ அத்தனைதிசையென்றும், அபசவ்யமானால் மீந்த துகைபோக 9-ல் கழித்தசேஷம் எவ்வளவோ அத்தனையாவது திசையில மாரகமென்றும் கண்டறியவேண்டியது. மேலேகூறிய வருஷமும் இப்படியே யறிந்து வைத்துங்காணவேண்டியது. அவ்விதந்திசைகளையும் ஒட்டிக்கொண்டபின் ஈவுத்துகையை 4-ல்பெருக்கி 12-ல் கழித்த மிச்சஎண்ணை மேஷமுதல்எண்ணிக்கொண்ட இராசியில் சனி - இராகு - அல்லது கேது வருங்காலம் மாரகமென்றும், மேலேவந்த ஈவைபெருக்கி (12)ல் கழித்த மிச்சஇராசியில் குருவருங்காலமான வருஷத்திலும் வந்த ஈவுத்துகையை 5-ல் பெருக்கி வந்ததை 12-ல் கழித்த இராசியில் சூரியன் வருங்காலமாதமாகவும் ஈவுத்துகையை (24)ல் பெருக்கி 27-ல் கழித்த மிச்சம் நக்ஷத்திரமும் மூன்றும் ஈவுத்துகையை 26-ல் பெருக்கி 60-ல் கழித்த மிச்சம் கடிகையென்றும் மரணகாலகணிதங்களை அறியவேண்டியது.

இவ்விதமே ஒவ்வொரு லக்னங்களுக்கு கூடிய கிரகங்களை வைத்து இவ்வித கணிதஞ்செய்து ஆயுள் மரணகாலகணிதங்கள் செய்யவேண்டியது. இதிலும் கிரகபெலாபெலன்களை மெத்தயூகித்தலின்பேரிலும் உணர்ந்து கணிதஞ் செய்யாவிடில் யாவும் பிரழ்ந்து விடுமென்றும் அறியவேண்டியது. ஆகையால் அஸ்திபாரத்தைமிகவும் உணர்ந்து நிதானித்தல்வேண்டும். என்றறியவேண்டியது.

ஏலேலசிங்கர்வினா:—இராசிகணித வெண்களென்பதென்ன.

திருவள்ளுவர்விடை:—கிரகங்கள் கூடிநின்றவிராசி

| | |
|---|---|
| மேஷ - துலாமாகில் | 7-லும் |
| ரிஷப - சிங்கமாகில் | 10-லும் |
| மிதுன - விருச்சிகமாகில் | 8-லும் |
| கடகமாகில் | 4-லும் |
| கன்னி - மகரமாகில் | 5-லும் |
| தனுசுவாகில் | 9-லும் |
| கும்பமாகில் | 11-லும் |

மீனமாகில் 12-லும் பெருக்கிவைத்துக் கொள்ளவும்.

மேலேசொல்லிய இராசி கிரகஎண்களின் மூலமாய் ஒவ்வொருபாவபலன்களையுங் கண்டறியவேண்டியது.

ஏலேலசிங்கர்வினா:—ஆயுர்பாவ கெணிதநிர்ணய மென்பதென்ன.

திருவள்ளுவர்விடை:—லக்கினாதிபதியாகிய ஒன்றாமிடத்ததிபதி யெட்டாமிடத்ததிபதி, ஒன்பதாமிடத்ததிபதி, பத்தாமிடத்ததிபதி, சனிக்கு அஷ்டமாதிபதி இவர்களை யறிவதற்கு முன்னமே ஒவ்வொரு பாவங்களுக்கும் சீவசரீரகல்பனை செய்துக்கொண்டவர்களுக்கு ஸ்தானபெலன், கேந்திரபெலன், பஞ்சபெலன், திருஷ்டிபெலன், சம்மந்தபெலன், இந்த ஐந்துவகைப்பெலன்களையும் சுபாசுபப்படிக்குக் கண்டறிந்தும் சுபபெலன்களைமாத்திரம் எடுத்து அவரவர்களின் பெலனுக்கிசைந்த எண்களால் இராசி யெண்ணைப் பெருக்கியும் சீவசரீரங்களுக்கும் தனித்தனி கூடியகிரகமுதலியபெலனால் வந்த சுபயெண்களை யெடுத்துக்கொண்டு சரீரத்துக்கு எடுத்தபின் சீவனுக்கும் எடுத்துக்கொண்ட யெண்ணை சீவனதிகமா சரீரயெண்ணதிகமா வென்றறிந்திடில் சீவனதிகமும் சரீரமல்பமானால் சரீரகாப்பாற்றுத லதிகத்தின்மேல் விதியைத்தள்ளு மாயுளையுடையவன். அவை சுக்கிலபக்ஷசவ்யத்துக்கும் அபசவ்யமானால் மறுஜென்மமுண்டு. சவ்யாபசவ்யமானால் முன்ஜென்மத்தில் பாதிவயதானபடியால்இந்த ஜென்மத்தில் மத்திமவயதிலேயே முடிவு. அபசவ்யமானால் பால்யத்திலேயே ஆயுள்முடிவு.

இவ்விதங் கண்டறிதல் கிருஷ்ணபக்ஷத்துக்கு இதையேமாறி பார்த்துக்கொள்ளவேண்டியது. மேலேகண்ட சீவசரீர யெண்களை ஓரிடத்தில் குறிப்பிட்டெழுதிக்கொண்டும் முன் எழுதிய லக்கினாதிபதி முதல்கொண்டு அறுவகையார்களினும் அறுவகை ஸ்தானத்திலும் உரியகிரகங்களுக்கு மேலேசொல்லிய ஸ்தானாதி ஐந்துவகைப்பெலனில் தனித்தனி ஒவ்வொரு கிரகங்களுக்கும் உரிய சுபாசுபபெலன்களை யெடுத்துக்கொண்டு அவரவர்களின் எண்களை அந்தந்த இராசியெண்களாற் பெருக்கி அசுபமான பாபபெலனிற் கொடுத்தசேஷம் எவ்வளவோ அத்தனையாயுளென்றும் வந்த சேஷத்தை முன்பெருக்கிகணக்கிட்ட சீவத்தொகை



யால்பெருக்கி சரீரத்தொகையாலரிந்த ஈவு ஆயுளென்றுங்கண்டறியவேண்டியது. வந்த மிச்சத்தை 7-ல் பெருக்கி 12-ல் கழித்த சேஷம் மாதமென்றும், வந்தமிச்சத்தை 27-ல் பெருக்கி 30-ல் கழித்த சேஷம் - தினம் - இவைகளையெல்லாம் சவ்யம் நான்கின் மூலமாகக் கண்டறியவேண்டியது அவசியம்.

ஏலேலசிங்கர்வினா:—விசேஷ ஆயுர்தாய கெணிதங்களென்பதென்ன.

திருவள்ளுவர்விடை:—ரிஷபம், கடகம், துலாம், மீனம் இந்த நான்கு லக்கினங்களி லுள்ளவர்களுக்கு இதில் சவ்யரீதியான சாதகமாகியும் சீவசரீராதிபர்கள் சுபராகியேகரானவர்களுக்கும் சரமுபய இராசிகெதியின் சீவசரீராதிபர்கள் சஞ்சரித்து பெலத்துடனிருந்தவர்களுக்குந் தான்கீழேசொல்கிற விதப்பிரகாரங் குணித்துக்கண்டறிய வேண்டியதாகும்.

எப்படியெனில், சீவசரீராதிபர்கள் சுபர் குருவாகில் ஸ்தானபெலம், கேந்திரபெலம், பஞ்சமபெலம், திருஷ்டிபெலம், சம்மந்தபெலம். இவ்வைந்திலும் சுபபெலம். 5-க்குக்குறையாமலாகில் துருவம் தசலக்ஷத்ருவமுள்ள வருஷமென்றும், 4-க்குள்ளானால் லக்ஷாந்திரவருஷமுள்ள த்ருவக்கணக்கென்றும், 3-க்குள்ளாகில் தசசகஸ்திர வருஷத்ருவமென்றும், 2-க்குள் கிடையாவாகும் (சுக்கிரன்) ஐந்துக்குள் பட்டதாயின் சகஸ்திரவருஷத்ருவமும், 3-க்குள்ளானால் சதவருஷத்ருவமாகும். (சந்திரன்) 5-க்குள்பட்ட பெலனாகில் சதவருஷத்ருவமும், 3-க்குள் தசவருஷகணிதத்ருவமும், (புதனாகில்) 5-பெலனானால் தசவருஷக்கணிதத்ருவமும், 3-க்குகீழ் திரிவருஷகணிதத்ருவமும், வைத்துக்கொண்டும் மேற்கூறியவர்களாகிய சீவசரீர ஐக்கியர்களுக்கு (1-8-5-10) இவ்வித நான்கு ஸ்தானாதிபர்களும் இவ்வித பூரணபெலனாகி ஐவகைப் பெலன்களிலும் தனக்குரிய சுபாசுப பெலன்களிலும் உள்ளஸ்புடப்படிக்குள்ள துகைகளை இராசியெண்ணாற் பெருக்கி மேலேகண்ட தசலக்ஷமுதலாகிய துகைகளில் கொடுத்துக்கண்ட சேஷமேற்பட்டவருஷம் ஆயுளுக்குமேல விதியைத்தள்ளி முனிவர் முதலிய சித்தயோகிகளாகி ஞாதாக்களாகியும் சுவாசவாசியை விருத்திசெய்து வாழப்படுவர்களென்றும், அவ்விதம் பெலாபெலன்களை யூகித்துக்கண்டறிந்து கூறல் வேண்டியது,

ஆயுர்பாவத்திற்கு இவ்விதமே (12) பாவங்களையும் நிர்ணயித்து சீவசரீரங்களின் விதங்களுடன் ஆராதித்து வரவேண்டுவது கிரமம்.

ஏலேலசிங்கர்வினா:—சகோதராதி புத்திரகளத்திர பாவங்களின் கெணித நிர்ணயமெப்படி.

திருவள்ளுவர்விடை:—அந்தந்த பாவகாரகர்களுக்கும் அந்தந்த பாவாதிபதி நின்ற ஸ்தானத்திற்கும் அவ்வித பாவஸ்தானாதிபர்கள் எந்த வீட்டிலிருக்கப்பட்டிருக்கிறார்களோ அதே கிரகம் இராசி சீவனென்றும் பாவாத் பாவாதிபதி யெந்த வீட்டிலிருக்கிறானோ அவ்வதிபனும் நின்ற விராசியும் சரீரமென்றும் பெயராகும். சீவசரீராதிபர்கள் பெலமற்றபர்வரார் சிலொருவருக்கொருவர் அசுப்பாப க்ஷேத்திரகெதியாகி சனியாகி புதன்வீட்டில் நிற்கினும் புதனாகிச் சனிவீட்டில் நிற்கினும் அந்தந்த் பாவகாரகஸ்தானத்தில் இருக்கினும் விரோதிகள் பகை; நீச அசுபபெலன்பெற்றாலும் சீவன் குறைந்து சரீரமதிகமானாலும் அந்தபாவங்களைவிர்த்திவாராதென்றும் பாவர்களாகினும் அவ்விதபாவமே உண்டாகப்படமாட்டாதென்றும்; உண்டாகினும் அனுபவமனுகூல சுகம்பெறானென்றுந் திர்க்கமாகச்சொல்லவேண்டியது. சீவசரீராதிபருடன் கூடியதும் சீவசரீராதிபர்களவர்கள் அந்தந்த பாவஸ்தானமிவைகளில் நின்ற கோட்களின்பெலன்களை ஆராய்ந்து எடுத்துள்ளதற்குரிய அவரவர்களின் எண்களை இராசிக்குக்கூறிய பெல எண்களாற்பெருக்கி அந்தந்தக்கிரக எண்களிற்கொடுத்தசேஷம் அந்த பவசம்பந்தமான ஒவ்வொருகிரகங்களின் தொகைகளைக் கண்டறிந்து அரித்துக்கண்டசேஷம் அந்த பாவத்துக்கும் அதிபதிக்கும் சம்மந்த கிரகங்கள் பாவரா சுபராவென்றும் எவ்வளவு பெலமுடையவர்கள் என்றும் அறிந்ததைக்கழித்துக்கண்டசுபபெலத்தில் கொடுத்ததொகையான ஈவுகளில் சுபஈவெத்தனையோ அத்தனை சகோதரமென்றும், களத்திர புத்திராதி பிதுர்வர்க்காதி மாதுருவர்க்காதி இவைகளையும் முன்போலவே கண்டறிந்து சொல்லவேண்டியது. அறிகையில் ஸ்திரீபுருஷகிரகங்களையுங்கண்டு உரைக்க வேண்டுவனவாம்.



ஏலேலசிங்கர்வினா:—யோகாவயோக கணிதமாவதென்ன.

திருவள்ளுவர்விடை:—5-9-10-1 இந்த நான்கு இடங்களையும் இவ்வதிபர் எந்த வீட்டிலிருக்கிறார்களோ அவ்வீட்டதிபனும் யோகபாவத்துக்கு சீவனென்று மேற்கூறிய ஸ்தானாத் ஸ்தானாதிபதி யெந்த வீட்டிலிருக்கின்றார்களோ அவ்வதிபதியும் நின்ற இடமும் சரீரமென்றும் பெயராகும்.

மேற்கண்ட சீவசரீராதிபர்கள் உத்தமபெலத்துடனும் சுபக்ஷேத்திரமாயும் ஒருவராகியும் மித்துருவில் சுபராகி சுபபெலத்துடனிருக்கினும் சேரினும் இந்த நான்குவகையார்களுக்கும்(16) பெலனுக்கு மேலாகியிருக்கின் சக்ரவர்த்தித்துவமண்டலாதிபனானஇராசயோக மாள்வனென்றும் (14)க் குட்பட்டபெலனாகில் தேசாதிபதியாகி யாவரும்வணங்கச் செங்கோல்செலுத்துவன்: (12)க் குள்ளாகில் சிலராச்சியாதிபனாகினும் சமானவரசர்களும் பலரையடுத்துடனானவனாய் வாழ்ந்து இராசயோகவானவன் (9)க்குள்ளாகில் அரசனுக்குள் சிற்றரசுசெய்வன். (6)க்குள்ளாகில் சிலபூபதியாகியும் பூமிகளைமாத்திரம் ஆட்சியாகி சிலருக்கும் சிலவகைகளுக்கும் அதிபதியாவன் (5)க்குள்ளாகிலும் இராஜாக்களுக்குள் பிரபல்யவதிகாரியாவன். இராஜயோகமுடையவன் (4)க்குள்ளாகில் அதற்குக்கீழான இராஜயோகவானவன் (3)க்குள்ளானால் குடித்தனவதிப ராஜயோகமும் இராஜசீவனவதிகாரியாவன். ஒருவருக்குள் படிந்துவாழ்வன் (2)வரை மேற்படியே 2-க்குக் கீழானால் தரித்திராதி வகையை யடைந்தும் வாழ்வனென்றறிய வேண்டியது. மேலேகண்ட 4-ஸ்தானமூலிய சீவசரீராதி பத்தியக்கணக்குகளை தனித்தனியெடுத்து இராசியெண்ணாற் பெருக்கி சீவசரீர அயிக்க ஆதிபத்தியம் இந்த நான்குஸ்தானத்தில் எதற்கு வருகிறதென்று ஆராய்ந்து அதை இராசியெண்ணாற் பெருக்கி (4)ல் வகுத்துக்கண்டவைகளை கீழேவரும் முறைபே கண்டங்களான வயதுகளாகக்கொண்டு அவ்விதம் ஒவ்வொரு ஸ்தானத்துக்கும் 1-5-9-10-என்ற வதிபதிகளின் பெலமூலிய கண்டங்களை ஆராய்ந்து முதற் கண்டத்துக்கு இரண்டாங்கண்டம் சுபம் எப்படி. அதற்கு அது சுபபாப பெலனறிந்து சவ்யமானால் பாலியவயதில் மேற்கூறிய பிரதம, துவிதிய, திரிதீயம், சதுர்த்தம் என்

றகண்டப்படிக்குப் பிரித்தவயதில் சுபாசுபப்படிக்குள்ள யோக பிரபலத்தையும் அவயோகங்களையும், அபசவ்யமானல் நான்காவதுகண்ட முதற்கொண்டு சவ்யாசவ்யமானல் 1-2-4-3-ஆகவும் கண்ட பெலனகும்.

அபசவ்ய சவ்யமானல் 4-3-1-2ஆன கண்ட பிரிவுக்கு அவனுக்கேற்பட்ட வாயுளில் 4-ல் ஒருபாகத்திற்கு இவ்விதங்கண்டஞ்செய்து யோகாவயோக ராஜயோகம் தரித்திரயோகபலஙகளைக் கூறல்வேண்டும்.

இந்த நான்குயோக பாவஸ்தானங்களுக்கு 9-5-10-1-அதிபர்களினலாவது இருப்பவர் சுபபெலத்தை யுடையவர்களாவது மொத்தமான அவஸ்தா சதுர்த்தங்க ளுள்ளடங்கிய கண்டாதிபுத்தியத்தில் எந்த கண்டாதிபர்க ளாகிறர்களோ அந்த கண்டவயதில் பிரபலயோகமும் ராஜாதிபத்தியாதி பிரபலகீர்த்தியும் உண்டாகும். மற்றயவதிபராகியதில் 4-7-2-க் குடையவரல்லது நின்ற வதிபர்களாகில் சமயோக மளிப்பார்களென்றும் மற்றய 6-8-3-11-இவ்வித ஸ்தான மதிபதிகளாகில் கொடுமையான துன்பத்தையும் யோகபங்கத்தையும் பலவித கஷ்டநஷ்டங்களையுங் கொடுப்பார்களென்றறிய வேண்டியது.

ஏலேலசிங்கர்வின:—கெண்டாந்த நட்சத்திர மென்றுலென்ன.

திருவள்ளுவர்விடை:—கெண்டாந்தகாலம்.

கெண்டாந்த தோஷமசு வினிக்கி ரெட்டாகும்
கேட்டையத்தந் தனக்கொன்றும் மகத்துக்கோரெட்டாம்
தண்டார்சித் திரைமூலம் நாலாண்ட தாகும்
சாற்றரிய வாயில்யம் வருடமிரண்டென்பார்
கண்டாருத் திரமாத மிரண்டாகும்பூசம்
கருதுதிங்கள் மூன்றகும் பூராடந்தனக்கே
கொண்டாடும் மாதமொன்பான் றன்னிலேபிதுர்க்குக்
கொடிதாகு மரிட்டமெனக் கூறினர் கற்றுணர்ந்தோர்.

என்றதினல் நட்சத்திரம் அசுவனி - ஆயிலியம் - மகம் - கேட்டை - மூலம் - ரேவதி - இந்த நட்சேத்திரங்கள் சந்திகளிலும் மத்தியத்திலும் ஜெனனமான சிசுவினுடைய தகப்பனுக்கு அரிஷ்டமென்று அறியவேண்டும், இதற்கு ஜெபஹோமாதிகள்செய்ய வேண்டும்.



இதுவுமன்றி, உத்திரம், அனுஷம், முதற்பாதத்திலும், உத்திராடம், ரேவதி, 2-ம்பாதத்திலும். ஆயிலியம், பூராடம், 3-ம்பாதத்திலும். அவிட்டம் 4-ம் பாதத்திலும். ஜெனித்த சிசுவின் தந்தைக்கும்; பூசம், ஆயிலியம், மகம், சித்திரை, பூராடம், உத்திராடம், ரேவதி, முதற்பாதத்திலும். உத்திரம், விசாகம், 2-ம்பாதத்திலும், மூலம் 4-ம் பாதத்திலும், பிறந்த பிள்ளையின் தாய்க்கும்; பூசம், சித்திரை, பூராடம், 3-ம் பாதத்திலுதித்த சிசுவுக்கும். சதயம், பூரட்டாதி, முதற்பாதத்திலும். மகம் 2-ம் பாதத்திலும். அனுஷம் மூலம், 3-ம் பாதத்திலும், பூராடம் 4-ம் பாதத்திலும். ஜெனித்த சேயின் தாய்மாமனுக்கும். மகம், உத்திரம், மூலம், முதற்பாதத்திலும். கேட்டை, 4-ம் பாதத்திலும். பிறந்தபிள்ளையின் தாய்தந்தைக்கும், சித்திரை முதற்பாதத்திலும். விசாகம், அனுஷம், மூலம் 4-ம் பாதத்திலும். ஜெனித்த குழந்தையின் பாட்டன்பாட்டிக்கும். ஆயிலியம், 2-ம் பாதத்திற் பிறந்த பிள்ளையின் தமயனுக்கும் மூலம் முதற்பாதத்திலுதித்த குழந்தையின்சிறியதந்தைக்கும் தோஷமென்று சொல்லவேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| அசுவனி - | மகம் - | மூலம் | 1-ல் | சிசுவுக்குத்தோஷம் |
| ,, | ,, | ,, | 2-ல் | மாதாவுக்குத்தோஷம் |
| ,, | ,, | ,, | 3-ல் | புத்திரதோஷம் |
| ,, | ,, | ,, | 4-ல் | நன்மையுண்டாம் |

தேறுங்கேட்டையொன் றகிற்றய்பாட்டியும்
செப்பிரண்டினிற் றய்பாட்டன்மூன்றிலீற்
கூறுமாமன்நாலேந்தினின் மைந்தர்போம்
குலவுமாறிற்பொருட்சேத மேழினில்
மீறுவங்கிஷஞ்சேதமா மெட்டினில்
மிக்கமூத்த தமக்கைமரிக்குமே
சிறுமொன்பதிற்பாரியின் றந்தைசாம்
செய்யபத்தாறிற் சகலமுந்தந்தையே. என்பதால்,

கேட்டை நட்சத்திரம் ஆதியந்தமானநாழிகை 60-யும் 10-ஞ பங்குசெய்தால் பங்கு 1-க்கு 6-நாழிகை ஆகின்றது, அதில்

சிசுவினுடைய ஜெனனம்.

1-முதற்பங்கானல் தாயைப்பெற்ற பாட்டியும்
2-ம் பங்கானல் தாயைப்பெற்ற பாட்டனும்
3-ம் ,, தாய்மாமனும்
4-ம் ,, தாயாரையும்
5-ம் ,, சிசுவையும்
6-ம் ,, வங்கிஷத்தையும், பொருளையும்
7-ம் ,, இருவங்கிஷத்தையும்
8-ம் ,, மூத்தசகோதரங்களையும்
9-ம் ,, பெண்கொடுத்தமாமனையும்
10-ம் ,, பிதாவையும் சர்வத்தையும் நாசம்பண்ணும்.

இதற்குத் தக்கபடி சாந்திசெய்தால் பரிகாரமாகும்.

பார்வதிக்கு அபிஷேகஞ்செய்ய அதிகநன்மையுண்டாம்.

சாற்றுமாயிலியம் முதற்கால்நலம்
  தனமாறும்ரெண்டின் மூன்றிற்றாய்தந்தைநால்
ஏற்றரேவதிநாற்காலிற் றந்தைநோய்
  இனியவுத்திரம் முன்காற்பிதாவுறும்
தேற்றுங்கௌவை பரணிகான்மூன்றினிற்
  செய்யவாண்பிதா பெண்பெறிற்றாயர்நோய்
போற்றும்நற்கோட்கள் நோக்கிடிற்கேடிலை
  புனிதர்நந்தொடக் காடர்புரிந்ததே.

புரிந்தரேவதியந்தமுன் னாண்முதற்
  போந்தகேட்டையு மூலமுமிந்நிலை
தெரிந்தபாம்பந்த மாகிமுன்னாழிகை
  செய்யரெண்டினிற் பிறந்தவர்தீயரே
தெரிந்துமாவின்பின் கானடுமுன்னுறச்
  சேயைவாங்கிப் பசுத்தானமீந்துபின்
வருந்திவீமேசர் தாளைவணங்கியே
  வளர்க்கப்பிள்ளை மகிழ்வுடன்வாழுமே.



ஆயிலியம் முதற்பாதம் யாவருக்கும் நன்மை
,, 2-ம் பாதம் தனச்சேதம்
,, 3-ம் பாதம் மாதுர்கண்டம்
,, 4-ம் பாதம் பிதுர்கண்டம்

இத்தோஷமறிந்து சாந்திசெய்யவும்.

ஆயிலியம் - பரணி - 3-ம் பாதம் பெண்பிறக்கில் ,, மாதுர்கண்டம்
,, ,, 3-ம் பாதம் ஆண்பிறக்கில் பிதிர்கண்டம்

மூலநட்சேத்திரம் ஆதியந்தமான நாழிகை 60-யும் 12-பாகஞ்செய்தால் பங்கு 1-க்கு 5-நாழிகை ஆகின்றது.

சிசுவினுடைய ஜெனனம்.

முதற்பங்கானல் தந்தைக்குத்தோஷம்
2-ம் பங்கானல் தாய்க்குத்தோஷம்
3-ம் ,, தமயனுருக்குத்தோஷம்
4-ம் ,, தமக்கையருக்குத்தோஷம்
5-ம் ,, மாமன்மாருக்குத்தோஷம்
6-ம் ,, சிறியதந்தைபெரியதந்தைக்குத் தோஷம்
7-ம் ,, சிறியதாயார்பெரியதாயாருக்குத்தோஷ
8-ம் ,, சம்பத்துக்கும்
9-ம் ,, சிசுவுக்கும்
10-ம் ,, தரித்திரம்
11-ம் ,, இராச்சியம்
12-ம் ,, சம்பத்தையுமுண்டாக்கும்

பூசம் - பூராடம் முதற்பாதம் தந்தைக்கும்
,, ,, 2-ம்பாதம் தாயாருக்கும்
,, ,, 3-ம்பாதம் தாய்மாமனுக்கும்
,, ,, 4-ம்பாதம் சிசுவுக்கும்தோஷம்

பரணி - கார்த்திகை - திருவாதிரை - மகம் - பூரம் - விசாகம் இந்த நட்சத்திரங்களொன்றில் நான்காம்பாதம் முதலில் 5-நாழிகைவரையில் மாதுருகண்டமென் றறியவேண்டியது.

உத்திரம் - அசுவனி முதற்பாதம்
ஆயிலியம் - ரேவதி நான்காம்பாதம் } பிதிர்கண்டம்

சித்திரை 1-ல் - 2ல்
பூசம் 2-ல் - 2ல் } பெண்பிறந்தால் மாதுர்கண்டம்
உத்திரம் 2-ல்
பூராடம் 3-ல் } ஆண்பிறந்தால் பிதிர்கண்டம்

வெண்பா.

பூராடம்முக்காலும் பூசத்திடையிரண்டும்
சீராகச்சித்திரையிற் செல்லரையும்—நேராக
உத்திரத்துக்காலும் உயிரிழப்பர்தந்தைதாய்
புத்திரனைப்பெற்றெடுத்த போது. என்பதாலும்,

சொன்னபூசம்சித்திரைபூ ராடநாளில்மதிதோன்றப்
பின்னுமுதற்கால்நேராகப் பிதாதாய்பிள்ளைமாமன்சாம்
பண்ணென்றென்பான்சனிசேயும்பாமபொன்பதிலும்பிதாமரணம்
பொன்னேக்காதவெட்டேழிற்புதல்வன்பொன்றுஞ்சனிசெவ்வாய்

என முதுமொழி இதுவுமன்றி,

அஸ்தம்
பரணி } 3-ம் பாதமாகியிரவிற் சிசுபிறந்தால் மாதுர்கண்டம்.

ஆயிலியம்
கேட்டை
ரேவதி } 4-ம் பாதமாகி யிரவிற்சிசுபிறந்தால் பிதிர்கண்டம் சந்தியானல் சிசுகண்டம்

அசுபதி
மகம்
மூலம்
கார்த்திகை
உத்திரம்
உத்திராடம்
பூசம்
பூராடம்
சித்திரை } இந்த ஒன்பது நட்சத்திரங்களில் எந்த நட்சத்திரமாகிலும், முதற்பாதமாகி யிரவிற் சிசுபிறந்தால் தாய்க்குக்கண்டம். பகலிற் சிசுபிறந்தால் தந்தைக்குக்கண்டம் பகல் நாழிகை உகூ-உகூ உகூ-க்குப் பிறந்த சிசுவுக்கே கண்டமென்றறியவும்.

| | |
|---|---|
| ரோகணி | மாமனுக்காகாது |
| ஆயிலியம்-மூலம் | மாமிக்காகாது |



| | |
|---|---|
| விசாகம் | மைத்துனனுக்காகாது |
| கேட்டை | தமயனுக்காகாது |

அசுபதி - மகம் - மூலம் முன் 2-நாழிகையும்
ஆயிலியம் - கேட்டை - ரேவதி பின் 2-நாழிகையும் தீது!

இந்த வேளைகளிற் பிறந்தபிள்ளைகளுக்குத் தோஷமுண்டு உடல் - உயிரை - நற்கோள்நோக்கத் தோஷம் நிவர்த்தி.

விசாகம் - பரணி - பூரம் - மகம் - திருவாதிரை - கார்த்திகை - இந்த நட்சத்திரங்களொன்றில் 4-ம் பாதம் முதலில் 5-நாழிகை வரையில் மாதுர்கண்டமென அறியவேண்டும்.

தியாச்சியம் - வர்ஜ்ஜியம் - 4-நாழிகை வரையிலிருக்கும் இந்தக்காலத்தில் ஜெனனமான முதலாவது நாழிகையில்பிதாவும் 2-வது நாழிகையில் மாதாவும், 3-வது நாழிகையில் தமயனும், 4-வது நாழிகையில் சிசுவும் நாசமென்றறியவேண்டும். 1-2-3-4. நாழிகைகளுக்கு கிரமமாக ருத்திரன் - எமன் - அக்கினி - மிருத்யு - அதிதேவதைகள் ஓமங்கள் செய்யப்பரிகாரம்.

நாதர்முன்னுவா பத்திற்சேய் நோயதாம்
நந்தி ரண்டிற்றாய் முற்பத்திற் றந்தைநோய்
சேதம் நாற்பத்தின் மாமனேம் பத்தினிற்
சேயதாமாறு பத்தினில் நன்மையே
போதுமாமக மூலமுற் காலினிற்
புதல்வர் நோயிரு கான்மூலமாதுருந்
தீதறும்பேறு மூன்றில்நால் நல்லதே
செய்யசற்குரு தாளுறத்தேடுமே. என்பதால்,

அமாவாசைநாள் புத்திரர் பிறக்கில் இந்த நாள்பகலிரவு நாழிகை 60-யும் 6-பங்கு செய்தால் பங்கு 1-க்கு பத்துநாழிகை யாகின்றது. சிசுவினுடைய ஜெனனம்.

முதற்பங்கானல் பிறந்தபிள்ளைக்குத்தோஷம்
2-ம் பங்கானல் தாய்க்குத்தோஷம்
3-ம் பங்கானல் தந்தைக்குத்தோஷம்
4-ம் பங்கானல் மாமனுக்குத்தோஷம்
5-ம் பங்கானல் குழந்தைக்குத்தோஷம்
6-ம் பங்கானல் நன்மையென்றறியவேண்டியது.

இன்னமும்,

ஆயிலியம் - கேட்டை - ரேவதி ௴-3
பரணி - உத்திரம் - சித்திரை ௴-6
அஸ்தம் - பூசம் - உத்திராடம் ௵-1
மூலம் - கார்த்திகை - பூராடம் ௵-4
மகம் - ௵-8. அசுபதி ௵-16

இவ்விதம் வருஷம் மாதங்கழித்தபின் சிசுவுக்கு
ஆயுள் தீர்க்கமென்றறிய வேண்டியது.

அசுபதிக்கு வஸ்திரம், ரேவதிக்கு நெய், கேட்டைக்கு பசு, மகத்துக்கு பொன், மூலத்துக்கு உளுந்து; உத்திரத்துக்குளள்ளு பூசத்துக்கு பசு, பூரத்துக்கு சொர்னம், சித்திரைக்கு வஸ்திரம்; ஆயிலியத்துக்கு குதிரை, அனுஷத்துக்கு சொர்னம், இத்தானங்களைச்செய்ய நன்மை பயக்கும்.

ஏலேலசிங்கர்வினா:—கெண்டாந்தகாலத்தை நாளைக்கொண்டே சொன்னீர்களேயொழிய கோளைக்கொண்டு சொல்லவில்லையே அதிற்சிலது சொல்லக்கோருகிறேன்.

திருவள்ளுவர்விடை:—அப்படியுமுண்டு கேட்பாயாக.

கதிரவற்கிரண்டீரா றிற் காரியுந்தந்தைக்காகா
மதிதனக்கிரண்டீராறில் மந்தனுமாதுர்க்காகா
கதிர்குஜன் அரவங்கூடிக் காரகத்தானம்நிற்க்
அதிதுரைதந்தைதாய்க்கு அரிட்டமென்றுரைக்கலாமே.

உதயராசிக்கு 5 - 10-ல் செவ்வாயிருந்தால் மாமனுக்கும்
,, 5 - 10-ல் சனியிருந்தால் பிள்ளைக்கும்
,, 5 - 10-ல் சந்திரனிருந்தால் மாதாவுக்கும்
,, 5 - 10-ல் சூரியனிருந்தால் பிதாவுக்கும்

தோஷமுண்டு. சுபக்கிரகம் நோக்கில் தோஷநிவர்த்தி.

சந்திரன் நின்றஇராசிக்கு ஏழில் செவ்வாயாவது, சனியாவது நிற்கில் மாதாமரணம்.

சூரியன் நின்றஇராசிக்கு ஏழில் செவ்வாயாவது சனியாவது நிற்கில் பிதாமரணம்.



பாபக்கிரகங்கள் உடலையும் உயிரையும் பற்றிநிற்கில் பிள்ளை மரணம்.

இலக்கினம் 5-8-12. இதில் சூரியன், செவ்வாய், சனியிருக்கப் பிதாவுக்குத் தோஷம்.

உதயத்துக்கு 6-மிடத்தில் ஆதித்தனிருக்க அந்த ஆதித்தனுக்கு 7-ல் சனியாவது, செவ்வாயாவது, நிற்கப் பிள்ளையும்பிதாவும் மரணம்.

உதயத்துக்கு 6-மிடத்தில் சந்திரனிருக்க அச்சந்திரனுக்கு 7-ல் சனியாவது; செவ்வாயாவது நிற்கப் பிள்ளையுந்தாயும் மரணம்.

உதயத்துக்கு 9-8-12-ம் ஸ்தானத்தில் சூரியன் - செவ்வாய் சனி - க்ஷீணசந்திரனிருக்க அரிஷ்டம்.

உதயத்துக்கு 7-8-ல் சனி செவ்வாயிருக்க அரிஷ்டம்

உதயத்துக்கு 7-ல் சனி செவ்வாய் சுக்கிரனிருக்க அரிஷ்டம்

உதயத்துக்கு 5-8-9-12 இந்த ஸ்தானங்களில் சூரியன்-செவ்வாய் - சனி - க்ஷீணசந்திரன் இவர்கள் கூடிநின்றாலும் அல்லது அந்த ராசிகளில் தனித்தனியாக நின்றாலும் அரிஷ்டம்.

உதயத்துக்கு 9-11-ல் சனி - செவ்வாய் நிற்க அல்லது 9-மிடத்தில் இராகு - கேதுக்களிருக்கப் பிதாவுக்கு அரிஷ்டம்.
உதயத்துக்கு 3-ல் அங்காரகனிருக்க சகோதர அரிஷ்டம்.

உதயத்தில் சூரியன் - சனி கூடியிருக்க செவ்வாய் பார்க்கில் அரிஷ்டம்.

அஞ்சுபத்துநவம்பனி ரண்டினில்
அருக்கனேக வவன்பிதாதோஷமாம்
எஞ்சுநாலெட்டுப் பத்துப்பனிரண்டில்
இந்துவுஞ்செந்தீ வண்ணனுஞ்சேர்ந்திட
மிஞ்சுமாதுரு வர்க்கமுந்தோஷமாம்
மேவமூன்றுறும் எட்டுப்பனிரெண்டிற்
செஞ்சுடர்ப்பானு சேயுடன்சேர்ந்திடச்
சிறந்தசோதரர் சேதமதாகுமே.

உதயத்தில் சனியும், நான்காமிடத்திற் செவ்வாயும், ஏழாமிடத்திற் சூரியனுமிருக்கச் சுபக்கிரகங்கள் நோக்கில்லையாகில் பிள்ளைபிறந்தவன்றே பகலில் மரணம்.

உதயத்தில் ராகு-கேது நீற்கச் சுபக்கிரகம் பாராதிருக்க அன்றிரவே சிசுமரணம்.

உதயத்துக்கு 7-மிடத்தில் செவ்வாயும் 8-மிடத்திற் சூரியனுமிருக்க அரிஷ்டம்.

மீனத்தில் கேதுவும், மிதுனத்தில் இராகுவும் இருந்தால் சுபம். சுபபலனுகவே யிருக்கும்.

பகலிற் பிறந்தவருக்குப் பதினோராமிடத்திற் சூரியனும், இரவிற் பிறந்தவருக்குப் பதினோராமிடத்திற சந்திரனுமிருக்கச் சகலதோஷமும் நிவர்த்தி சுபம்.

(அரிஷ்டபாகம் ரு-க்கு விபரம்.)

| | | |
|---|---|---|
| ஒருவருஷமுதல் 12-வருஷம் | வரையில் | பாலாரிஷ்டம் |
| 13-வருஷமுதல் 20-வருஷம் | வரையில் | யெவ்வன அரிஷ்டம் |
| 21-வருஷமுதல் 32-வருஷம் | வரையில் | கௌமாரகஅரிஷ்டம் |
| 33-வருஷமுதல் 70-வருஷம் | வரையில் | விருத்தாரிஷ்டம |
| 71-வருஷமுதல் 100-வருஷம் | வரையில் | பூரணஆயுசு. |

ஏலேலசிங்கர்வினு:—பாலாரிஷ்ட தோஷம் எப்படிப்பார்த்துச் சொல்லுவது.

திருவள்ளுவர்விடை:—பாலாரிஷ்டத்தைப்பற்றிப் பார்க்கும்போது அதை யிரண்டுவிதமாய்ப் பார்க்கவேண்டும்

முதலாவது ஜெனனகாலத்தில் இலக்கினத்திலிருக்கப்பட்ட கிரகஸ்திதியை அனுசரித்துச் சொல்லவேண்டும்

இரண்டாவது சந்திரனிருக்கப்பட்ட நட்சத்திரத்தைப்பார்த்துச் சொல்லவேண்டும்.

காலை மாலையில எந்தராசியிலாவது சந்திரவோராவில்ஜெனனமாய் அந்தலக்கின நவாம்சையுண்டாகிய ராசிகளில் பாவக்கிரகங்களிருந்தால் அரிஷ்டயோகமாம்.



கேந்திரங்களான (1-4-7-10) இந்த ஸ்தானங்களில் சந்திரனும் பாவக்கிரகங்களும் ஒவ்வொருவரும் ஒரேபாத சாரத்திலிருந்து சுபக்கிரகங்கள் வீக்ஷண்ய மில்லாதிருந்தால் அரிஷ்டயோகமாம்.

பகசக்கரமாகிய இராசிச்சக்கரம் பூர்வபாகத்தில் அசுபகிரகங்களும், உத்தரபாகத்தில் சுபக்கிரகங்களுமிருந்து ஜென்மலக்கினம் விருச்சிகமாகில் அரிஷ்டயோகமாம்.

இராசிகளுக்கு உத்தரபூர்வார்த்தங்கள் லக்கினத்தைக்கொண்டே பார்க்கவேண்டும்.

ஏலேலசிங்கர்வினு:—இராசிகளுக்கு உத்தரார்த்தமென்றும், பூர்வார்த்தமென்றும் எவ்விதங்காண்கிறது.

திருவள்ளுவர்விடை:—இராசிகளுக்கு உத்தரார்த்தம் 6. பூர்வார்த்தம் 6. இலக்கினுதிக - பஞ்சம - சஷ்டம - சத்தம-அஷ்டம - நவமும் உத்தரார்த்தமாகவும், லக்கினத்துக்கு துதியத்திரிதிய - ஏகாதச துவாதசங்கள் பூர்வார்த்தமாகவும் பார்க்கவேண்டும்.

இலக்கினத்தில் எத்தனைபாகங்கள் சென்றனவோ அத்தனைபாகம் சதுர்த்தத்தில் பூர்வார்த்தமென்றும், மீதபாக்கிபாகம் உத்தரார்த்தமென்றும் பார்க்கவேண்டும்.

இலக்கினத்திற்சென்ற பாகங்களை தசமத்தில் உத்தரார்த்தமாகவும். மற்றபாகம் பூர்வார்த்தமாகவும் எண்ணிக்கொள்ளவேண்டும்.

பிறந்திடும்பிள்ளையெல்லாம் பேருலகதனிலன்றே
இறந்திடுமிதுதப்பாது எட்சிகாநீராறெட்டில்
அறைந்திடுகிலத்துச்சோம னமர்ந்திடவவன்பார்நீயர்
உறைந்திடப்பிறந்தபிள்ளை உடலம்விட்டோடிப்போமே.

இலக்கின சத்தமங்களுக்கு இருபுறமும் (2-12-6-8-ல்) பாவக்கிரகங்களிருந்தாலும் பார்த்தாலும் அரிஷ்டமாகும்.

இலக்கினசத்தமத்தில் பாவக்கிரகங்க ளிருக்கச் சந்திரன் பாவக்கிரகங்களுடன் சேர்ந்து சுபக்கிரகங்கள் பார்வையில்லாதிருந்தால் அரிஷ்டமாகும்.

க்ஷீணசந்திரன் துவாதசத்திலிருக்க லக்கினஷ்டமங்கள் பாவக்கிரகங்களாய்க் கேந்திரஸ்தானங்கள் சுபக்கிரகங்களாக இருந்தாலும் பிறந்தசிசு பிழைக்காது.

சுக்கிலபக்ஷப் பாட்டிமைமுதலாக 10-நாள்வரை மத்தியசந்திரனென்றும், பின் 10-நாள்வரை க்ஷீணசந்திரனென்றும் மீதம் 10-நாளும் பூரணச்சந்திரனென்றும் அறியவேண்டும்.

சந்திரன் (1-7-8-12) இந்தஸ்தானங்களில் ஒருவிடத்தில் பாவக்கிரகங்களுடன் சேர்ந்து கேந்திரத்துக்கு நேர்விரோதமான ஸ்தானத்தில் இருந்தாலும், சுபர்கள் நோக்கமில்லாம லிருந்தாலும் அரிஷ்டமுண்டாகும்.

(2-3-5-68-9-11-12) இந்தஸ்தானங்கள்கேந்திரத்துக்குநேர்விரோதமானஸ்தானம்.

க்ஷீணசந்திரன் லக்கினத்திலிருக்க (1-4-7-8-10) ஸ்தானங்களிலே பாவக்கிரகங்களிருந்தாலும் (4-78) ஸ்தானங்களில் க்ஷீணசந்திரனிருக்கப் பாவக்கிரகங்கள் பக்கராசிகளிலிருந்தாலும் அரிஷ்டமாகும்.

மேஷாதி துவாதசராசிகளில் எவ்விடத்திலாகிலும், அந்தியத்தில் என்றால் இராசியினுடைய 26-பாகம் முதல் 30-பாகங்களில் சந்திரனிருந்து பஞ்சம - நவமஸ்தானத்தில் பாவக்கிரகங்களிருந்தாலும், அல்லது சந்திரன் லக்கினமடைந்திருக்க சத்தமத்தில் பாவக்கிரகங்களிருந்தாலும் சிசுவுபிழைக்கமாட்டாதென்று சொல்லவேண்டும்.

சந்திர, அங்காரக, சூரியன், சனி (1-8-9-12) ஸ்தானங்களில் வரிசைக்கிரமாயிருக்க ஒருவருக்கும் குருநோக்க மில்லாதிருந்தாலும், க்ஷீணசந்திரன் (1-5-7-8-9-12) ஸ்தானங்களில் ஒருவிடத்திலிருக்கப் பலவானாகிய சுபக்கிரகங்களாற் பார்வையில்லாமற்போனாலும் அரிஷ்டமாம்.

சத்தமத்திலிருந்த குஜசனிகளுக்கு சுபக்கிரக வீக்ஷண்யமில்லாமலிருந்தாலும், அங்காரகன் லக்கினத்திலிருக்கச் சனி சஷ்டாஷ்டமங்களில் ஒன்றிலிருக்க உடனே மரணமென்று சொல்லவேண்டும்.



சஷ்டாஷ்டமங்களிலிருந்த சந்திரனுக்குப் பாவர்கள் பார்வையிருந்தால் ஒருமாதத்திலும், சுபக்கிரகங்கள் பார்வையிருந்தால் எட்டுவருஷங்களிலும், சுபஅசுப கிரகங்கள் பார்வையிருந்தால் நாலுவருஷத்திலும் எந்தக்கிரகங்களினாலும் பார்வையில்லாமலிருந்தால் ஒருவருஷத்தில் அரிஷ்டமென்றுசொல்லவேண்டும்.

லக்கினாதிபதி சத்தமத்திலிருந்து கிரகயுத்தத்திற் பாபக்கிரகங்களால் வெல்லப்பட்டால் சிசுவுக்கு ஒருமாதத்தில் அரிஷ்டமுண்டாகுமென்க.

சந்திரன் சஷ்டாஷ்டமத்தி லிருந்தாலும் சுக்கிலபக்ஷத்தில் இரவிலும், கிருஷ்ணபக்ஷத்தில் பகலிலும் ஜெனனமானால்அந்தச்சிசுவுக்குப் பாலாரிஷ்டமில்லை.

{ சந்திரசாரத்தைப்பிடித்து அரிஷ்டம் அறிவதெப்படி யென்றால். }

சந்திரன் ஜென்மகாலத்தில் தானிருக்கப்பட்டராசியிலாவது ஜென்மலக்கின ராசியிலாவது அரிஷ்டயோக காரககிரகங்களில் பலமூன கிரகமிருக்கும்படியான ராசியிலாவது பலவானாய் ஒருவருஷத்துக்குள் பாவக்கிரகங்களாற் பார்வையுடைந்து சேருவானே அந்தக்காலத்துக்குள் பாலாரிஷ்ட தோஷமுண்டாகும்.

லக்கினத்தில் சந்திரனும் உபயராசிகளான 2-12-லும்: 7-8 ஸ்தானங்கள் பாவக்கிரகங்களிருந்தாலும் சந்திரனைப்பாபிகள் பார்த்தாலும், தாய்க்கும் பிள்ளைக்கும் அரிஷ்டம். சுபக்கிரகம் வீக்ஷண்யமுண்டானால் சிசுவுக்கு மாத்திரமே அரிஷ்டம்.

சந்திரகிரஹணகாலத்தில் சந்திரன் லக்கினத்திலிருந்து அஷ்டமத்திற் செவ்வாயிருந்தாலும், சூரியகிரஹண காலத்தில்சூரியன் லக்கினத்திலிருந்து சனி, புதன் இருவரில் ஒருவருடன் சேர்ந்திருந்தாலும் அஷ்டமத்தில் அங்காரகனிருந்தாலும் மாதாவுக்கும் சிசுவுக்கும் ஒருசமயத்திலே அரிஷ்டமுண்டாகும்.

சூரிய சந்திரர்களுக்குப் பலவான்களாகிய சுபக்கிரகங்களுடைய திருஷ்டியாவது சேர்ந்தாவது இருந்தால் மேற்சொல்லப்பட்ட யோகபங்கமாய் சேயுந்தாயும் க்ஷேமமடைவார்கள்.

ஜெனனகாலத்தில் சுபக்கிரகம் ஒன்று கிரகயுத்தத்தில் ஜெயமடைந்து சுபக்கிரகங்களால் பார்வைபட்டால் சுபவர்க்கங்களி

லிருந்த பாவக்கிரகங்கள் சுபாம்சவர்க்கங்கள் அடைந்தாலும் சுபக்கிரகங்களால் பார்த்தாலும் குருசட்பலவந்தனாய் லக்கினத்திலிருந்தாலும், லக்கினாதிபதி சட்பலவந்தனாய் பாவக்கிரகம் பார்வையில்லாமல் கேந்திரஸ்தானங்களிலிருந்தால் சுபக்கிரகங்களால்பார்வையிருந்தாலும், சந்திரன் சட்டாட்டமங்களிலிருந்தபோதிலும் குரு, புத, சுக்கிரர்கள் திரேக்காணங்களி லிருந்தாலும், சுபக்ஷேத்திரமடைந்து சந்திரனுக்கு இருபாரிசங்களிலும் சுபக்கிரகங்களிருந்தாலும், குரு, புத, சுக்கிரர்களில் ஒருவர் பாவக்கிரகங்களோடு கூடியிருந்தாலும், சட்பலவந்தனாய் கேந்திரமடைந்திருந்தாலும் சுபக்கிரகங்களான குரு, புத, சுக்கிராள் பூரணச்சந்திரன் சுபக்ஷேத்திர சுபநவாம்ச சுபதிரேக்காண மடைந்தாலும் சகல தோஷங்களும்பரிகாரமாய் மாதுர்பிதுர்களுக்குக்ஷேமமுண்டாம்

ஏலேலசிங்கர்வினா:—ஆயுர்த்தாய மறியும் விதமெப்படி.

திருவள்ளுவர்விடை:—குமரக்கடவுள் திருவாய்மலர்ந்தருளிய குமாரசுவாமியத்திற் சொல்லியிருப்பதை சிலது சொல்லுவோமாக.

லக்கினத்துக்கு 8-ல் க்ஷீணமதியிருக்க 7-ல் சேய்நிற்க லக்கினேசன் பெலயீனமாகி 2-லிருக்கப் பூசம், பூராடம் பிறக்க அமரபக்ஷச்சந்திரன் விருச்சிகத்திலிருக்க 1-7-ல் சனியிருக்க ஜலராசியுதயமாக சுபர் கேந்திரத்திலிருக்க 5-மிடம் கடகமாகி அதிற்சேயிருக்க அமரமதி 6-8-12-லிருக்க 5-9-ல் ரவி - குருகூட அமரமதி கேந்திரிக்கப்பாவர் 8-ல்கூட சுபர் கேந்திரம் விட்டிருக்க வயது நாள் 2-என்பதாம்.

சுபர் 8-லிருக்க சென்மநட்சத்திரத்துக்கு 3-நட்சத்திரத்தில் ரவிமதிகூட இதற்கேழில் ராகுவிருக்க நாள் 3-என்பதாம்.

லக்கினம் மீனமாக ரவி - மதி மூன்றிலிருக்கச் சேய் கடகாம்சமேறில் நாலு நாள் என்பதாம்.

சூரியன் 4-8-லிருக்கச் சுக்கிரன் 5-9-ல் பாவருடன் கூடியிருக்க ஐந்துநாள் என்பதாம்.

மதிக்குஎழில் ரவி சேய்கூட லக்கினேசன் பெலயீனமாகில் ஆறுநாள் என்பதாம்.



மேடமுதல் கன்னிவரையுள்ள ஜென்மலக்கினத்துக்கு 4-மிடத்தில் பாவர்நிற்கினும் அல்லவெனில் துலாமுதல் மீனம்வரைக்கும் மதிக்கு 8-ல் பாவர் நிற்கினும் நாள் ஏழென்பதாம்.

கெண்டாந்தம் பிறக்கப்பாவருடன் மதிகூடச் சென்மலக்கினம் சர்ப்ப முகூர்த்தமாகில் எட்டுநாள் என்பதாம்.

அமாவாசை பிறக்கில் லக்கினம் மிருத்து முகூர்த்தமாகில், ஒன்பதுநாள் என்பதாம்.

8-ல் ரவி 4-ல் சேய் 2-ல் சனி 12-ல் இலக்கினேசனிருக்கில் பத்துநாள் என்பதாம்.

8-ல சனி 5-ல் சேய் இலக்கினத்தில் கேதுவிருக்கில் இருபதுநாள் என்பதாம்.

இரவி, சனிகூடி லக்கினத்திலிருக்க லக்கினேசன் பிலயீனமாகி சேய்பார்க்க ஒருமாச மென்பதாம்.

இரவி, சேய்கூடி ரிஷப, துலாம் எட்டாகில் மாசம் இரண்டென்பதாம்.

இரவியும் இலக்கினேசனும் யுத்தத்திற்கூடில்கிரகங்களினால் அபசெயப்பட்டு 7-ல்இருக்கில் மாசம் மூன்றென்பதாம்.

நாலிற் பானுநிற்க எட்டில் இலக்கினேசனும் இராகுவுமிருக்க மாசம் நாலென்பதாம்.

பூராடத்திற் கேதுவிருக்க அதுவே ஜென்மலக்கினமாகில் மாசம் ஐந்தென்பதாம்.

2-3-8-12-ல் பாவர்நிற்கில் 5-ல் ரவிநிற்க மாசம் ஆறுஎன்பதாம்.

எட்டுக்குடையவனும் சேயுங்கூடி லக்கினத்திலிருக்க லக்கினேசன் பலயீனமாகில் மாசம் ஏழென்பதாம்.

6-8-12-ல் இலக்கினேசனும் இராகுவுங்கூடி யிருக்கில்மாசம் எட்டென்பதாம்.

4-ல் சேய் 8-ல் ராகு 12-ல் சனி யிருக்கில் மாசம் ஒன்பதென்பதாம்.

உதயத்தில் சனியும், எழில் ரவி, மதிசேய்கூட மாசம் பத்தென்பதாம்.

இலக்கினம் மீனமாக 4-ல் கேது 5-ல் சேய் 7-ல் ரவியுமிருக்கில் மாசம் 11-என்பதாம்.

இடபமும். துலாமும் எட்டாகிசேயிருக்க வருடம் ஒன்றென்பதாம்.

மேட, விருச்சிகம் எட்டாகி சனி வக்கிரிக்கச் சேய்பார்க்கில் வருடம் இரண்டென்பதாம்.

மேட, விருச்சிகம் எட்டாகி குருவிருக்க இலக்கினத்திற் குளிகனிருக்க வருடம் மூன்றென்பதாம்.

நாலில் க்ஷீணமதியிருக்க இவனுக்கு 6-ல் இலக்கினேசனிருந்து சேய்பார்க்கில் வருடம்நாலென்பதாம்.

கடகம் 6-8-12-ஆ புதனிருந்து சந்திரனைப்பார்க்க இலக்கினத்தில் சேயிருக்கில் வருடம் 5-என்பதாம்.

5-ல் இராகுவிருக்க பாபர்பிலக்க 4-ல் குருவிருக்கில்வருடம் 6-என்பதாம்.

இலக்கினத்தில் மதி, சேய், சனி, இராகுகூடில் வருடம் 7-என்பதாம்.

இந்து கேதுவைக்கூடி 7-ல் இருக்க 3-ல் பாபரிருக்கில் வருடம் 8-என்பதாம்.

இலக்கினம் சர்ப்பத்திரேக்காணமாக அதில் சனிபாவருங் கூடியிருக்கில் வருடம் 9-என்பதாம்.

இரவி மதி யேழிலிருக்கப் பாபர்பார்க்கில் இலக்கினாதிபதியும் இராகுவுங்கூடியிருக்க ௵ 10-என்பதாம்.

இலக்கினேசனுக்கு 7-ல் கேதுவிருக்க 4-ல் ரவியிருக்க வருடம் 11-என்பதாம்.

இடப, துலாம் ஏழாக அதில் க்ஷீணமதியிருக்க 6-ல் சேயிருக்க வருடம் 12-என்பதாம்.

ரவி, மதி, சேய், சனிகூடில் வருடம் 13-என்பதாம்.

மிதுனங், கன்னி மதிக்குஏழாக அதில் ரவி சேய் கூடில் வருடம் 14-என்பதாம்.

க்ஷீணமதி, தினகரன் சேய்கூடி 5-ல் இருக்கில் வருடம் 15-என்பதாம்,



இலக்கினேசன் பிலஹீனமாகிச் சந்திரனுக்கு 12-லிருக்கில் வருடம் 16-என்பதாம்.

இலக்கினேசன் சந்திரனைக்கூடாமல் பாபமத்தியமாகச்சனி பார்க்கில் வருடம் 17-என்பதாம்,

புதன், ரவி, சேய்கூடில் வருடம் 18-என்பதாம்

புதன், ரவி, சேய் மகராங்கிஷமேறி பாபருடன்கூடில் வருடம் 19-என்பதாம்.

ரவி, புதன் கூடினல் வருடம் 20-என்பதாம்.

மதி சிங்கத்திலிருக்க சேய் சனி 8-லிருக்கச் சுக்கிரன் பார்த்திருக்கில் வருடம் 21-என்பதாம்.

சனி விருச்சிகாங்கிஷமேற ரவி பார்க்கில் வருடம் 22-என்பதாம்.

இலக்கினம் துலாமாக சனியாங்கிஷமேறக் குருபார்த்திருக்கில் வருடம் 23-என்பதாம்.

இலக்கினங் கன்னியாக சனியாங்கிஷமேறப் புதன்பார்த்திருக்கில் வருடம் 24-என்பதாம்.

இலக்கினம் சிங்கமாக சனியாங்கிஷமேறக் குருபார்த்திருக்கில் வருடம் 25-என்பதாம்.

இலக்கினங்கன்னியாக சனியாங்கிஷமேறக்கேதுபார்த்திருக்கில் வருடம் 26-என்பதாம்.

இலக்கினம் மிதுனமாகச் சனியாங்கிஷமேறஇலக்கினேசன் பார்த்திருக்கில் வருடம் 27-என்பதாம்,

உதயம் எட்டுக்குடையவர்கள் ஒருவருக்கொருவர் மாறியிருக்கில் வருடம் 28-என்பதாம்.

இலக்கினம் விருச்சிகமாகி ரவி, குருவிருக்க எட்டுக்குடையவன் ஏழிலிருக்க வருடம் 29-என்பதாம்.

இலக்கினேசனுங் குருவும் உதயத்திருக்க வருடம் 30-என்பதாம்.

7-ல் சேயிருக்க சனி இலக்கினேசனைக்கூடில் வருடம் 31-என்பதாம்.

இலக்கினேசன் 6-8-12-லிருக்கில் வருடம் 32-என்பதாம்.

8-க் குடையவன் பிலக்க 1-க் குடையவன் பிலஹீனமாக 5-ல் இராகுவிருக்க அதற்குடையவன் திசையிற்பிறக்கில் ரவிக்கு இலக்கினேசன் சத்துருவாக சனியும் 1-5-8-10-க் குடையவர்க ளும் சுபர்களும் பிலஹீனமாகில் பாபர்பிலக்கில் 1-5-8-ல் பாபரி ருக்கிலும் அற்பாயுசு என்பதாம். இவை அல்லாதவை யெல்லாம் தீர்க்காயுசு இவையிரண்டும் கூடிக்கலக்கில் மத்திம ஆயுசென்றறி யவும்.

ஏலேலசிங்கர்வின:—பாவகம்பனிரண்டின் விபரமென்ன.

திருவள்ளுவர்விடை:—முதலாவது.

இலக்கினபாவகம்.

இலக்கினத்துக்கு 6-8-12-ஸ்தானத்துக் கதிபதியாகிய கிரக ங்கள் லக்கினத்திலிருந்தாலும் அந்த லக்கினாதிபதி 6-8-12-லிருந் தாலும் அந்தப்பாவகம் க்ஷீணமடையும்.

பாவாதிபதிலக்கினத்திலிருந்தாலும்கேந்திரகோணலாபஸ்தா னத்திலிருந்தாலும் அல்லது அந்த லக்கினத்துக்கு 5-9-11-இந்த ஸ்தானங்களிலிருந்தாலும் பாவகம் விருத்தியடையும்.

பாவாதிபதி லக்கினத்திலிருந்தால் மிகவும் விருத்தியுடைய வன்.

இந்தக் கிரகங்கள் ஸ்தானபலம், கிரகபலம், சுபபலமடைந் திருக்குமளவில் ஷ திசையந்தரம் கொரேகிரகங்களின் புத்தி யினாலாவது சத்துரு கிரகங்கள் அந்தரபுத்திகளிலாவது கோசர ரீதியாய் அந்தந்தக்கிரகங்கள் கெட்டபலன் கொடுக்கக்கூடியதாயி ருந்தபோதிலும் பாவங்களுக்கு லோபமில்லாமல் ஜாதகன் நல்ல பலனையடைவன்.

1-2-9-10-ஸ்தானாதிக ளென்றால் இலக்கின தனபாக்கியராஜ் ஜியாதிபதிகளில் இருவருக்காவது இன்னும் விசேஷமானவர்க ளுக்காவது ஒருவருடன் ஒருவர்சேர்ந்து மந்தக்கிரகம்முன்னாலே சீக்கிரகிரகம் பின்னிட்டிருக்குமாகில் பாக்கியசாலியெனச்சொல் லவேண்டும்.



1-6-8-ஸ்தானாதிபதிகள் இலக்கினம் மூன்று - எட்டு ஸ்தா னாதிபதிகளுக்கு மேற்சொல்லிய யோகங்கள் கட்டினால் தரித்திர ஜாதகமென்க.

சனி, புதன், கேது 2-5-7-லிருந்தால் வீரியபலமில்லாதவ னென்று சொல்லவேண்டும்.

லக்கினத்தில் சனி திரேகாணமடைந்து அதிற் சனி, செவ் வாய், ராகு விருந்தால் முடவனென்றும், சூரியன், செவ்வாய், சந்திரன்-4-6-8-12-ஸ்தானங்களிலே ஒரு இடத்தில் கூடியிருந்து பாவக்கிரகங்களாற் பார்க்கப்பட்டிருந்தால் செவிடனென்றும், இரண்டுக்குடையவன் நீசஸ்தானமடைந்து (3-6-8-12)ஸ்தானங் களில் குரு சந்திரனுடன் எவராவது கூடியிருந்தால் ஊமையென் றுசொல்லவும்.

ஏலேலசிங்கர்வின:—ரவியாதிகிரகங்கள் இலக்கினத்திலிருக்கப் பிறந்தவனுடைய சுபாவங்களென்ன.

திருவள்ளுவர்விடை:—மேஷ, சிம்ம, துலாம், கடகம் இதுகளி லொருலக்கினமாகி அதில் சூரியனிருந்தால் மேஷத்துக்குத் தனம், கண்ணழகு, சிங்கத்துக்கு, மாலைக்கண். துலாத்து க்கு, குருடு, தரித்திரம், கடகத்துக்குக் கண்ணிற்பூவும் சொல்லவேண்டும்.

மற்றது லக்கினமாகஅதிற் சூரியனிருந்தால்வீரமும், வேலை களில் தாமதமும், நேத்திரவிரோதமும், கடினமானமனமுமுடை யவர்களென்று அறியவேண்டும்.

சந்திரன் கடகலக்கினத்திலிருக்கப் புத்திரசந்தானமும், தன விருத்தியும், ஐஸ்வரியமும், மற்றலக்கினத்தில் சந்திரனிருந்தால், ஊமைத்தனமும், உன்மத்தமும், கொரேமும், செவியடைப்பும் உண்டாகும். செவ்வாயிருந்தாற் சரீரத்திற் காயமும், புதனிருந் தால் பாண்டித்தியமும், சுக்கிரனிருந்தால் காமமும்,

துலாம், தனுசு, மீனம், மகரம் இதுகளில் ஒரு லக்கினமாய் அதில் சனியிருந்தால் கிராமாதிபதியாயும் அழகுள்ளவனாயும் பாண்டித்ய முள்ளவனுமிருப்பன்.

மற்ற ராசிகளிலொன்று லக்கினமாய் அதிற் சனியிருந்தால் தரித்திரமும், ரோகமும், உடையவனா யிருப்பன்.

## 2-வது துதிகாபாவகம்.

துதியாதிபதி நீசராசியையடைந்து சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு வாதரோகத்தினால் வாக்கு விகாரப்பட்டு ஊமையாகி குளறிப்பேசுதல் முதலியது சம்பவிக்கும்.

நட்பாக்ஷி மூலத்திரிகோணங்களி லிருந்து சுபர்களாகிய குரு சுக்கிரன், பூரணச்சந்திரனால் பார்க்கப்பட்டால் வாக்குப்பிரபலமுடைய வித்வசபையில் உபந்நியாசம் செய்யச்சமர்த்தன். தைரியம். சாமார்த்தியகாரகர்களாகிய இராகு குஜனோடு (அல்லது) துதியாதிபதியோடு சம்பந்தப்பட்டால் ஜாதகன் நிரந்தரம் பயமில்லாதவனாயிருப்பான்.

1-2-ஸ்தானாதிபதிகள் சந்திரனோடு கூடினாலும் 6-8-12-இடத்திலிருந்தாலும்; 1-2-7-ஸ்தானம் இதுகளில் எங்கேயாவது ஓரிடத்தில் சூரியன், சந்திரன் இருந்து சனி குஜனாற் பார்க்கப்பட்டாலும், 2-6-ஸ்தானங்களில் வரிசையாய் சனியும், லக்கினாதிபதியிருந்தாலும் 3-12-ல் பாவர்களிருந்தாலும் மகரலக்கினத்தில் சூரியன், சந்திரன் இருந்து சத்துரு கிரகங்கள் பார்த்தாலும் சேர்ந்திருந்தாலும் நேத்திரங்களுக்குத் திருஷ்டியில்லையென்று சொல்லவும்.

1-2-ஸ்தானங்களில் குரு, சந்திரனிருந்து பலசாலியானபாவர்கள் பார்க்காமலுமிருந்தால் நேத்திரம் பிரகாசமென்றுசொல்லவும்.

1-2-9-10-11-ஸ்தானாதிபதிகள் சுபக்கிரக சம்பந்தமாய் கேந்திரதிரிகோணங்களி லெங்கேயிருந்தாலும் மேலான தனவந்தனாகும் ஜாதகமென்க.

2-க் குடையவன் புதனுடன்சேர்ந்து கேதுவாற் பார்த்தாலுங் கூடினாலும் பொன்னும், ரத்தினமுங் கிடைக்குமென்று சொல்லவும்.

ஏலேலசிங்கர்வினா:—ரவியாதி கிரகங்கள் இரண்டாமிடத்திலிருந்தால் கொடுக்கும்படியான பலன்களென்ன,



திருவள்ளுவர்விடை:—சூரியன், செவ்வாய், சனி இவர்களில் யாராவது 2-மிடத்திலிருந்தால் தனவிருத்தி, முகரோகமும் சந்திரனிருந்தால் குடும்பசவுக்கியமும், செவ்வாயிருந்தால் மிதமான சாப்பாடும், புதனிருந்தால் தனசம்பத்தும், குரு, சுக்கிரனிருந்தால் வாக்கு உதாரமும் உண்டாகும்.

## 3-வது திரிதிகாபாவகம்.

எந்தக்கிரகங்களும் லக்கின பஞ்சம நவம கோணாதிபதிகளானால் சுபபலன்களையே கொடுப்பார்கள்.

3-6-8-12க் குடையவர்கள் அசுபபலனைக்கொடுப்பார்கள்.

சூரியன், சந்திரன் தவிர மற்றகிரகங்கள் யாவரும் 2-ஸ்தானங்களுக்கு அதிபதிகளாகையால் ஒரு ஸ்தானாதிபத்தியம் சுபமாயும் மற்றொருஸ்தானாதிபத்தியம் அசுபமாயும் இருக்கலாம்.

சுக்கிரன், செவ்வாய்க்கு, ரிஷபம், விருச்சிகம் லக்கின சட்டாட்டமபத்தியமும், கன்னியா லக்கினத்துக்கு சனிக்குபஞ்சம சட்டமாதி பத்தியமு மிருக்கின்றபடியால் குஜனுக்கு லக்கினாதிபத்தியத்திலும், சனிக்குப் பஞ்சம கோணாதிபத்தியத்திலும் உண்டாகும் ஒருவிதமாக அவாள் சுபர்களானாலும் சட்டாதிபத்திய தோஷத்தினால் அசுபபலன்விசேஷமாய்க் கொடுக்கமாட்டார்கள் இரண்டு விதத்திலும் அசுபர்களாய் அந்தலக்கினத்துக்கு சுபர்களாயிருந்தாலும் பாபபலன்களைக் கொடுப்பார்கள்.

துலாம் மேடலக்கினமாகில் குரு, புதனுக்கு திரிதிக சட்டாதிபத்தியமும் கன்னியா மீனலக்கினமாகுங்கால் குஜ சுக்கிரனுக்கு திரிதிகாபத்திய முண்டாவதால் மேற்சொன்ன கிரகங்கள் பலவான்களானபோதிலும் சுபபலன் கொஞ்சமுங் கொடுக்கமாட்டார்கள்,

ஏலேலசிங்கர்வினா:—ரவியாதி கிரகங்கள் திரிதிகா வீட்டிலிருந்தால் கொடுக்கும்படியான பலன்களென்ன.

திருவள்ளுவர்விடை:—சூரியன், செவ்வாய், சனிக்கு புத்தியுத்தி பராக்கிரமும், சந்திரனுக்குப் பிராணஇம்சையும், புதன் துன்மார்க்கமும், குருசுக்கிரனுக்குத் துர்க்குணமுமுண்டாகுமென்றறியவேண்டியது.

## 4-வது சதுர்த்தபாவகம்.

கேந்திரஸ்தான மென்னப்படும் (1-4-7-10) ஸ்தானங்கள் சுபக்கிரகங்களான குரு சுக்கிர பூரணசந்திரர்களுக்குக் கேந்திரஸ்தானபத்திய தோஷமெனச் சொல்லப்படும். பாவிகளுக்கு இந்தஆதிபத்தியம் சுபகரம் எல்லாக்கிரகங்களுக்கும் கேந்திரஸ்தானங்களிருக்கிறது சுபம். சுபக்கிரகங்களுக்கு (1-4-7-10) ஸ்தானங்களுக்கு அதிபதியான காலங்களிலும் சுபபலன்களும் அதிபதியல்லாமல் அந்த ஸ்தானத்திலிருந்தால் அசுபபலன்களும் கொடுப்பார்களெனத் தெரியவேண்டும்.

இரண்டாமிடம் வாக்குஸ்தானமாகவும், நாலாமிடம் வித்தியாஸ்தானமாகவும், ஐந்தாமிடம் புத்திஸ்தானமாகவும் சொல்லப்படுமாகையால் இந்த வீட்டுக்குடையவர் வாக்கு, வித்தை, புத்திகாரர்களுடன் சுபயோக முண்டாகி பலவானாயிருந்தால் ஜாதகன் தக்கபண்டிதன். இந்தஸ்தானாதிபதிகளில் பலவானான கிரகத்தைப் பிடித்து எந்தவித்தையில் பாண்டித்யமென்று அறியவேணும்.

ஏலேலசிங்கர்வினா:—எந்த வித்தையில் பாண்டித்யமென எப்படி அறிவது.

திருவள்ளுவர்விடை:—சூரியன் பிலவானாகில் வேதாந்தம், ராஜவித்தையும், சந்திரன் பிலவானாகில் வியாகரணசாஸ்திரமும் செவ்வாய் பிலவானாகில் தர்க்கநியாய தண்டநீதி யுடையவனும், புதன் பிலவானாகில் கணிதசாஸ்திரமும், குரு பிலவானாகில் சுருதிசப்தசாஸ்திரமும், சுக்கிரன்பிலவானாகில் காவியநாடக அலங்காரசாகித்யமும், சனிபிலவானாகில்நீசபாஷையும் வருமெனச் சொல்லவேண்டியது.

நாலுக்குடையவனோடு லக்கினம் ஒன்பது பத்துக்குடைய ● பரிவர்த்தன யோகமிருந்தால் வாகனவிருத்தி யுண்டாகும். பாக்கிய ராஜ்யாதிபதிகள் வாகனஸ்தானாதிபதியையாவது வாகனஸ்தானத்தையாவது பார்த்தால் வாகனயோகவானென்று சொல்லவும். சட்பல சகிதமான வாகனஸ்தானாதிபதிக்கு மேற்கண்டஸ்திதியிருந்தாலும் ரதம், பல்லக்கு யோகமெனச்சொல்லவும்.

● பரிவர்த்தனம் என்பது அவன்வீட்டில்இவனும், இவன்வீட்டில்அவனுமிருப்பது.



பாக்கிய ராஜ்ஜியாதிபதிகள் நாலாமிடத்திலிருந்து க்ஷேத்திரகாரகனான குஜனால் பார்க்கப்பட்டால் பூமிலாபம். புதன்பலவானாய் நாலாம் வீட்டிலிருந்து சுபர்கள் பார்க்கப்பட்டால் கிராமாதிகளில் பூமி, ராஜ்ஜியம் சம்பாதிப்பானென்று செல்லவும். புதன் பலவானாய் 4-ம் வீட்டுக்கு விரையத்திலிருந்தால் 6-க்குடையவன் பார்த்தாலும், கூடியிருந்தாலும், இருந்த பூமிகளும் போய்விடுமென்று சொல்லவும்.

நாலுக்குடையவன் லாபஸ்தானத்திலிருந்து லாபாதிபதியால் பார்த்தாலும் பந்து மாதுர்வாகனம் சவுக்கியமென்றுஞ் சொல்க.

நாலுக்குடையவன் மேற்சொன்ன இருவர் சம்பந்தமுண்டான போதைக்கும் பாவக்கிரகங்கள் திசாபுத்திகளில் மாதுர்காரகன்திசையில் மாதுர்மாரகமெனச் சொல்லவும்.

இப்படி யுண்டாகாத பக்ஷத்தில் பாவக்கிரகங்கள் அந்தரபத்தியில் மாதுர்மாரகம் சொல்லவும்.

## பஞ்சமபாவகம்.

புத்திரஸ்தானத்து அதிபதி புத்திரகாரகனாகிய பிரகஸ்பதி குடும்பாதிபதி இந்த மூன்றுபேர்களால் புத்திரபாவகத்தை யறியவேண்டும். இதற்கு அஞ்சில் சுபர்களிருந்தால் சுபத்தைக்கொடுக்கும். கிரகபாகத்தில் புருஷஸ்திரீயென்று பாகிக்கப்பட்டதுஎன்றதினால் புத்திரஸ்தானாதிபதி புருஷகிரகமோ? ஸ்திரீகிரகமோ அவாள் இருக்கப்பட்டஇராசி புருஷராசியோ ஸ்திரீராசியோ கண்டறிந்து பாகக்குறிப்புப்படி சந்தானத்தை ஜாதகருக்கு நிர்மாணஞ்செய்யவேண்டும்.

லக்கினாதிபதி, பஞ்சமாதிபதி இவர்கள் கூடியிருந்தாலும் அல்லது பரிவர்த்தன மேறியிருந்தாலும் பஞ்சமாதிபதி பலம் பெற்றிருந்து புத்திரகாரகனாகிய பிரகஸ்பதியுடன் கூடியிருந்தாலும் பார்க்கப்பட்டாலும், அச்குருவே ஒன்பதாம் வீட்டைப்பார்த்தாலும் சந்தான முண்டாகுமென்று திட்டமாய்ச் சொல்லவும்.

புத்திரஸ்தானத்தில் சூரியனிருந்தால் ஒரு புத்திரனும், செவ்வாயிருந்தால் இரண்டுபுத்திரனும், குருவிருந்தால் குணவானாக நான்குபுத்திரனும், பெறுவார்கள்.

பஞ்சமஸ்தானாதிபதி புருஷகிரகத்துடன் சேர்ந்தால் புருஷ சந்தானமும், ஸ்திரீகிரகத்துடன் சேர்ந்தால் ஸ்திரீசந்தானமும் முதலிற் பெறுவார்.

1-2-5-ஸ்தானாதிபதிகள் 6-8-12-ல் இருந்து அதற்கு இரண்டுபக்கத்திலும், சத்துருக் கிரகங்களிருந்து புத்திரஸ்தானாதிபதி குருவுக்கு விரையத்தில் சத்துரு க்ஷேத்திரத்திலாவது நீசமடைந்தாவது இருந்தால் சந்ததனமுண்டாகாதென்று சொல்லவேண்டும்.

புத்திரஸ்தானத்தில் சனியிருந்தால் பெற்றமக்களை யிழப்பார்களென்று சொல்லவும்.

புத்திரஸ்தானாதிபதி சனியுடன்கூடி பாதசாரத்துக்கு முந்தியிருந்தால் தெத்துப்புத்திரனுண்டென்று சொல்லவேண்டும்.

குஜன் லக்கினகுருவுக்கு 5-லிருந்தால் குருமகாதிசையில் செவ்வாய் புத்தியில் புத்திரசோகமுண்டாகுமென்றுசொல்லவும்

இதுவரையில் சொல்லிவந்த பாகத்தில் சுபர்களிருந்தால் அந்த பாவங்களுக்குச் சுபபலனே சொல்லப்பட்டிருக்கின்றது. இதற்குமேல் சட்டமபாகத்தில் அதற்கு எதிரிடையாய்ச்சொல்லவேண்டும்.

---

## சட்டமபாவகம்.

ஆறும் வீட்டில் சுபர்களிருந்தால் ருணவிருத்தி, சத்துருவிருத்தி, வியாதி, கலகம், கஷ்டம் முதலிய அசுபபலன்களைக் கண்டறிந்து பலன்சொல்லவேண்டும். பாவக்கிரகங்களிருந்தால் மேற்சொல்லியபலன்களுக்கு எதிரிடையாய்ச் சொல்லவேண்டும்.

சட்டமாதிபதி பாவக்கிரகமாய் ஒன்பதாம் வீட்டிலிருந்தால் சத்துருவுடைய கஷ்டமும், உச்சமடைந்திருந்தால் பங்காளிகள் பாதைவிசேஷமாய்ச் சொல்லவேண்டும்,



சட்டமாதிபதி விரையாதிபதியோடுகூடி சனியால் பார்க்கப்பட்டால் மூத்திரக்கிருஷ்ணமும் சனி, குஜன், ராகு, மூன்றிலிருந்து சட்டமாதிபதியால் பார்க்கப்பட்டால் அண்டரோகமும், அட்டமத்தில் குருவிருந்தால் தீர்க்கவியாதியும், புதனிருந்தால் பித்தவிகாரமும், சுக்கிரனிருந்தால் சுககஷ்டங்களைச் சொல்லவேண்டும்.

---

## சத்தமபாவகம்.

களத்திரஸ்தானம் அதற்கதிபதி களத்திரகாரகனானசுக்கிரன் இந்த மூன்றுபேர்களைக்கொண்டே களத்திரபாவகம் பார்க்கவேண்டும்.

களத்திரஸ்தானாதிபதி சட்பலவந்தனாய் சுபவர்க்கங்களைப் பெற்று சுபர்களாற் பார்க்கப்பட்டால் அழகுள்ள மனைவிகிடைப்பாள்.

களத்திரஸ்தானத்தி லிருக்கப்பட்ட பலம்பெற்ற கிரகத்துடைய சுபாவமறிந்து களத்திரத்தினுடைய குணரூபங்களைக்கண்டறியவேண்டும்.

களத்திரஸ்தானாதிபதி சுக்கிரனுக்கு வியத்திலிருந்துசத்துரு க்ஷேத்திரமடைந்தாலும் நீசமடைந்தாலும்களத்திரஹானியென்று சொல்லவேண்டும்.

களத்திரகாரகன் சட்டமஸ்தானத்திலும் லக்கினத்திலும் சத்துருக்ஷேத்திரத்திலு மிருந்தால் புருஷன் பெண்சாதிக்கு நிரந்தரம் சட்டாட்டமாய்ச் சண்டைசச்சரவாக இருக்கும்.

சுக்கிரன் 12-மிடத்தில் அஸ்தமனமடைந்திருந்தால் ஸ்திரீ மூலமாக நிந்தைகளேற்பட்டு அதைநிவர்த்தி செய்துக்கொள்ள விசேஷதிரவியம் விரையமாகும்.

சுக்கிரன் க்ஷேத்திரமாகிய ரிஷப துலாம் லக்கினத்துக்குக் கேந்திரதிரிகோணமாய் அதில் குருபலம் பெற்றிருந்தால் ஜாதகனுடையமனைவி பதிவிரதையாயிருப்பாள்

களத்திரஸ்தானாதிபதி ராகுவுடன்கூடி பாவர்களால் பார்க்கப்பட்டு லக்கினாதிபதிக்கு பாவயோகமடைந்தால் ஜாதகன் விபசாரியாவான்.

சத்தமாதிபதி பாவக்கிரகங்களுடன்சேர்ந்து பலபீனமான கிரகராசியி லிருந்தால் 2-களத்திரமென்று சொல்லவும்.

குஜன் சுக்கிரனுக்கு சட்வர்க்கத்தில் சட்வர்க்கயோகமுற்றிருக்கினும், அல்லது அவர்கள் சனிவீடுகளில் மகரகும்பத்திலிருந்து சனியாற் பார்க்கப்பட்டாலும் சேர்ந்திருந்தாலும்,ஜாதகன் மனைவி விபசாரியாவாள்.

சூரியன் முதலிய கிரகங்களின் நட்பத்தையறிந்து இன்ன ஜாதியானிடம் இருப்பாளென்று சொல்லவேண்டும்.

## அஷ்டமபாவகம்.

ஜெனனகாலத்தில் இந்த ஸ்தானத்தில் கிரகங்க ளில்லாமல் இதைப்பார்க்கப்பட்ட கிரகங்களில் எந்தக்கிரகம் பலமோ? அதையறிந்து அந்தவியாதியினுல் மரணமடைவானென்று சொல்லவேண்டும்.

எப்படியெனில்:—

சூரியன் பித்தம், சந்திரன் வாத சிலேட்டுமம், செவ்வாய் பயித்தியம், புதன் வாத பித்த சிலேட்டுமம், குரு சிலேட்டுமம், சுக்கிரன் ஸ்திரீரோய்கள். சனி வாதம்.

காலபுருஷனுக்கு அங்கபாகங்களில் அஷ்டமஸ்தானராசி எந்த அவயவங்களாகச் சொல்லப்பட்டதோ அதில் பலமான கிரகத்தின் வியாதி சுபாவத்தினுல் வியாதிபிறந்து மரணமடைகுவான்.



| இராசியங்கம். | கிரகாங்கம். |
|---|---|
| மேஷம் - தலை | சூரியன் - சிரசு |
| ரிஷபம் - முகம் | சந்திரன் - முகம் |
| மிதுனம் - கழுத்து | செவ்வாய் - மார்பு |
| கடகம் - தோள் | புதன் - இடைமுதுகு |
| சிம்மம் - மார்பு | குரு - வயிறு |
| கன்னி - பக்கம் | சுக்கிரன் - ஆண்குறி, அரை |
| துலாம் - முதுகு, வயிறு | சனி - துடை |
| விருச்சிகம் - பீஜம் | இராகு - கைகள் |
| தனுசு - துடை | கேது - கால்கள் |
| மகரம் - முழந்தாள் | |
| கும்பம் - கணுக்கால் | |
| மீனம் - பாதம் | |

ஆக ராசி 12-க்கு அங்கம் 12.

சூரியன், அங்காரகன், கிரமமாய் 10-4-லிருந்தால்மலைமேல் அடிபடுவன்.

சனி, சந்திரன், செவ்வாய், கிரமமாய் 4-7-10-ல் இருந்தால் கிணற்றில் விழுந்துசாவான்.

சந்திரன், சூரியன் கன்னியிலிருந்துபாவக்கிரகங்களாற்பார்க்கப்பட்டால் பந்துக்களாலும் அவர் உபயலக்கினத்திலிருந்தால் நீரில் முழுகும்போது மரணமடைவன்.

லக்கினுதி, சூரியன் இருவரும் அதிமித்திரர்களாயிருந்தாலும், பாவக்கிரகங்கள் 3-6-8-லிருந்தாலும் அட்டமாதிபதி உச்சமடைந்தபோதிலும், சொட்சேத்திர மடைந்தபோதிலும் பலவானயிருந்தபோதிலும் சுபக்கிரகங்களான குரு, சுக்கிரன், புதன் கேந்திரகோணத்தி லிருந்தாலும் லக்கினுதிபதி கேந்திரகோணத்தில் சட்பல சகிதனுயிருந்தாலும் இராகு 3-6-12-லிருந்தாலும் பூரணயுசு என்றுசொல்லவும்.

70-முதல் 120-வரை பூரண ஆயுசு.

5-9-ல் சூரியன் நவமஸ்தானதிபதி யிருந்து அஷ்டஸ்தானதிபதிகளுடனுவது சத்துருபாவக் கிரகங்களுடனுவது சம்பந்தம்

பெற்றிருந்தால் கெர்ப்பத்திலிருக்கும் போதேபிதாசென்றுபோனானென்று சொல்லவும்.

நவம்-பாக்கியஸ்தானமாகவும், தசம்-ராஜ்ஜியஸ்தானமாகவும் சொல்லவேண்டும் இந்த ராஜ்ஜியபாக்கியஸ்தானாதிபதிகளுக்கு ● துஸ்தானாதிபதியாகவும் பரிவர்த்தனயோக மென்றால் ராஜ்ஜியாதிபதி பாக்கியஸ்தானத்திலும், பாக்கியாதிபதி ராஜ்ஜியஸ்தானத்திலும், இருந்தாலும் சரராசியிலிருந்தாலும் இராஜயோகமுண்டாம்.

கிரகங்களுக்கு ஸ்தானம் இரண்டேற்பட்டிருப்பதால், ஒரு ஸ்தானம் இராஜ்ஜியபாக்கியமாக இருந்தால் 3-6-8-11-12-இதுகளிலொன்றாகவரும் இராஜ்ஜிய பாக்கியாதிபதி பரிவர்த்தனயோகமில்லாதபோது துஸ்தானாதிபதிகள் தோஷத்தினால்யோகம்கெட்டுப்போகும். இராஜ்ஜியபாக்கியாதிபதிக ளிருவருஞ்சேர்ந்து ராஜ்ஜியஸ்தானத்தி லிருந்தால் இராஜயோகமே சொல்லவேண்டும்.

பாவக்கிரகங்கள் சம்பந்த துஸ்தானாதிபதிகள்தோஷத்தினால் இராஜயோகம் பங்கமுண்டாகும்.

### நவமபாவகம்.

அதிர்ஷ்டம், பாக்கியம், குரு, தந்தை, தெய்வம் முதலியவைகள் ஒன்பதாவது வீட்டைப்பிடித்தே பார்க்கவேண்டும்.

நவமஸ்தானத்துக்கும் நவமாதிபதிக்கும் சுபமடைந்தால் ஜாதகன் அதிஷ்டசாலியென்று சொல்லவும்.

நவமஸ்தானாதிபதிக்கு சுபத்துவமுண்டானால் ஜாதகன் அதிஷ்டமுடையவனென்றுதெரிந்துக் கொள்ளவும்.

நவமஸ்தானாதிபதிக்கு சொட்சேத்திரம் மித்துரு மூலத்திரிகோணத்திலிருந்தால் ஜாதகன் தருமகுணமுடையவனாய் தன்தகப்பனுக்குக் கீர்த்தியை யுண்டாக்குவான்.

லக்கின சதுர்த்த நவமாதிபதிகள் லாபமடைந்து இருந்தால் பாக்கியவந்தனாவான்.

4-9-10-ல் சுபசம்பந்தமுண்டானால் ஜாதகன் அஷ்டஐஸ்வரியவந்தனாய் சர்வசுகங்களையும் அனுபவிப்பான்.

● துஸ்தானமென்பது(3-6-8-11-12.)



இராஜயோக காரக கிரகங்களுடைய ஸ்தானபலன்களையறிந்து யோகபரிமாணம் இவ்வளவென்று அறியவேண்டும்.

எப்படியென்றால்:—

உச்சத்தானத்திருந்தகிரகம் - சம்பூரணபலனைக்கொடுப்பர்
மூலத்திரிகோணத்திலிருந்தகிரசம் - முக்காற்பலமும்
சொட்சேத்திரத்திலிருந்தகிரகம் - அரைப்பலமும்
மித்துருக்ஷேத்திரத்திலிருந்தகிரகம் - காற்பலமும்
சத்துருக்ஷேத்திரத்திலிருந்தகிரகம் - அரைக்காற்பலமும்
கொடுப்பார்கள். நீசமடைந்தாலும் அஸ்தமனமடைந்தாலும் எவ்வளவும் சுபபலன்களைக் கொடுக்கமாட்டார்கள்.

இனி அசுபபலனைச் சொல்லுவோம் கேட்பாயாக:—

அஸ்தங்கதமானாலும், நீசராசியாயிருந்தாலும் சம்பூரணமான அசுபபலன்களையும், சத்துரு க்ஷேத்திரத்திலிருந்தால் முக்கால் பாகமும், மித்துருக்ஷேத்திரத்தி லிருந்தால் அரையாகவும்சொட்சேத்திரத்திலிருந்தால் காலாகும், மூலதிரிகோணத்திலிருந்தால் சொற்பமான அசுபபலன்களையுங் கொடுப்பார்கள் உச்சத்திலிருந்தகிரகம் அசுப்பலன்களை யணுவளவுங் கொடுக்கமாட்டாது.

ஏலேலசிங்கர்வினா:—சுபபலனுக்கு உதாரணமேதாவதுண்டா?

திருவள்ளுவர்விடை:—உண்டு. மேஷலக்கினமாய் பாக்கியராஜ்ஜியாதிபதிகளாகிய குரு, சனிகள் துலாராசியிலிருந்தால் பலன்களைச் சொல்லவேண்டிய விதமாவது,

